
# தமிழரசு

1-12-1992 ரூ.1









சிவகங்கை இராமச்சந்திரனார்

தோற்றம்:
16.9.1884

மறைவு:
26.2.1933

பூவையர் மகிழும் வண்ணம்
புதுமைகள் படைத்திடும் கதர்பட்டுப் புடவைகள்
அணியும் அழகே ஓர் ஆனந்தம்




DIPR/2687/MS/92/CHARI

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108

# இந்த இதழில்...


போர்க்கால அடிப்படையில் நிவாரணப் பணிகள் ... 2

தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் உரை ... 6

1993-'94-ஆம் ஆண்டுக்கான தமிழகத் திட்டத்துக்கு ரூ.2,101 கோடி ஒதுக்கீடு ... 9

"நீங்க நல்லா இருக்கனும்" ... 11

முடி திருத்துவோர் கூட்டுறவுச் சங்கம் ... 16

கூட்டுறவு (கவிதை) ... 17

மூதறிஞர் இராஜாஜி ... 18

சிவகங்கை இராமச்சந்திரனார் ... 24

வெளிநாடுகளில் வேலை வாய்ப்புப் பெற ... 29

மக்கள் நல்வாழ்வுத் துறை —மாண்புமிகு முதல்வர் ஆய்வு ... 33

கூட்டுறவுத் துறையின் மாநிலத் தொடக்க விழா ... 36

வீராங்கனை ருக்மிணி லட்சுமிபதி ... 37

மக்கள் கவிஞன் பாரதி ... 40



# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2023

கார்த்திகைத் திங்கள் - 16

மலர்:23 இதழ்:11

1-12-1992


மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களுடன் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் பேச்சு வார்த்தை நடத்தி உடன்பாடு கண்டனர் (26.11.'92).



# போர்க்கால அடிப்படையில் நிவாரணப் பணிகள்:

# தமிழக வெள்ளப் பகுதிகளைப் பார்வையிட்டு முதல்வர் உதவி

# ரூ.530 கோடிக்கு வெள்ளச் சேதம்; பிரதமருக்கு முதல்வர் கோரிக்கை

**வ**ங்கக் கடலில் 11.11.92 அன்று உருவான புயல், தமிழகத்தின் தென் மாவட்டங்களில் பயங்கர மான விளைவுகளை ஏற்படுத்தி விட்டது. தமிழகத்தில் பன்னிரண்டு மாவட்டங்களில் குறிப்பாக, கன்னியாகுமரி, இராமநாதபுரம், மதுரை, திண்டுக்கல்-அண்ணா, மாவட்டங்களில் கோரமான சம்ப வங்களை ஏற்படுத்தி அகில இந்தியா வையும் உலுக்கிவிட்டது. இப் புயலின் சீற்றத்திற்கு 230 பேர் பலியாயினர்.

தமிழ்நாட்டை நோக்கி 11.11.92 அன்று பிற்பகல், நாகப்பட்டினத் துக்குத் தென்கிழக்கே 650 கிலோ மீட்டர் தூரத்தில் புயல் மையம் கொண்டிருந்தது. இந்தப் புயல் 12.11.92 அன்று பிற்பகல் 2.30 மணிக்கு இலங்கையைத் தாக்கி விட்டு, தமிழ்நாட்டை நெருங்கியது. இராமேஸ்வரம், இராமநாத புரத்தில் கடலில் கொந்தளிப்பு ஏற்பட்டது. பலத்த சூறாவளிக் காற் றுடன் மழை கொட்டியது. தென் மாநிலக் கடலோர மாவட்டங் களான தஞ்சாவூர், நாகப்பட்டினம்-காயிதே மில்லத் , புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிதம்பரனார், நெல்லை-கட்டபொம்மன், கன்னியா குமரி ஆகிய மாவட்டங்களில் பலத்த மழை பெய்தது. இராமேசு வரத்தில் சூறாவளிக் காற்றுடன் அடைமழை கொட்டியது.சூறாவளிக் காற்று வீசியதால் இராமேசுவரம் கடற்கரையில் இருந்த ஏராளமான மீனவர்களின் குடிசைகள் காற்றில் பறந்தன. மரங்கள் வேரோடு சாய்ந் தன. வழக்கமாக அமைதியாக இருக் கும் இராமேசுவரம் கடலில் 20 அடி உயரத்துக்கு ராட்சத அலைகள் எழுந்தன.

**காவல் துறையினரின் எச்சரிக்கை**

இராமேசுவரம் கடலில் ஏற்பட்ட கொந்தளிப்பைத் தொடர்ந்து பாம்பன், மண்டபம், தங்கச்சி மடம் ஆகிய பகுதிகளில் போலீசார் ஒலி பெருக்கி மூலம் 'மன்னார் கடல் பகுதியைப் புயல் இரவில் கடக்கும். 60 கிலோ மீட்டர் வேகத்தில் பலத்த காற்று வீசும், பலத்த மழை பெய் யும், மீனவர்கள் மீன்பிடிக்கக் கடலுக்குப் போகக் கூடாது' என எச்சரித்தனர்.

**மீனவர்கள்**

தனுஷ்கோடி முகுந்தராய புரம் ஆகிய பகுதிகளில் உள்ள 1000 மீனவர்கள் 8 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள முகுந்தராய சத்திரத் துக்குக் கொண்டுவரப்பட்டு, பள்ளிக் கூடங்களில் தங்க வைக்கப்பட்டனர். நாகை, வேதாரண்யம் கடலிலும் கொந்தளிப்பு ஏற்பட்டது. கடலில் ராட்சத அலைகள் எழும்பின. நாகை துறைமுகத்தில் இரண்டாம் எண் எச்சரிக்கைக் கூண்டு தொங்க விடப்பட்டது. கடலுக்குள் மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்லக்கூடாது என எச்சரிக்கப்பட்டனர்.

எச்சரிக்கையையும் மீறி சில மீனவர்கள் படகுகளில் மீன்பிடிக்கச் சென்றனர். கடல் கொந்தளிப்பில் நள்ளிரவில் பாலகிருஷ்ணன் என்ப வரின் படகு சிக்கியது. இந்தப் படகில் இருந்த மீனவர்கள் இருவர் நீரில் மூழ்கி பலியானார்கள். இறந்து போன 2 பேருடைய (மாணிக்க சுவாமி - வயது 24, இளைய பெருமாள் - வயது 26) குடும்பத் தாருக்குத் தலா ரூ. 21,000 வழங்க மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஸ்கந்தன் உத்தரவிட்டார்.

**பட்டுக்கோட்டை**

பட்டுக்கோட்டையில் பலத்த மழை காரணமாக, பழஞ்சூர் கிராம ஏரியில் உடைப்பு ஏற்பட்டு, 100 ஏக்கர் பயிர் தண்ணீரில் மூழ்கியது. நஸ்வினி ஆற்றில் உடைப்பு ஏற்





பட்டு தண்ணீர் வெளியேறியதில் 500 ஏக்கர் பயிர் தண்ணீரில் மூழ்கியது. அதிராம்பட்டினம் முத்துப்பேட்டைப் பகுதியில் 1000 ஏக்கர் பயிர் தண்ணீரில் மூழ்கியது.

**தனுஷ்கோடி**

13.11.92 அன்று இரவு தனுஷ்கோடி ம்முழுவதுமாகக் கடலில் மூழ்கி விட்டது. இராமேசுவரம், திருச்செந்தூர் ஆகிய நகரங்களுக்குள்ளும் கடல்நீர் புகுந்துவிட்டது.

புயல் கரையைக் கடந்தபோது தூத்துக்குடியில் மணிக்கு 120 கிலோ மீட்டர் வேகத்தில் சூறாவளிக் காற்றுடன் பலத்த மழை பெய்தது.

இதுகுறித்து இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஜனார்த்தனன் கூறியதாவது:

'கடல் கொந்தளிப்பால் மன்னார் வளைகுடாக் கடலும், பாக் வளைகுடாக் கடலும் சீறிப் பாய்ந்து, தனுஷ்கோடி நிலப் பகுதியை விழுங்கி விட்டது. அந்த நகரம் இருந்த இடமே தெரியாமல் கடலில் மூழ்கி விட்டது. அங்கு இருந்த 500 மீனவர் குடிசைகளும் கடலில் மூழ்கி விட்டன. அங்கிருந்த மீனவர்கள் ஏற்கெனவே பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டு விட்டதால் உயிர்ச்சேதம் ஏற்படவில்லை. பாம்பனில் 100 குடிசைகளைக் கடல் நீர் சூழ்ந்துவிட்டதால் அதில் வசித்தவர்கள் குழந்தைகளுடன் புயல் பாதுகாப்பு இல்லத்தில் தஞ்சம் புகுந்தனர். ஓலக்கூடா கிராமத்துக்குச் செல்லும் சாலை கடல் நீரால் துண்டிக்கப்பட்டு விட்டதால், அங்கு போக முடியவில்லை. தர்காவலசை, தோப்பு வலசை, அழகாத்தா வலசை, கோவில்வாடி ஆகிய கிராமங்களில் 300 வீடுகள் நாசமாகிவிட்டன.

**இராமேசுவரம்**

இராமேசுவரம் கடற்கரையையொட்டி உள்ள வீடுகளையும், துறைமுகம் பகுதியில் உள்ள வீடுகளையும் தண்ணீர் சூழ்ந்து ஏறத்தாழ 500 வீடுகள் தண்ணீரில் மிதந்தன. கடலில் நங்கூரம் பாய்ச்சி நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 200-க்கும் மேற்பட்ட படகுகள் நொறுங்கின.

**மதுரை மாவட்டத்தில் நிலச் சரிவு**

மதுரை மாவட்டம் மேற்குத் தொடர்ச்சி மலையில் உள்ள மேகமலைப் பகுதியிலும் பலத்த மழை கொட்டியது.

சின்னமனூர் வட்டாரத்தில் பயங்கர நிலச்சரிவுகள் ஏற்பட்டு ஆண்களும் பெண்களும் பலியாயினர். இப்பகுதி தேயிலைத் தோட்டங்கள் நிறைந்த பகுதியாகும். தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள், மலைச் சரிவில் குடிசைகள் போட்டு வசித்து வந்தனர். தொடர்ந்து பெய்த பலத்த மழையினால், இங்கு நிலச்சரிவுகள் ஏற்பட்டு, இவர்களின் குடிசைகள் மீது விழுந்தது. இதனால் குடிசைகளில் வசித்தவர்கள் உயிரோடு மண்ணில் புதைந்து மூச்சுத் திணறிச்செத்தனர். 100-க்கும் மேற்பட்டவர்கள் இறந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

**சிதம்பரனார் மாவட்டம்**

புயல் வெள்ளத்தால் சிதம்பரனார் மாவட்டம் வெகுவாகப் பாதிக்கப்பட்டது. தொடர்ந்து மழை பெய்த பொழுது, மணிமுத்தாறு அணைக்குத் திடீர் என 40,000 கன அடிநீர் வந்தது. மேலும், தண்ணீர் வந்தால் ஆபத்து என்று கருதி, அணையில் இருந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டது. ஏற்கெனவே ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடிக் கொண்டிருக்கிறது. இதில் அணையின் நீரும் சேர்ந்து கொண்டதால்

ஆற்றில் வெள்ளம் அதிகரித்து, தாமிரபரணி ஆற்றில் மோதி திரும்பியது. இதனால் உடைப்பு ஏற்பட்டது.

கரை உடைந்ததால் ஆற்று

வெள்ளம் ஆத்தூர், புன்னக்காயல், சேந்தமங்கலம் கிராமங்களுக்குள் புகுந்தது. இந்த மூன்று ஊர்களும் வெள்ளத்தில் மிதந்தன. இதில் ஆத்தூர் மிகவும் பாதிக்கப்பட்டது. இப்பகுதியிலுள்ள மக்களுக்கு 10,000 உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன.

**நீலகிரி மாவட்டத்தில்...**

நீலகிரி மாவட்டத்தில் தொடர்ந்து பலத்த மழை பெய்தது. இதனால் வீடுகள் இடிந்து 3 பேர் பலியாயினர். ஊட்டி - லவ்டேல் காந்திப் பேட்டையில் ஒரு வீடு இடிந்து இரண்டு பெண்களும், மஞ்சூர் ஓனிக் கெண்டி அண்ணாநகர் பகுதியில் ஒரு வீட்டின் சுவர் இடிந்து ஒரு பெண்ணும் பலியானார்கள். கெத்தையில் பள்ளிக்கூடக் கட்டடம் ஒன்று இடிந்து விழுந்து தரைமட்டமானது. பல இடங்களில் மரங்கள் சரிந்து விழுந்தன. மழை வெள்ளப் பாதிப்புகள் குறித்து நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் செல்வி லீனா நாயர் நிருபர்களிடம் கூறியதாவது:-

'பலத்த மழை காரணமாகப் பல இடங்களில் மண் சரிவு ஏற்பட்டு போக்குவரத்து பாதிக்கப்பட்டு உள்ளது. இதற்கான மீட்புப் பணி நடந்து வருகிறது. ரேலியா அணை, தொட்டபெட்டா அணை ஆகியவை நிரம்பி வழிகின்றன. தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டு மேடான பகுதிகளில் தங்க வைக்கப் பட்டுள்ளனர்.

தமிழ்நாட்டிலேயே அதிக அளவு மழை குன்னூர் ரேலியா அணைப் பகுதியில் பெய்துள்ளது. இங்கு 680 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது. குன்னூரில் 430 மி.மீட்டர் மழை பெய்துள்ளது'.

**கொடைக்கானலில்...**

**கொடைக்கானலில் அடைமழையால் வீடுகள் இடிந்ததில் இந்திரா நகரைச் சார்ந்த ஐந்து பேர் மரணம் அடைந்தனர்.**

**திருச்செந்தூர்**

திருச்செந்தூர் கடற்கரை ஓரமுள்ள மீனவர்கள் காலனிக்குள் கடல்நீர் புகுந்ததால், 150 குடிசைகள் நீரில் மூழ்கின. 600-க்கும் அதிகமான பனை மரங்கள் சாய்ந்தன. ஏராளமான வாழை மரங்கள் சேதமடைந்தன. நள்ளிரவு ஒரு மணியளவில் கடல்நீர் புகுந்தது. அங்கிருந்த 480 குடிசைகளுக்குள் கடல் நீர் புகுந்ததால் அங்குள்ளவர்கள் உடனே அருகே உள்ள புயல் பாதுகாப்பு இல்லத்தில் தங்க வைக்கப் பட்டனர்.

வாழைத் தோட்டங்கள் அழிந்தன. பயிர்கள் தண்ணீரில் மூழ்கிக் கிடக்கின்றன. குடிசைகள் இடிந்து சேதம் அடைந்தன. ஏரி, குளங்களில் உடைப்பு ஏற்பட்டு ஆறுகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது.

**25 பேர் மரணம்**

விக்கிரமசிங்கபுரத்தில் ஆற்றுக்கு அருகிலுள்ள வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்ததால் 6 குடும்பங்களைச் சேர்ந்த 25 பேர் மரணம் அடைந்தனர்.

**சென்னையில்...**

சென்னையில் செய்த அடை மழை காரணமாக தாழ்வான பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்தது.

பெரம்பூர், ஓட்டேரி, நேருஜி நகர், வியாசர்பாடி, புளியந்தோப்பு, ராயபுரம், பனைமரத் தொட்டி, டி.பி. சத்திரம், சூளை, வில்லிவாக்கம், சிட்கோ நகர், திருமலை நகர், மைலாப்பூர் போன்ற பகுதிகளில் குடிசைகளை மழை நீர் சூழ்ந்தது.

மாநகராட்சி சார்பில் 20 பம்பு செட்டுகள் மூலம் தேங்கிக் கிடக்கும் தண்ணீரை அகற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 40,000 உணவுப் பொட்டலங்கள் தயார் செய்யப்பட்டு, குடிசை வாசிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டன.

கொருக்குப்பேட்டை எம்.ஜி.ஆர். நகரில் 2,000 குடிசைகள் வெள்ளத்தில் மிதந்தன.

**திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தில்...**


திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம் செங்கம் அருகே வெள்ளத்தால் 7 பேர் பலியானார்கள்.

**ஆறு அமைச்சர்கள்**

வெள்ளச் சேதத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று நிவாரணப் பணியை மேலும் துரிதப்படுத்தவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி நிவாரணம் வழங்கவும், ஆறுதல் கூறவும், வெள்ளப் பகுதிகளுக்கு உடனடியாகச் செல்லும்படி மாண்புமிகு அமைச்சர்கள் திரு. எஸ்.டி. சோமசுந்தரம், திரு. எஸ். முத்துசாமி, திரு. கே.ஏ. செங்கோட்டையன், திரு. கண்ணப்பன், திரு. அழகு திருநாவுக்கரசு, திரு. நாகூர் மீரான் ஆகியோருக்கு முதல்வர் உத்தரவிட்டார்.

**முதல்வர் உதவி**

நிவாரணப் பணிகளை விரைவுபடுத்த மாவட்டங்களில் பல்வேறு பணிகளுக்காக முதல்வர் ரூ.10 கோடி ஒதுக்கினார். *(16.11.92)*.







**பிரதமர் உதவி**

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப் பணிகளுக்காக மாண்புமிகு பிரதமர் அவர்கள், பிரதமர் நிவாரண நிதியிலிருந்து உடனடியாக ரூ.32 இலட்சம் வழங்க உத்தரவிட்டார். இதில் தமிழ்நாட்டுக்கு ரூ.20 இலட்சமும், கேரளாவுக்கு ரூ.10 இலட்சமும், பாண்டிச்சேரிக்கு ரூ.2 இலட்சமும் வழங்கப்படுகிறது. வெள்ளச் சேதம் பற்றி கணக்கெடுக்கப்பட்டபின் அடுத்தகட்ட நிவாரண உதவித் தொகை வழங்கப்படும். (15.11.92)

## வெள்ளப் பகுதிகளில் முதல்வர்

புயலாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளைப் பார்வையிட மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 16.11.1992 அன்று மதியம் 12.30 மணியளவில் சென்னையிலிருந்து விமானம் மூலம் தூத்துக்குடி வந்தடைந்தார். பின்னர், தூத்துக்குடியிலிருந்து சாலை வழியே புறப்பட்டு முதலில் தூத்துக்குடி நகரைச் சுற்றியுள்ள பகுதிகளைப் பார்வையிட்டார்.

**தூத்துக்குடியில்...**

தூத்துக்குடி நகரில் புயலாலும் வெள்ளத்தாலும் மிகவும் பாதிக்கப்பட்ட முக்கியப் பகுதியான திரேசா புரம் கடற்கரைப் பகுதியினைப் பார்வையிட்டு, அங்குள்ள மீனவர்களின் குறைகளைக் கேட்டறிந்தார். புயலால் பாதிக்கப்பட்டு, உடைந்து கிடந்த கட்டுமரங்களையும், படகுகளையும் பார்வையிட்டார். மீனவர்களின் குறைகளைக் களைவதற்காக அவர்களின் உடைந்த படகுகளையும் கட்டுமரங்களையும் கட்டுவதற்கு ஆகும் செலவில் 50 சதவிகித அரசு மானியமாகவும், 50 சதவிகித அரசு ஏற்பாடு செய்யும் கடனாகவும் வழங்க ஆணையிட்டார். திரேசா புரத்திலிருந்து சாலை வழியே புறப்பட்டு புயலாலும், வெள்ளத்தாலும் மிகவும் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்ட வண்ணம் 25 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள முக்கானிக்குச் சென்றார்.

முக்கானிக்குச் செல்லும் வழியில் முத்தையால்புரம், சவேரியார்புரம், பழையகாயல் மற்றும் வழியில் குக்கிராமங்களில் உள்ள பாதிக்கப்பட்ட பகுதிகளில் இறங்கி நடந்து சென்று பார்வையிட்டார். அக்கிராம மக்களின் குறைகளைக் கேட்டறிந்தார்.

முக்கானிக்கு அடுத்துள்ள ஆத்தூர் பாலம் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டது. ஆத்தூர் கிராம மக்கள் வெள்ளத்தால் மிகவும் பாதிக்கப்பட்டதை அறிந்து, உடனடியாக அந்த இடத்திற்குச் சென்று, உடைந்து கிடந்த பாலத்தைப் பார்வையிட்டார். மக்களின் குறைகளைக் கேட்டறிந்தார்.

அரசாங்கத்தால் கொடுக்கப்படுகின்ற நிவாரண உதவிகள் 5 கிலோ அரிசி, சேலை, வேட்டி மற்றும் பண உதவித் தொகை இதுவரை தங்களுக்குச் சேரவில்லை என்று மக்கள் முறையிட்டதைத் தொடர்ந்து, எல்லாக் கிராமங்களுக்கும் அரசு நிவாரண உதவிகள் அன்று இரவுக்குள்ளாகவே வழங்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டார். முக்காணி, ஆத்தூர் மற்றும் பழைய காயல் ஆகிய கிராமங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட வேண்டும் என்றும் ஆணையிட்டார். அதன்படி அரசுத்தரப்பு உதவிகளும், உணவுப் பொட்டலங்களும் இந்தக் கிராமங்களிலுள்ள மக்களுக்கு வழங்கப்பட்டன.

இந்த அரசு உதவிகளும், உணவுப் பொட்டலங்களும் எல்லா மக்களுக்கும் சரியான முறையில் சேர்வதை மேற்பார்வையிடுமாறு தன்னுடன் வந்த மாண்புமிகு அமைச்சர்கள் திரு. எஸ்.டி. சோமசுந்தரம், திரு. எஸ்.முத்துசாமி, திரு. கே.ஏ. செங்கோட்டையன், திரு. எஸ். கண்ணப்பன், திரு. அழகு திருநாவுக்கரசு, திரு. நாகூர் மீரான் ஆகியோருக்கு ஆணையிட்டார்.

ஆத்தூர் பாலத்தில் ஏற்பட்டுள்ள உடைப்பை உடனடியாகச் சீர் செய்துதருமாறு அந்தக் கிராம மக்கள் கூறியபோது இன்னும் ஒரு வார காலத்திற்குள் இந்தப் பாலம் சீர்செய்யப்பட்டு வாகனப் போக்குவரத்துக்கு ஏற்பாடு செய்யப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அம்மக்களிடம் தெரிவித்தார். தம்முடன் வந்த மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. எஸ். கண்ணப்பன் அவர்களிடமும், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. அழகு திருநாவுக்கரசு அவர்களிடமும் இந்தப் பாலத்தை உடனடியாக ஒருவார காலத்திற்குள்

(தொடர்ச்சி.. 41 ஆம் பக்கம் பார்க்க)

# தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் உரை



நமது நாட்டின் கோடிக் கணக்கான மக்களுடைய உணர்ச்சிகளைத் தூண்டிவிடும் ஒரு பிரச்சினையைப் பற்றி விவாதிக்க முக்கியமான ஒரு கட்டத்தில் தேசிய ஒருமைப்பாட்டுக் குழு இன்று கூடியுள்ளது.

இதுபோன்றதொரு கூட்டத்தில் அயோத்தி பிரச்சினை பற்றி ஒருமித்த கருத்தை நாம் உருவாக்க முடியுமா என்பது கேள்வி அல்ல. ஏனெனில், இந்தப் பிரச்சினை சிக்கலான பல்வேறு வடிவங்களை உள்ளடக்கியது.

எந்தவொரு முடிவும் நாட்டின் எதிர் காலத்தின்மீது, அழிக்க முடியாததொரு பாதிப்பை ஏற்படுத்தும்.

இங்குக் கூடியுள்ள அனைத்து மதத் தலைவர்களும் தங்களுடைய முதிர்ந்த அறிவாற்றலினால் ஒருவரையொருவர் புரிந்து கொண்டு, இந்தத் தடையைக் கடந்து, சமுதாயத்தின் உயிரோட்டமாக அமைந்துள்ள அமைதிப் பாதையில் நாட்டை எடுத்துச் செல்ல இயலுமா என்பதே கேள்வி.

இந்த அயோத்திப் பிரச்சினைக்கு அரசியல் நிர்ணயச் சட்டம், சட்டம், வரலாறு, அரசியல், சமூகம், இனம் என்று பல கோணங்கள் உண்டு.

தலைவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து, இப்பிரச்சினையை எப்படித் தீர்க்கப் போகிறார்கள் என்று உலகமே உற்றுநோக்கிக் கொண்டுள்ளது. இந்த உண்மையை நன்கு உணர்ந்து, நாட்டின் ஒற்றுமையையும், ஸ்திரத் தன்மையையும் அரசியல் நிர்ணயச் சட்டத்தில் அமைந்துள்ள கொள்கையின்படி பாதுகாக்கும் வகையில் நடவடிக்கைகளை நாம் எடுத்தாக வேண்டும்.

*1991* நவம்பர் திங்கள் 2-ஆம் நாளன்று நடைபெற்ற தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்தில், அயோத்திப் பிரச்சினை பற்றி நான் கூறியதை இங்கே நினைவுகூர விரும்புகிறேன்.



தீண்டாமை என்பது நமது சமூகத்தில் ஒரு மாசு. தீண்டாமை ஒரு விஷப் பாம்பு. அதைக் கொன்றாக வேண்டும்.

''இதில் அடங்கியுள்ள அனைத்துப் பிரச்சினைகள் குறித்தும் முழுமையாகப் புரிந்துகொள்ளாமல், ராமஜென்மப் பூமி, பாபர் மசூதி பிரச்சினைப் பற்றி ஒரு முடிவு நாம் எடுத்தோமேயானால், அது நாடு முழுமைக்கும் இந்து-முஸ்லீம் உறவுகளிடையே பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை உங்களுக்கு நினைவுபடுத்த நான் விரும்புகிறேன்''.

முதலில் அரசியல் நிர்ணயச் சட்டத்தில் உள்ள மதச் சார்பற்ற தன்மை, பெரும்பான்மையான மக்கள் அனுபவிக்கும் உரிமைகளைச் சிறுபான்மையினரும் அனுபவிக்கும் வகையில், நாம் நடந்து கொள்ளவேண்டிய பொறுப்பை நமக்குச் சுமத்துகிறது. அதே நேரத்தில், அரசியல் நிர்ணயச் சட்டம் வழங்கியுள்ள சாதாரண உரிமைகளைக் கூட பெரும்பான்மையினர் அனுபவிக்க முடியாத வகையில், சிறுபான்மையினர், அரசியல், சரித்திர, சமூக, காரணங்களைச் சொல்லி நடந்து கொள்வது முறையல்ல. இந்த நாட்டில் இந்துக்களே பெரும்பான்மையினர் என்பது அனைவரும் அறிந்ததே. அவர்கள் தங்களுடைய மதக் குறிக்கோள்களை அமைதியான முறையில், அரசியல் நிர்ணயச் சட்டத்தின் கொள்கைகளுக்கு மாறாமல் அனுசரிப்பார்களேயானால் அதற்கு நாம் அனுமதி அளித்தாக வேண்டும்.

இன்னும் சொல்லப்போனால், சிறுபான்மையினரைப் போன்றே பெரும்பான்மையினரும் உரிமைகளை அனுபவிப்பதை உறுதி செய்யும் பொறுப்பு இந்திய அரசாங்கத்துக்கு உண்டு.

குறிப்பாக, அயோத்திப் பிரச்சினைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால், உத்திரப்பிரதேச அரசு கையகப்படுத்தியுள்ள நிலத்தில் இந்துக்கள் விரும்பியபடி கட்டடத்தைக் கட்டுவதை அனுமதிக்க வேண்டும்.

உச்சநீதிமன்றம் உத்திரப்பிரதேச அரசுக்கு விடுத்துள்ள ஆணைகளும், உச்சநீதிமன்றத்தில் நடைபெற்றுவரும் வழக்குகளும், உத்திரப்பிரதேச அரசு, கையகப்படுத்தியுள்ள நிலத்தில் கர சேவை செய்வதையும் அல்லது வேறு எந்த நடவடிக்கைகளையும் எடுப்பதையும் சட்ட ரீதியாகத் தடை செய்கின்றன.

இந்த நிலத்தில் கட்டடம் கட்ட எந்தத் தடையும் இருக்கக் கூடாது என்ற நிலையை நாம் ஏற்றுக் கொண்டால், மைய அரசும் உத்திரப்பிரதேச அரசும் இது தொடர்பான சட்டச் சிக்கலைத் தீர்க்கத் தேவையான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்கவேண்டும்.

ஆனால், இப்பிரச்சினை குறித்து ஒரு முடிவெடுப்பதைத் தள்ளிப்போட ஒரு காரணமாகச் சட்டச் சிக்கலைப் பயன்படுத்தக் கூடாது. ஏனெனில், ஒவ்வொரு நாளும் செல்லச் செல்ல, எதிர்த்து வரும் மக்களின் உணர்ச்சிக் கொந்தளிப்பைச் சமாளிப்பது அரசாங்கத்திற்கு மென்மேலும் கடினமாகிவிடும். எனவே, கரசேவை புரிவதற்கான சூழ்நிலையை உருவாக்குவதற்கான முடிவினைப் இப்பேரவை எடுத்தாக வேண்டும். கரசேவை புரிவதை நீதிமன்றம் அனுமதிக்கக்கோரி அனைத்து முயற்சிகளையும் எடுத்தாக வேண்டும்.

பிரச்சினைக்குரிய நிலத்தின் அடுத்த கேள்வி அப்படியே இருக்கும். இது தொடர்பான இரண்டு பிரிவினரையும் கூட்டி, அவர்களுடைய வாதங்களுக்கு ஆதாரங்களை அவர்கள் கொணர பிரதமர் முயற்சிகளை எடுத்து வருகிறார். இருப்பினும், இம்முயற்சிகள் பிரச்சினையைத் தீர்க்காது என்றே நான் கருதுகிறேன். பிரதமரும் இதை அறிவார். எனவே, பிரச்சினைக்குரிய நிலத்தில் கோவில் இருந்தது என்ற அடிப்படைப் பிரச்சினையை உச்சநீதிமன்றத்திற்கு அனுப்பலாமா என்ற கேள்வி எழுப்பப்பட்டது. இதனால் எந்தப் பயனும் இருக்காதென்றே நான் கருதுகிறேன். வரலாற்றை நிரூபிக்கவோ, பொய்ப்பிக்கவோ நாம் ஏன் முயற்சிக்க வேண்டும்? வரலாற்று உண்மைகளை முடிவு செய்ய உச்சநீதிமன்றத்தை நாம் அழைக்க வேண்டுமா? இந்த வகையில் வரலாற்றைத் திருப்பி எழுதுவதில் நாம் வெற்றி பெறுவோமா? அல்லது, நம் நாட்டின் நலனுக்கு இது தேவையா? இந்தக் கேள்விகள் பற்றி நாம் தீவிரமாகச் சிந்திக்க வேண்டும்.

மசூதியைப் பற்றிய பிரச்சினையை அப்படியே விட்டுவிட வேண்டுமென்பதுதான் என்னுடைய ஆய்ந்த முடிவாகும். 1528-க்கு முன்பு இங்கு ஒரு கோவில் இருந்ததா என ஆராய்ந்து பல பிரச்சினைகளை கிளப்பத் தேவையில்லை.

விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடன் வாழவும் நம் தலைவர்கள் அரசியல் நிர்ணயச் சட்டத்தின் உணர்வுகளை நன்கு புரிந்து கொண்டு சமுதாய அமைதியையும், நல்லிணக்கத்தையும் மேம்படுத்த அரசியல் நிர்ணயச் சட்டமும், இந்திய மக்களின் அறிவுக் கூர்மையும் வழி வகுத்துள்ளது.

சுருங்கக் கூறின், என்னுடைய கோரிக்கை இதுதான். உத்திரபிரதேச அரசு கையகப்படுத்திய நிலத்தில் கரசேவை புரிந்திடத் தகுந்த சூழ்நிலையை உருவாக்குங்கள். வரலாற்றுக் கேள்விகளுக்குள் செல்லாமல், மசூதியை அப்படியே விட்டுவிடுங்கள். இந்நாட்டின் குடிமக்களை அமைதியாக வாழ அனுமதியுங்கள்.

அரசியல் நிர்ணயச் சட்டத்தைக் காக்க வேண்டியதன் அவசியத்தைப் பற்றி திரு. வி.பி. சிங் அவர்களும் மற்றவர்களும் பேசினார்கள். உயர்நீதிமன்றத்தின் உத்தரவை ஒரு மாநில அரசு ஏற்றுக்

கொள்ளாவிட்டால், அரசியல் நிர்ணயச் சட்டப்படி அரசாங்கம் நடைபெறவில்லை என்று கருதி மாநில அரசைக் கலைத்துவிட வேண்டும் என்று அவர்கள் கூறினார்.

நீதிமன்றங்களின் உத்தரவிற்குக் கீழ்ப்படிய வேண்டும் என்கிற பொதுவிதியைக் குறிப்பிட்ட சம்பவங்களுக்கு மட்டுமே வலியுறுத்துதல் என்பது சரியல்ல. உச்சநீதிமன்ற நீதிபதிகளைக் கொண்ட, காவிரி நீர்ப் பிரச்சினை நடுவர் மன்றம் ஒரு இடைக்கால உத்தரவைப் பிறப்பித்த போது கர்நாடக அரசு அதை ஏற்கவில்லை. மைய அரசின் ஆலோசனை பேரில் குடியரசுத் தலைவர் இப்பிரச்சினை குறித்து உச்சநீதிமன்றத்தின் ஆலோசனையைக் கேட்டார். நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பு சரியானதுதான் என உச்ச நீதிமன்றம் தன்னுடைய கருத்தைத் தெரிவித்தது. ஒன்றரை ஆண்டுக் காலம் கழிந்த பின்பும் கர்நாடக அரசு இந்த உத்தரவை அமல்படுத்தவில்லை. நீதித் துறையை கர்நாடக அரசு அவமதித்து விட்டது. தேசிய ஒருமைப்பாட்டுக் குழு இதை கவனத்தில் கொள்ளவில்லை. அரசியல் நிர்ணயச் சட்டப்படி நடைபெறாததைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றவில்லை. தேசிய ஒருமைப்பாட்டுக் குழுவோ, இந்திய அரசோ, கர்நாடக அரசைக் கவிழ்ப்போம் என்று பயமுறுத்தவில்லை. எனவே, உத்திர பிரதேச அரசைக் கவிழ்ப்போம் என்று பயமுறுத்துவது சரியல்ல, என்றே நான் கருதுகின்றேன்.

பாரதிய ஜனதா கட்சியும் அதன் கூட்டணிக் கட்சிகளும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளாமல் புறக்கணித்தது வருத்தத்துக்குரியதாகும். அனைத்துக் கட்சிகளும், அனைத்து உறுப்பினர்களும் தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டும்.

பாரதீய ஜனதா கட்சி இங்கே தனிமைப் படுத்தப்படும் என்ற பயந்ததைப் பற்றி திரு. இந்திரஜித் குப்தா இங்கே குறிப்பிட்டார். அது உண்மைதான். அவர்கள் இந்தக் கூட்டத்தில் தனிமைப் படுத்தப்படலாம். ஆனால், வெளியே, மக்களிடையே அயோத்தியாவில் ஒரு கோவில் கட்ட வேண்டும் என்ற ஆசை, இந்நாட்டின் பெரும்பான்மையான மக்களின் விருப்பத்தைப் பிரதிபலிக்கின்றது.

மக்களின் கருத்தை நாம் மதித்தாக வேண்டும் மக்களின் கருத்தை, அதுவும் அந்நாட்டின் பெரும் பான்மை மக்களின் கருத்தை அலட்சியப்படுத்தக் கூடாது - அலட்சியப்படுத்திட முடியாது.

இக்கூட்டத்தில், என்னுடைய கருத்துக்களை எடுத்துக்கூற வாய்ப்பளித்தமைக்கு என் நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

**(புதுடெல்லியில் 23.11.92 அன்று நடைபெற்ற தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் ஆற்றிய உரை).**

# புயல் வெள்ள நிவாரணப் பணிகளுக்குத் தமிழக அரசு ரூ.68.52 கோடி நிதி ஒதுக்கீடு!

**புயல் வெள்ள நிவாரண நிதிக்கு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உத்தரவின்பேரில், கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.**

**★ *17.11.92* அன்று மாவட்டங்களுக்காக ரூ.*10* கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.**

**★ *21.11.92* அன்று சாலைகளையும் பாசன ஏரிகளையும் சீர்படுத்த ரூ.*20* கோடி ஒதுக்கப் பட்டுள்ளது.**

**★ *22.11.92* அன்று *1,43,128* சிறு, நடுத்தர விவசாயிகளுக்கும் *45,902* மற்ற விவசாயிகளுக்கும் மானியத்தொகையாக ரூ.*8.6* கோடி ஒதுக்கப் பட்டுள்ளது.**

**★ *22.11.92* அன்று வாழை, காய்கறிகள், உருளைக்கிழங்கு,ரப்பர் ஆகியவைகளை *18,871* எக்டேர் நிலத்தில் பயிரிட்டு, இழந்த சிறு, நடுத்தர விவசாயிகளுக்கு மானியத் தொகையாக ரூ.*4.28* கோடி வழங்கப்பட்டது.**

**★ *22.11.92* அன்று, மணலில் புதைந்த *2,500* எக்டேர் நிலத்தைச் சீர்படுத்தவும் *500* பாசனக் கிணறுகளைத் தூர் எடுக்கவும் ரூ.*3* கோடி ஒதுக் கப்பட்டுள்து.**

**★ *26.11.92* அன்று *2* படகுகளையும், மீன்பிடி வலைகளையும் இழந்த மீனவர்களுக்கு மானியத் தொகையாக *8.21* கோடி வழங்கப்பட்டது. *1920* படகுகள் முழுவதுமாகச்சேதமடைந்துள்ளன. *444* படகுகள் ஓரளவு சேதமடைந்தன. *1,522* கட்டுமரங்கள் முழுவதுமாகச் சேதமடைந்துள்ளன.**

**★ கடல்மீனவர்களுக்குத் தேசிய சேமிப்பு மற்றும் நிவாரண நிதியின் திட்டத்தின் கீழும், மீனவர்களுக்கான தேசிய நிதியிலிருந்தும் *82,000* மீனவர்களுக்கு *25.11.92* அன்று ரூ.*6.13* கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.**

**★ நோயிலிருந்து விலங்குகளைக் காப்பாற்றத் தேவையான மருந்துப் பொருட்களை வழங்க *26.11.92* அன்று ரூ.*30* இலட்சம் வழங்கப் பட்டது.**

**★ துணி, அரிசி, மண்ணெண்ணெய், குடிசைச் சீரமைப்பு ஆகியவைகளுக்காக உடனடி நிவாரணத் தொகையாக ரூ.*8* கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.**

**ஆக மொத்தம், புயல் வெள்ள நிவாரணப் பணிகளுக்காக அரசு ரூ.*68.52* கோடி ஒதுக்கி யுள்ளது.**



# 1993-94-ஆம் ஆண்டுக்கான தமிழகத் திட்டத்துக்கு ரூ.2,101 கோடி ஒதுக்கீடு

***1993-94***-ஆம் ஆண்டு தமிழகத் திட்டம் குறித்து மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் மத்தியத் திட்டக் குழுத துணைத் தலைவர் திரு. பிரணாப் குமார் முகர்ஜியுடன் டெல்லியில் *14.11.92* அன்று விரிவான விவாதம் நடத்தினார்.

இந்தப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதற்காக மாண்புமிகு முதல்வருடன், மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் திரு. இரா. நெடுஞ்செழியன், தலைமைச் செயலர் திரு. டி.வி. வெங்கட்ராமன், நிதிச் செயலர் திரு. நாராயணன், திட்டச் செயலர் திரு. எம்.பி. பிரானேஷ், முதல்வரின் செயலர் திரு. எஸ்.ஆர்.கருப்பண்ணன் ஆகியோர் சென்றிருந்தனர்.

## பாராட்டு

*1991-92*-ஆம் ஆண்டுக்கான திட்ட முதலீடு ரூ.*1,605* கோடி என்று ஒப்புதல் அளிக்கப்பட்டாலும் கூடுதலாக *45* கோடி ரூபாய் அதாவது ரூ.*1,650* கோடி என்ற வகையில் அமைந்ததற்காக, தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா தலைமையிலான தமிழக அரசு எடுத்துக் கொண்ட விசேஷ முயற்சிகளையும், இந்த ஆண்டில் தமிழகப் பொருளாதாரத்தின் பிரமிக்கத்தக்க வளர்ச்சியையும் திட்டக் குழுத் துணைத் தலைவர் பாராட்டினார்.

தென் தீபகற்ப நதிநீர் வினியோக அமைப்பை உடனடியாகத் தொடங்கத் திட்டக் குழுத் துணைத் தலைவர் அவர்கள் தமது செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டுமென மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டுக் கொண்டார். இதை ஒரு தேசிய திட்டமாக எடுத்துச் செயல்படுத்த வேண்டுமெனவும் முதல்வர் கேட்டுக் கொண்டார்.

## எரிவாயுத் திட்டம்

பம்பாயிலிருந்து இயற்கை எரிவாயுவை அனைத்துத் தென் மாநிலங்களுக்கும் கொண்டு வருவதற்கான தென்னக எரிவாயு வினியோக அமைப்புக்குத் தென் மாநிலங்கள் அனைத்தும் கூட்டாக நிதியுதவி செய்யவேண்டுமெனக் கோரி, சென்னையில் நடந்த தென் மாநில முதல்வர்கள் மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவைத் திட்டக் குழுத் துணைத் தலைவர் கவனத்துக்குக்

# தமிழகத்தில் 2,000 எக்டேர் பரப்பில் பாமாலின் மரங்கள் பயிரிடப்படும்!

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. கு.ப.கிருஷ்ணன் அவர்கள், தென் அமெரிக்காவைச் சேர்ந்த 'கோஸ்ட்டாரிக்கா' நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பாமாலின் விதைகளை வேளாண்மைத்துறை இயக்குநர் திரு. என். கோவிந்தன், இ.ஆ.ப., அவர்களிடம் 25.11.92 அன்று தலைமைச்செயலகத்தில் வழங்கினார். வேளாண்மைத்துறை சிறப்புச் செயலர் திரு. ஆர்.சி.பாண்டா, இ.ஆ.ப. அவர்களும் உடனிருந்தார்.

மொத்தம் 3.4 இலட்சம் பாமாலின் விதைகள் மூன்று கட்டங்களாக, 'கோஸ்ட்டாரிக்கா' நாட்டிலிருந்து வாங்கப்பட உள்ளது. இதன் மதிப்பு ரூ.50 இலட்சமாகும். முதல் கட்டமாகத் தற்பொழுது 96,000 பாமாலின் விதைகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

இந்த விதைகளைக் கொண்டு தஞ்சாவூர் மாவட்டம் சாக்கோட்டை அரசு விதைப் பண்ணையிலும், திருச்சி மாவட்டம் இனுங்கூர் அரசு விதைப் பண்ணையிலும் நாற்றங்கால்கள் அமைக்கப்படும். இந்த நாற்றங்கால்களில் இருந்து உற்பத்தி செய்யப்படும் கன்றுகளைக் கொண்டு தமிழகத்தில் 2,000 எக்டேர் பரப்பில் பாமாலின் மரங்கள் பயிரிடப்படும்.

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள், தரமான கால்நடைத் தீவனங்கள் தயாரிப்பதை முறைப்படுத்துவது குறித்தும், தரமான கால்நடைத் தீவனங்களை வழங்குவது குறித்தும், முட்டை விலையினைக் குறைப்பது குறித்தும் தலைமைச்செயலகத்தில் அதிகாரிகளோடு ஆலோசனை நடத்தினார்.

---

கொண்டுவந்த முதல்வர் அவர்கள், இந்த முக்கியமான திட்டத்துக்கு ஒப்புதல் பெற அவர் முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

ரூ.1,200 கோடி முதலீட்டிலான பள்ளிக் கல்வித் திட்டம், ரூ.320 கோடி முதலீட்டிலான காவிரி நதி மாசுக் கட்டுப்பாட்டுத் திட்டம், ரூ.530 கோடி செலவிலான தமிழ்நாடு குடிநீர் வழங்கல் இரண்டாவது திட்டம் போன்ற வெளி உதவி தேவைப்படும்.

தமிழ்நாட்டின் பல பெரிய திட்டங்களை, திட்டக் குழுத் துணைத் தலைவரின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளது, அவற்றிற்கு உடனடியாக அனுமதி வழங்க வேண்டியதன் அவசியத்தையும் முதல்வர் அவர்கள் எடுத்துரைத்தார். புயல் ஆபத்து மேலாண்மைத் திட்டம் மற்றும் பாசன நீர்த் தொகுப்புத் திட்டம் ஆகியவை குறித்தும் உடனடியாகப் பரிசீலிக்க வேண்டுமென முதல்வர் அவர்கள் கேட்டுக்கொண்டார். சென்னை நீர்வழித் திட்டம் போன்ற திட்டங்களுக்கு உலகச் சுற்றுச் சூழல் நிதியிலிருந்து உதவி பெறலாம் என்றும் முதல்வர் அவர்கள் ஆலோசனை வழங்கினார்.

தமிழகம் எதிர்நோக்கியுள்ள விசேஷ வளர்ச்சிப் பிரச்சினைகளை முதல்வர் அவர்கள் திட்டக் குழுத் துணைத் தலைவரின் கவனத்துக்குக் கொண்டுவந்தார். குறிப்பாகக் கடற்கரையோரம் மற்றும் கடல் எல்லைப் பிரச்சினைகள் குறித்து முதல்வர் விளக்கினார். சென்னை நகர மேம்பாட்டுப் பணிகளுக்கும் முதல்வர் அவர்கள் உதவி கோரினார். தனி நபர் வருமானத்தைப் பொருத்த மட்டில் தேசிய சராசரி விளிம்பில் தமிழ்நாடு இருப்பதால், தமிழகத்துக்கு அதிக அளவில் மத்திய உதவி வழங்கவேண்டியதன் அவசியத்தை முதல்வர் வலியுறுத்தினார். தெலுங்கு கங்கை மற்றும் அதனைச் சார்ந்த சென்னை நகரக் குடிநீர்த் திட்டங்களுக்கு நிதி அளிக்க விசேஷக் கடன் பத்திரங்களை வெளியிட வேண்டுமென முதல்வர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

1991-92-ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட திட்ட மதிப்பீட்டையும் மிஞ்சி தமிழகம் சிறந்த முறையில் முன்னேற்றம் கண்டிருப்பதையும், 1992-93-ஆம் ஆண்டில் நல்ல சாதனைகள் இருந்ததையும் கருத்தில் கொண்டு 1993-94-ஆம் ஆண்டுக்கான தமிழகத் திட்ட மதிப்பீடு ரூ.2,101 கோடி எனக் கூட்டத்தின் முடிவில் தீர்மானிக்கப்பட்டது. இது 1992-93-ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட திட்ட மதிப்பீட்டைக் காட்டிலும் 20 சதம் கூடுதலாகும்.

தமிழ்நாட்டின் 1993-94-ஆம் ஆண்டுத் திட்டத்தின் முன்னுரிமைத் திட்டங்கள் குறித்தும் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. விவசாயம் மற்றும் ஊரக வளர்ச்சிக்கு இந்தத் திட்டத்தில் முக்கியத்துவம் அளிக்கப்படும். விவசாயம், ஊரக வளர்ச்சி மற்றும் பாசனத் திட்டங்களுக்கான முதலீடு ரூ.432.97 கோடியிலிருந்து 459.70 கோடி ரூபாயாக உயர்த்தப்படும். இதைப்போலத் தொழில் மற்றும் மின்சாரத் திட்டங்களுக்கான முதலீடு ரூ.563.50 கோடியிலிருந்து ரூ.658.05 கோடியாகவும், போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பு முதலீடு ரூ.126.74 கோடியிலிருந்து 299.45 கோடி ரூபாயாகவும், உயர்த்தப்படும். கல்வி, சுகாதாரம், சத்துணவு உள்ளிட்ட சமூக நலப் பணிகளுக்கான திட்ட முதலீடும் ரூபாய் 611.46 கோடியிலிருந்து ரூ.665.88 கோடிக்கு உயர்த்தப்படும்.

தமிழ்நாட்டின் 1993-94-ஆம் ஆண்டுக்கான திட்ட ஒதுக்கீடு ரூ.2,101 கோடி என முடிவு செய்யப்பட்டுள்ளது. இது 1992-93-ஆம் ஆண்டுத் திட்டத் தொகையைவிடக் கணிசமான உயர்வு என்பதைப் பிரதிபலிக்கிறது.

# நீங்க நல்லா இருக்கணும்

## 'மதுவிலக்குப் பிரச்சார'த் திரைப்பட வெளியீட்டு விழா

நல்லா இருக்கணும்' திரைப்படத்தின் படச்சுருளை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் வெளியிட, திரைப்பட விநியோகஸ்தர்கள் சார்பில், திரு. ஜி. வெங்கடேஸ்வரன் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

அதைத் தொடர்ந்து மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் தலைமை உரையில் கூறியதாவது:-

மதுப்பழக்கம் ஒருவனுடைய மனிதத் தன்மையை அழித்து, அவனை மிருகமாக மாற்றி விடுகிறது என்றார், மகாத்மா காந்தி அவர்கள். மக்களின் ஒழுக்கத்தையும் மதியையும் கெடுப்பது மது என்றார்,



**மா**ண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான மது விலக்குப் பிரச்சார உயர்மட்டக் குழு, மதுவிலக்குப் பிரச்சாரத் திரைப்படம் ஒன்றைத் தயாரிக்க வேண்டுமெனத் தீர்மானித்திருந்தது. ரூ.85 இலட்சம் செலவில் இந்தத் திரைப்படத்தைத் தயாரிக்கும் பொறுப்பு பிரபல திரைப்படத் தயாரிப்பு நிறுவனமான ஜி.வி. பிலிம்ஸ் நிறுவனத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இப்படத்தின் வெளியீட்டு விழா 26.11.92 அன்று மாலை, சென்னைக் கலைவாணர் அரங்கில் சிறப்பாக நடைபெற்றது.

உள்துறைச் செயலர் திரு. கே. மலைச்சாமி, இ.ஆ.ப. அவர்கள் அனைவரையும் வரவேற்றார். இப்படத்தின் இயக்குநர் திரு. விசு விளக்கவுரையாற்றினார். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு உள்துறைச் செயலாளர் அவர்களும், ஜி.வி. பிலிம்ஸ் நிறுவனர் திரு. ஜி. வெங்கடேஸ்வரன் அவர்களும் திரைப்படத்தின் நாயகன் திரு. நிழல்கள் ரவி அவர்களும் பொன்னாடை போர்த்தினார்கள். 'நீங்க

தந்தை பெரியார். மதியை மயக்கும் குடிப்பழக்கத்தை, சமுதாயத்திலிருந்து முற்றிலுமாக அகற்ற வேண்டும் என்பது தான், பெரியோர்கள் அனைவரின் ஒருமித்த கருத்து.

குடியின் கொடுமை, ஏழை பணக்காரர் என்ற பாகுபாடு இன்றி, அனைவரையும் அழிக்கும் அரக்கத்தனம் கொண்டது. குடிப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டவர்கள், முதலில் தம்மை அழித்துக் கொள்கிறார்கள். அடுத்து அவர்களைச் சார்ந்துள்ளவர்களை, நிலையான பாதிப்பிற்கு ஆட்படுத்துகிறார்கள்.

குறிப்பாக, மனைவி மக்களின் நலன், முழுமையாகப் புறக்கணிக் கப் படுவதோடு, அவர்களின் வாழ்க்கை மட்டுமல்ல, அவர்களது சந்ததியினரின் மன நலத்திற்கும், பெரும் பாதிப்பையும் தீங்கினையும் விளைவிக்கிறார்கள். இப்படி, இவ் வளவு தீமைகளை விளைவிக்கக் கூடிய மதுப் பழக்கம், தேவை தானா? பகுத்தறிவுள்ள ஒவ்வொரு மனிதனின் இதயத்திலும், நியாயத் தோடு எழ வேண்டிய நேர்மையான கேள்வி இது.

சாதாரண மனிதனை வறுமை யில் வாட்டி, ஏழ்மையில் ஆழ்த்தி, அவனை வாழ்க்கையில் முன்னேற விடாமல் தடுத்து வருகின்ற மது விற்கு, சாவு மணி அடிப்பது, நமது சமுதாயத்தின் தலையாய கடமை. வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களுக்கு, அவர்களின் வாழ்க்கைத் தரம் உயர, அரசு எத்தனை உதவிகள் செய்தாலும், அவற்றின் முழுப் பயணம் அவர்களுக்குப் போய்ச் சேராமல், அவர்களைத் தொடர்ந்து வறுமையில் ஆழ்த்தும் வலிமை படைத்த, மது அரக்கனை, ஒழிக்க வும், அவர்கள் மதுப் பழக்கத்தை விட்டொழிக்கவும் தேவையான முயற்சிகளைத் தொடர்ந்து மேற் கொள்வதே, சரியான மார்க்க மாகும்.

சட்டத்தை மட்டுமே வைத்துக் கொண்டு, சமுதாயத்தின் குடிப் பழக்கத்தை முற்றிலும் ஒழித்துவிட முடியாது என்பது, நாம் அனுபவ பூர்வமாக அறிந்த உண்மை. எனவே தான், குடிப்பழக்கத்திற்கு ஆட்பட்ட வர்களின் மனமாற்றத்திற்கு உதவு கிற வகையில் தேவையான பணி களை மேற்கொள்ள வேண்டும், என்ற எண்ணம் உருவானது. அதன் அடிப்படையில்தான், குடியின் தீமையை வலியுறுத்த, நல்ல திரைப் படம் ஒன்றை, வணிக ரீதியில் தயாரித்து, அதைத் தமிழகம் எங்கும் திரையிட்டு, மக்களிடையே ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்று, நான் தலைமைப் பொறுப்பேற்றிருக்கும், மாநில மதுவிலக்குப் பிரச்சாரக் குழு முடி வெடுத்தது.

தற்போது அந்த முடிவுக்குச் செயல் வடிவம் கொடுக்கப்பட்டு, குடிப்பழக்கத்திற்கு அடிமையான வர்களிடையே ஒரு மனமாற்றத்தை உண்டாக்கவும், மதுவை நாட எத் தனித்து, எப்போதும் மனக்கிலேசத் தில் தத்தளிக்கும் இளைஞர்களை நல்வழிப்படுத்தவும், ஒரு முழு முதல் முயற்சியாகத்தான், 'நீங்க நல்லா இருக்கணும்' என்ற இந்தத் திரைப் படம், தமிழக அரசுக்காக ஜி.வி. பிலிம்ஸ் நிறுவனத்தினரால் தயாரிக் கப்பட்டு, தமிழகம் முழுவதும் நாளை முதல் வெளியிடப்படுகிறது.

இந்தத் திரைப்படத்திற்கு நான் ஏன் இந்தப் பெயரைச் சூட்டினேன் என்றால், தமிழக மக்கள் ஒவ்வொரு வரும் 'நல்லா இருக்கணும்' என்பது தான் என்னுடைய ஆசை; இதுவே எங்கள் அரசின் குறிக்கோள் இலட்சியம் சிந்தனை ஆகும். ஆகவேதான், தமிழக மக்களின் வாழ்வு வளம் பெறவேண்டும் என்பதற் காக, எல்லா முயற்சிகளை யும் எங்கள் அரசு, தொய்வில் லாமல் தொடர்ந்து எடுத்து வரு கிறது.

---

## தமிழ்நாட்டில் 18 ஆயிரம் எக்டேர் நிலப்பரப்பில் காடு வளர்ப்பு

**தமிழ்நாட்டில் இந்த ஆண்டு காடு வளர்க்கும் திட்டத்தின்கீழ், வறட்சிப் பகுதிகளில் 90 இலட்சம் மரக் கன்றுகள் நடப்படும்.**

**தமிழ்நாட்டில் மொத்தம் 65 இலட்சம் எக்டேர் நிலங்கள் உள்ளன. இதில் 30 இலட்சம் எக்டேர் நிலங்கள் விவசாயம் செய்ய முடியாமல் வறண்டுபோய் உள்ளன. இந்த நிலங்களில் விவ சாயக் காடுகள் வளர்க்க தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டுமென மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். அதன்படி இவ்வாண்டில் (1992-'93) 18 ஆயிரம் எக்டேர் நிலப்பரப்பில் காடுகள் வளர்க்க முயற்சி மேற் கொள்ளப்பட்டு, இதற்காக ரூ.2 கோடியே 21 இலட்சம் நிதி ஒதுக் கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிலங்களில் 90 இலட்சம் மரக் கன்றுகள் நடப்பட்டு பராமரிக்கப் படும்.**

---

காலம் காலமாக இருந்து வரும் ஒரு சமூகத் தீமையைக் களைய, மக்களிடையே இதைப்பற்றி ஒரு புதிய கருத்தைச் சொல்ல, ஒரு திரைப்படத்திற்கு வலுவான கதை, கதைக்கேற்ற பாத்திரப்படைப்பு, உயிரோட்டமுள்ள வசனம், கருத்து மிக்க பாடல்கள், நிச்சயம் தேவை. 'நீங்க நல்லா இருக்கணும்' திரைப் படத்தில், அத்தனை அம்சங்களும் நிறைந்துள்ளதாக நான் கருதுகிறேன்.

சமுதாயப் பார்வையோடு, குடிப் பழக்கத்தை எதிர்க்கும் ஒரு சீர் திருத்தக் கருத்தை, வலியுறுத்தும் படமாக இருந்தாலும், குறிப்பாக குடிப்பழக்கம் உள்ளவனாக, அவனது மனைவியாக, உறவினர் களாக நடிப்பதற்கு, நடிகர் நடிகை யர்களே தயங்குகிறார்கள். தன்னை ஒரு குடிகாரன் என்று, தன் நிழல் கூடச் சொல்லிவிடக் கூடாது என்று, எந்த ஒரு மனிதனும் விரும்புவது இயற்கை.

இப்படிப்பட்ட சூழ்நிலையில், தமிழக அரசுக்காக, அரசின் நல்ல நோக்கத்திற்காக, சமுதாயத்தில் நிலவி வரும் ஒரு கொடுமையைக் களைய, தம்மால் இயன்ற பணியை ஆற்ற விழைந்துள்ள, இந்தத் திரைப் படத்தில் நடித்த, நடிகர், நடிகையர், கலைஞர்கள், திரைத் தொழில் நிபுணர்கள் ஆகியோருக்கும், இந்தப் படத்தை ஒரு துணிச்சலான முயற்சி யாக எடுத்துக்கொண்டு, திரைப் படத்தைத் திறம்பட முடித்துக் கொடுத்துள்ள ஜி.வி. பிலிம்ஸ் நிறுவனத்தினருக்கும், என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் திரைப்படம் மக்கள் மனதைத் தொட்டு, மதுவிலக்குக் கொள்கை, சமுதாயத்தின் அனைத் துத் தரப்பினராலும் ஏற்றுக்கொள் ளப்படும் என்று நம்புகின்றேன். தமிழக அரசின் மதுவிலக்குப் பிரச் சாரத்திற்கு, இந்தத் திரைப்படம், மேலும் வலிமை சேர்க்கும் என்ப திலும் ஐயமில்லை.

இந்தத் திரைப்படத்திற்குக் 'கேளிக்கை வரி' விலக்கு அளிக்கப் பட்டுள்ளது. தமிழக அரசுக்காக ஜி.வி. பிலிம்ஸ் நிறுவனத்தார், சிக்கனமாகச் செலவு செய்து, இந்தத் திரைப்படத்தைத் தயாரித்ததோடு மட்டுமன்றி, 30 பிரிண்டுகள் எடுப்பதற்கான செலவையும், இந்தத்

திரைப்படத்தை விளம்பரப்படுத்துவதற்கான செலவையும் சேர்த்து, மொத்தம் 88 இலட்சம் ரூபாயில் முடித்துள்ளார்கள் என்பதை அறிந்து, மகிழ்ச்சி அடைகிறேன்.

ஜி.வி. பிலிம்ஸ் நிறுவனத்தார், தமிழ்நாட்டின் பெரும்பாலான மாவட்டங்களில், இந்தத் திரைப் படத்தைத் தங்களது சொந்தப் பொறுப்பில் வெளியிடவும் முன் வந்துள்ளார்கள். படம் வெளியிடப் பட்ட 90 நாட்களுக்குள், இதற்காக அரசு செலவு செய்த 85 இலட்சம் ரூபாயும் அரசிடம் திருப்பிக் கொடுக் கப்படும் என்ற நம்பிக்கையையும் தெரிவித்துள்ளார்கள். இந்தச் செய்தி நிதி அமைச்சர் அவர்களுக்கு மகிழ்ச்சியான செய்தியாக இருக்கும் என நம்புகிறேன்.

இந்தத் திரைப்படம் முக்கியமாக, மக்களிடையே ஒரு மாபெரும் மன மாற்றத்தை ஏற்படுத்துவதோடு மட்டு மல்லாமல், வசூலிலும் ஒரு சாத னையை நிகழ்த்த வேண்டும் என்ற என் விருப்பத்தினை, இந்த நேரத் தில் தெரிவித்துக் கொள்வதுடன், இந்தத் திரைப்படம் படைக்கப்பட்ட தன் நோக்கம் நிறைவு பெறும் வகையில், தமிழக மக்கள் இதனைக் கண்டுகளித்துப் பயன்பெற வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறேன்.

இந்தத் திரைப்படம் வெற்றிகர மாக நூறு நாட்கள் ஓடி, நூறாவது நாள் விழாவில் நான் பங்கு கொண்டு இப்படத்தின் வெற்றிக்கு உழைத்த அனைத்துக் கலைஞர்களுக்கும் என் கரங்களால் வெற்றிக் கேடயங்களை வழங்க வேண்டும் என்னும் என் விருப்பத்தைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

அடுத்து, ஜி.வி. பிலிம்ஸ் அதிபர் திரு. ஜி. வெங்கடேஸ்வரன் அவர்கள் நன்றி நவின்றார்.

அதைத் தொடர்ந்து 'நீங்க நல்லா இருக்கணும்' திரைப்படம் திரை யிட்டுக் காட்டப்பட்டது. மாண்புமிகு முதல்வர் அவர்களும், அமைச்சர் பெருமக்களும் இறுதி வரை இருந்து திரைப்படத்தைக் கண்டு களித் தார்கள்.

இத்திரைப்படம் 27.11.92 முதல் தமிழகமெங்கும் திரையிடப் பட்டது.

- நிகழ்ச்சித் தொகுப்பு:
என். இளங்கோ.

# தமிழகத்துக்கு ரூ.54 கோடி விவசாய மானியம்

சிறு விவசாயிகளுக்கு உதவும் திட்டங்களை நிறைவேற்ற தமிழ்நாட்டுக்கு மத்திய அரசு ரூ.53.82 கோடி மானியம் ஒதுக்கியுள்ளது. இதன்மூலம் தமிழ்நாட்டிலுள்ள 42 இலட்சம் சிறு விவசாயிகள் பயன் பெறுவர்.

உர விலை உயர்வால் அவதிப்படும் விவசாயிகளுக்கு உதவும் விவசாயத் திட்டங்களுக்கு மானியம் வழங்க மாண்புமிகு இந்தியப் பிரதமர் அறிவித்த ரூ.500 கோடியிலிருந்து இந்த மானியம் ஒதுக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் விடுத்த வேண்டு கோளை ஏற்று மத்திய அரசு தமிழகத்துக்கு இந்நிதியை ஒதுக்கீடு செய்திருக்கிறது.

மத்திய அரசின் இந்த நிதி ஒதுக்கீட்டைப் பயன்படுத்தி சிறு விவசாயிகள் பயன்பெறும் விதத்தில் 9 திட்டங்களை நிறைவேற்ற, தமிழக அரசு முடிவு செய்துள்ளது. உயர்ரக விதைகள் உற்பத்தி செய்து கூடுதலாக இருப்பு வைத்தல், உரம் கிடைக்காத பகுதிகளுக்கு எளிதில் உரம் கிடைக்க சிறந்த உர சேமிப்புக் கிடங்குகளையும் மண் ஆய்வு மையங்களையும் நிறுவுதல், சிறிய டிராக்டர்களுக்கு மானியம் வழங்குதல், உரத் தரக் கட்டுப்பாடு நிறுவனத்தை மேம்படுத்துதல், ஆழ்குழாய் வடிமுனைக் குழாய்க் கிணறுகளை அமைத்தல், பழம்-காய்கறி உற்பத்தியாளர் சங்கங்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் போன்ற திட்டங்கள் இதில் அடங்கும்.

இந்தத் தகவலை மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. கு.ப.கிருஷ்ணன் அவர்கள் அண்மையில் சென்னையில் செய்தியாளர்கள் கூட்டத்தில் தெரிவித்தார்.


# நீலப் புரட்சி

பசுமைப் புரட்சி, வெண்மைப்புரட்சி பற்றி பெரும்பாலானோருக்கும் தெரியும். ஆனால் நீலப் புரட்சி பற்றி எத்தனைப் பேருக்குத் தெரியும்?


மீன் பிடித் தொழிலில் சாதனை படைப்பதையே நீலப் புரட்சி என்கிறோம். 7,500 கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரையும், இருபது இலட்சம் சதுர கிலோ மீட்டர் நீளக்கடல் பரப்பும் கொண்ட இந்தியா, ஆழ்கடல் மீன் பிடிப்பில் முன்னேறி வருகிறது.

இந்தியக் கடற் பகுதியில் 39 இலட்சம் டன் மீன் வளம் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இதில் 50 சதவிகித மீன்கள் மட்டுமே பிடிக்கப் பட்டு வருகிறது. ஆனால், ஆழ்கடலிலுள்ள செதில் மற்றும் சிப்பி மீன்கள் இன்னும் முழுவது மாகப் பிடிக்கப்படவில்லை.

மீன் வளத்தைப் பயன்படுத்திக் கொள்வதற்காக, மீன்பிடித் துறைகள், குளிர் சாதனம் மற்றும் பதனப்படுத்தும் வசதிகளை அரசு ஏற்படுத்தி வருகிறது.




புரட்சித்தலைவி டாக்டர் ஜெயலலிதா










## பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்

ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும், சத்துணவுக் கூடங்களிலும்- பெண் சிசுக்களுக்காகத் தொட்டில்கள் அமைத்துள்ளது அரசு.






**கா**மராசர் மாவட்டம், இராச பாளையத்தில் உள்ள முடிதிருத்து வோர் கூட்டுறவுச் சங்கம், நகராட் சிப் பகுதியை எல்லையாகக் கொண்டு *20.6.1966* அன்று பதிவு செய்யப்பட்டு *24.6.1966* முதல் செயல்பட்டு வருகிறது.

**அங்கத்தினர்களும், பங்கு மூலதனமும்**

சங்கத்தில் *172* மருத்துவ குலத் தொழிலாளர்கள் அங்கத்தினர் களாக உள்ளனர். ரூ.*10,115* பங்கு மூலதனத்துடன் இச்சங்கம் இயங்கி வருகிறது.

**நோக்கமும், செயல்பாடும்**

அங்கத்தினர்களின் சுயவேலை வாய்ப்புக்குக் கருவிகள் வாங்கிட வும், முன்கடனைத் தீர்க்கவும் கடன் உதவி செய்வது இச்சங்கத்தின் முக்கிய நோக்கமாகும். தொழிற் கருவிகள் வாங்கவும் முன்கடன் தீர்க்கவும் இராமநாதபுரம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் மூலம் இதுவரை *66* அங்கத்தினர்களுக்குத் தலா ரூ.*1,000* வீதம் ரூ.*66,000* மத்திய காலக் கடனாக வழங்கப் பட்டுள்ளது. இதில், தற்போது *61* அங்கத்தினர்களிடமிருந்து ரூ.*50,361.65* நிலுவையாக இருக் கிறது. மத்திய வங்கிக்குச் சங்கம் செலுத்த வேண்டிய கடன் நிலுவை மட்டும் ரூ.*28,847* ஆகும்.

குளிரூட்டப்பட்ட முடிதிருத்தகம் ஒன்றும், நவீன முடிதிருத்தகம் ஒன்றும் சங்கத்தால் இங்கே நடத்தப் பட்டு வருகிறது. இதன் மூலம் *6* அங்கத்தினர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. இச்சலூன்கள் மூலம் சராசரியாக மாதந்தோறும் ரூ.*3,000* முடிதிருத்தகச் சங்கத் திற்குக் கிடைத்துவருகிறது.

**அரசு உதவி**

சங்கம் நடத்திவரும் சலூன் களுக்குத் தேவையான தொழிற் கருவிகள் மற்றும் குளிர்சாதன இயந்திரம் வாங்கிடத் தமிழக அரசு ரூ.*11,000* மானியமாக வழங்கியுள் ளது. மேலும், சங்கத்தின் செயல் திறனை அதிகரிக்கும் பொருட்டு இராசபாளையம் மற்றும் திருவில்லி புத்தூர் முடிதிருத்துவோர் கூட்டுற வுச் சங்கங்களுக்கு இளநிலை ஆய் வாளர் பணியிடம் ஒன்றை இல வசப் பணி அடிப்படையில் தமிழக அரசு வழங்கி சங்க வளர்ச்சிக்கு உதவி வருகிறது.

இச்சங்கத்திற்கு, *1990-91*-ஆம் ஆண்டிலிருந்து மொத்த நட்டம், ரூ.*40,690.56*-ஐ, *1991-92*-ஆம் தணிக்கையாண்டில் ரூ.*8,632.20* நிகர லாபமாக ஈட்டி மொத்த நட்டத்தை ரூ.*32,058.36* ஆகக் குறைத்து, தற்போது நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது.

## திருவில்லிபுத்தூர்

**தி**ருவில்லிபுத்தூர் நகராட்சிப் பகுதியிலும் அதேபோல் ஒரு முடி திருத்துவோர் கூட்டுறவுச் சங்கம் செயல்பட்டு வருகிறது.

**அங்கத்தினர்களும், பங்கு மூலதனமும்**

சங்கத்தில் *77* மருத்துவ குலத் தொழிலாளர்கள் அங்கத்தினர் களாக உள்ளனர். இச்சங்கம் ரூ.*3,461* பங்கு மூலதனத்துடன் செயல்பட்டு வருகிறது.

**நோக்கமும், செயல்பாடும்**

அங்கத்தினர்களின் சுயவேலை வாய்ப்புக்குக் கருவிகள் வாங்கிட வும், முன் கடனைத் தீர்க்கவும் கடன் உதவி செய்வது இச்சங்கத்தின் முக்கிய நோக்கமாகும். தொழிற் கருவிகள் வாங்கிட அங்கத்தினர் களுக்கு ரூ.*12,500*-ஐ தமிழக அரசு வட்டியில்லாக் கடனாக வழங்கி உள்ளது. இதில், தற்போது *52* அங்கத்தினர்களிடமிருந்து வசூலிக் கப்பட வேண்டிய கடன் நிலுவை யாக ரூ.*8,222.52* உள்ளது. சங்கம் அரசுக்குச் செலுத்த வேண்டிய கடன் நிலுவை ரூ.*3,250* ஆகும்.

சங்கம் நவீன முடிதிருத்தகம் ஒன்றை நடத்தி வருகின்றது. இதன் மூலம் 2 அங்கத்தினர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கி வருகிறது. இதன் மூலம் சராசரியாக மாதந்தோறும் ரூ.*1,000* வருமானமாகச் சங்கத் திற்குக் கிடைத்துவருகிறது.

**அரசு உதவி**

சங்க அங்கத்தினர்களுக்குத் தொழிற்கருவிகள் வாங்குவதற்காக ரூ.*12,500*-ஐ வட்டியில்லாக் கடனாகவும், ரூ.*5,000*-ஐ மானிய மாகவும் தமிழக அரசு வழங்கியுள்ளது. சங்கத்தின் செயல் திறனை மேலும் அதிகரிக்க இராச பாளையம் மற்றும் திருவில்லி புத்தூர் முடிதிருத்துவோர் கூட்டுற வுச் சங்கங்களுக்கு இளநிலை ஆய் வாளர் பணியிடம் ஒன்றை இலவசப் பணி அடிப்படையில் தமிழக அரசு வழங்கி, சங்க வளர்ச்சிக்கு உதவி வருகிறது.

திருவில்லிபுத்தூர் முடிதிருத்து வோர் கூட்டுறவுச் சங்கத்திற்கு *1990-91*-ஆம் ஆண்டிலிருந்த மொத்த நட்டம் ரூ.*1,248.94* ஆகும். ஆனால் *1991-92*-ஆம் தணிக்கையாண்டில் ரூ.*1,714.82* நிகரலாபமாக ஈட்டி மொத்த நட் டத்தை ரூ.*12,482.94* ஆகக் குறைத்து, தற்போது நல்ல முறையில் இச்சங்கம் செயல்பட்டு வருகிறது.



# கூட்டுறவு

கவிஞர் முருகுவண்ணன்

வானத்தில் நீள்வட்டப் பாதையிலே-நாம்
வாழும் உலகிது சுற்றிவரல்...
வானத்தில் ஞாயிற்றைச் சுற்றிவரும்-எட்டுக்
கோள்கள் இழைமண்டும் கூட்டுறவு!

உப்புக் கடல்நீரும் வெங்கதிரும் - கொண்ட
கூட்டுறவே வள்ளல்நேர் மாமழையாம்!
உப்பில் உணவுப் பொருள்களெல்லாம் - நல்ல
உழவர் - நிலமகள் கூட்டுறவாம்!


இளமை - உடல்நலக் கூட்டுறவே - காதல்
இன்பமும் இல்வாழ்க்கை ஆக்கமுமாம்!
வளர்ஞானம் - கற்பனைக் கூட்டுறவே - நலம்செய்
அறிவியலும் வாழும் கலைகளுமாம்!

வீட்டிலே உள்ளவர் கூட்டுறவே — என்றும்
இல்லற மேன்மை இலக்கியமாம்!
நாட்டிலே உள்ளவர் கூட்டுறவே - உயர்
நாட்டின் பெருமைக்கு இலக்கணமாம்!

எத்துறை யாயினும் - எவர் ஆயினும்
உயர்வெல்லாம் ஈவது கூட்டுறவே!
அத்துணைப் பெருக்கும் கூட்டுறவே - வாழ்வில்
அகமகிழ்(வு) இன்பம்சேர் வாய்ப்புகளாம்!

டிசம்பர்: 9 பிறந்த நாள் நினைவாக...

# மூதறிஞர் இராஜாஜி



இடைவிடாத முயற்சியும், தாம் கொண்டுள்ள கொள்கையில் உறுதியும், தன்னம்பிக்கையும், தளராத ஊக்கமும், நன்னடத்தையுமே ஒருவரைக் குன்றின்மேல் விளக்காக உயர்த்திவிடும். இவை எல்லாமே ஒருவரிடம் அமையப் பெறுவது அபூர்வம் என்பார்கள்.

ஆனால், அவையெல்லாம் கொண்டு உயர்ந்தவர்களையே பெரியோர் போற்றுவர்; மதிப்பர். இதில் சந்தேகமே இல்லை!

அப்படிப் போற்றிப் புகழப்பட்டவர்தான், பெரிதும் மதிக்கப்பட்டவர்தான் சி. ராஜகோபாலாச்சாரியார்.

'தான் கொண்டுள்ள கருத்தில் உறுதியும், எடுத்த செயலை ஏற்றமுடன் செய்து முடிக்கும் திறமையும், மன உரமும், அடக்கமும், அன்பும், விடா முயற்சியும் கொண்டவர்தாம் என்னுடைய அன்பிற்குரிய இராஜாஜி' — என்று மகாத்மா காந்தியடிகளே அவரை மனம் திறந்து பாராட்டியிருக்கிறார்.

இப்போது தர்மபுரி மாவட்டத்தில் உள்ள ஓசூருக்கு அருகில் இருக்கும் தொரப்பள்ளி என்னும் கிராமம், சேலம் மாவட்டத்தைச் சேர்ந்ததாக இருந்தது ஒரு காலத்தில். அங்கு, சக்கரவர்த்தி ஐயங்காருக்கும் சிங்காரம் அம்மையாருக்கும் மூன்றாவது புதல்வராகப் பிறந்தவர்தான் இராஜகோபாலாச்சாரியார்.

*1878* டிசம்பர் 9-ஆம் நாள் பிறந்த இவர்தான், பிற்காலத்தில் நாட்டு மக்களால் 'இராஜாஜி' என்று மிகுந்த மரியாதையோடு அழைக்கப்பட்டார். பெற்றோர் இவருக்கு இட்ட பெயரோ இராஜகோபாலன் என்பதாகும்.

என்ன புத்தகமானாலும் எடுத்துப் படிக்கும் குணம் இளமைக் காலத்திலேயே இவரிடம் அமைந்திருந்தது.

ஏழு வயது வரை தன் தந்தையாரிடமே பால பாடம் பயின்ற இவர், அதன் பிறகே, பள்ளியில் சேர்க்கப்பட்டார்; பின்னர், பெங்களூரில் உள்ள இலண்டன் மிஷன் பாடசாலையிலும், அங்குள்ள சர்வகலாசாலையிலும் என்று இவருடைய படிப்புத் தொடர்ந்தது.

எதுவானாலும் படிப்பது-படித்ததில் சிறந்ததை மனதில் பதிய வைத்துக் கொள்ளுவது என்னும் நல்ல பழக்கத்தினாலேயே, பதினெட்டு வயதுக்குள்ளாக பி.ஏ. பட்டம் பெற இவருக்கு முடிந்தது. கல்லூரிப் பாடம் ஆயிற்று; வாழ்க்கைப் பாடத்தில் தேர்ச்சிபெற வேண்டாமா?

அலர்மேல் மங்கை என்பாரை இராஜாஜிக்கு மணம் முடித்து வைத்தார்கள் பெற்றோர்.

குடும்பமும் ஆயிற்று; வளமான குடும்பமே எனினும் செலவுக்கு வருவாய் தேட வேண்டாமா?

வழக்கறிஞர் தொழிலே வளமான தொழில் எனப் பலராலும் மதிக்கப்பட்ட அந்நாளில், இவருக்கும் அப்படியோர் ஆசை ஏற்பட்டது. சொல்வன்மையும், சோர்வின்மையும், வாதத்திறமையும், 'எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காணும்' ஆற்றலும் இயற்கையாகவே வாய்க்கப் பெற்றிருந்த இராஜாஜி, சென்னை சட்டக் கல்லூரிக்கு வந்து சேர்ந்தார்.

அப்போது, சென்னைக்கு வருகை தந்த சுவாமி விவேகானந்தரோடு இராஜாஜிக்கு மிகுந்த ஈடுபாடு உண்டாயிற்று. அதன் காரணமாக அளவற்ற இறையுணர்வும், தேசிய உணர்வுகளும், தியாகச் சிந்தையும் இராஜாஜிக்கு ஏற்படலாயின.

சட்டத் தேர்வில் பி.எல். பட்டம் பெற்றாயிற்று. பின்னர், சேலத்தில் இவருடைய வழக்கறிஞர் தொழில் தொடங்கப்பட்டது.

எதையும் நுணித்தாராய்ந்து இவர் செய்யும் வாதத் திறமை எல்லோரையும் கவர்ந்தது. தொழில் நேர்த்தி காரணமாகப் புகழும் பொருளும் பெருகின. ஆனாலும்,

அநீதியை நீதியாக நிரூபிக்க இவர் அஞ்சினார். நீதி தம் பக்கம் இருந்தும் வழக்காடப் பொருளுதவி இல்லாது தவித்த ஏழை எளிய மக்களுக்கு இலவசமாகக்கூட வழக்கு நடத்தி வாதிட்டுத் துணை புரிந்தார்.

இவ்வாறான பண்புகளால் மக்களிடம் இவருக்கு மிகுந்த செல்வாக்கு ஏற்பட்டது. இதனால், நகரசபைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி கண்ட இராஜாஜி, சேலம் நகராட்சித் தலைவரானார்!

ஐயங்காராகப் பிறந்திருந்தாலும், தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களின் முன்னேற்றத்தில் இவர் பேரார்வம் காட்டினார். அலுவலகங்களிலும், கல்வி நிலையங்களிலும் அவர்களுக்கெல்லாம் போதுமான இடம் கிடைக்கப் பேருதவி செய்தார்.

தன்னுடைய சமுதாயமே ஒதுக்கி வைக்கிற அளவுக்கு இத்தகைய சீர்திருத்தச் செயல்களில் தீவிரமாக இருந்தார். இந்தத் தீவிரமே, பிற்காலத்தில் இவர் தமிழகத்தின் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பின், அரிசன மக்களின் ஆலயப் பிரவேசச் சட்டத்தை இயற்றச் செய்தது.

தன் இனத்தார் தன்னை ஒதுக்கி வைக்குமளவில் தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னேற்றத்தில் இவருடைய ஆர்வம் அளவற்றதாயிருந்தது.

காந்தியாரின் கொள்கையிலும், கதரியக்கத்திலும் இராஜாஜிக்கிருந்த பற்று, 1917-இல் காந்தியடிகளை நேரில் சந்தித்த பின்னர் இன்னும் பெருகியது. இதன் காரணமாக நகராட்சித் தலைவர் பதவியைத் துறந்து, காங்கிரஸ் கட்சியின் உறுப்பினராகி இந்திய விடுதலைப் போராட்டத்தில் தானும் இணைந்தார். வெள்ளை ஏகாதிபத்தியம் இவருடைய வேகமும் விவேகமும் கண்டு கதிகலங்கி வேலூர்ச் சிறையில் இராஜாஜியை அடைத்து வைத்தது.

'காலம் பொன் போன்றது கடமை கண் போன்றது' என்ற கருத்துடையவரான அவர், சிறை வாசத்தையும் வீணே கழிக்கவில்லை! 'இராஜகோபாலாச்சாரியாரின் சிறை வாசம்' என்றொரு புத்தகத்தை எழுதி முடித்தார் அங்கே!

அந்த அருமையான புத்தகம், 'என்று தணியும் இந்த சுதந்திர தாகம்' என்கிற வேகத்தை நாட்டு மக்களிடையே உண்டாக்குவதாக அமைந்திருந்தது.

இத்தகைய எழுத்தாற்றல், சில காலம் காந்தியடிகளாரின் 'யங் இந்தியா' ஏட்டிலே பொறுப்பாசிரியராகவும், 'விமோசன்' என்ற பத்திரிகையின் ஆசிரியராகவுமே இவரை விளங்கிடச் செய்தது.

1925-ஆம் ஆண்டில் திருச்செங்கோட்டுக்கு அருகில் உள்ள புதுப்பாளையத்தில் 'காந்தி ஆசிரமம்' நிறுவி அதன் தலைமைப் பொறுப்பேற்றுத் திறம்படச் செயல்பட்டார் இராஜாஜி. அந்நாளில் கதர்த் தொழிலின் வளர்ச்சி, மது விலக்கு, தீண்டாமை ஒழிப்பு ஆகியவற்றுக்

## நினைவில் இராஜாஜி

**1973**- டிசம்பர் 25 அன்று இராஜாஜி நினைவு 20 காசு அஞ்சல் தலையை மைய அரசு வெளியிட்டுச் சிறப்பித்தது.

அதே நாளில் இராஜாஜி நினைவு 25 காசு அஞ்சல் தலையையும் மைய அரசு வெளியிட்டுச் சிறப்பித்தது.

**1975**- சென்னை கிண்டி படேல் சாலையில் காந்தி மண்டபம் அருகில் இராஜாஜி நினைவாலயம் தமிழக அரசால் கட்டப்பட்டு, 5.5.1975 அன்று திறக்கப்பட்டது. இராஜாஜி வாழ்க்கை நிகழ்ச்சிகள் தொடர்பான படங்களும், இராஜாஜி பற்றிய நூல்களும் நினைவாலயத்தில் வைக்கப்பட்டுள்ளன. அண்மையில் நூலகக் கட்டிடமும் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

### இராஜாஜி நினைவு இல்லம்

**1978**-தர்மபுரி மாவட்டம், தொரப்பள்ளியில் இராஜாஜி பிறந்த வீட்டை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் அரசுடைமையாக்கி, 10-12-1978 அன்று நினைவு இல்லமாக மாற்றினார். இராஜாஜி வாழ்க்கை வரலாற்றை விளக்கும் புகைப் படங்கள் அங்கு நிரந்தரமாக வைக்கப்பட்டுள்ளன.



சென்னை உயர்நீதிமன்றத்துக்கருகில் இராஜாஜி சிலை 24.12.78 அன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வடக்குக் கடற்கரைச் சாலைக்கு இராஜாஜி சாலை என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் இராஜாஜி முழு உருவப்படம் அணி செய்கிறது.

காகப் பெருமுயற்சி எடுத்துக் கொண்டு பாடுபட்டார்.

1930-இல், வெள்ளையர் ஆட்சியை எதிர்த்து காந்தியடிகள் உப்புச் சத்தியாக்கிரகம் தொடங்கினார், அப்போது வேதாரண்யத்திலும், தண்டியிலும் சட்டத்தை மீறி தலைமை தாங்கி உப்புக் காய்ச்சிய பெருமை இவருடையது.

1937-ஆம் ஆண்டு தேர்தலின் பின், சென்னை முதலமைச்சராகப் பதவி வகித்த இராஜாஜி, முதன் முதலாக மது விலக்குச் சட்டத்தைச் சேலம் மாவட்டத்தில் கொண்டு வந்து மக்கள் மது அரக்கனின் கோரப்பிடியில் சிக்குவதை அடியோடு தவிர்த்தார். விவசாயக் கடன் நிவாரண மசோதாவை மிக்க துணிவுடன் கொண்டுவந்து விவசாயிகளின் துயர் துடைத்தார்.

அப்போது இவர் செய்த துணிச்சலான காரியம் ஒன்று, ஆங்கிலேயர்களையே அதிரவைப்பதாக இருந்தது.

சென்னையில், அப்போது மவுண்ட் ரோடாக இருந்த அண்ணா சாலையில், அரக்க குணம் படைத்த ஆங்கிலத் தளபதியின் சிலையொன்று வைத்திருந்தார்கள். அதை இரவோடு , இரவாகக் கொண்டு போய் பொருட்காட்சி சாலையில் வைக்கும்படி செய்து விட்டார் இராஜாஜி.

அவரது இந்தத் துணிவுகண்டு ஆங்கிலத் துரைத்தனம் மிரண்டது; இந்தியப் பெருமக்கள் மகிழ்ந்தார்கள்.

காந்தியார் மூட்டிவிட்ட சுதந்திரக் கனலின் சூடு பொறுக்காத வெள்ளையர்கள், நம் இந்தியத் திருநாட்டுக்கு விடுதலை வழங்கினர். 1946-இல் உருவான இந்திய அரசின் இடைக்கால அமைச்சரவையில் இராஜாஜியும் அங்கம் வகிக்கும் பேறு பெற்றார்.

1947 ஆகஸ்ட் 15-ஆம் நாளன்று இந்தியாவில் சுதந்திரச் சூரியன் உதயமானது. அதன்பின்- 1948 முதல் 1950-ஆம் ஆண்டு வரையிலே, இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரலாகப் பதவியேற்று பார் புகழ நிர்வகித்த முதலாவது இந்தியக் குடிமகன் இவரே!

1952-இல் தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பதவியேற்ற இராஜாஜி 'மூதறிஞர்' எனக் கற்றறிவாளர்களால் போற்றிப் புகழப் பட்டார்.

பல்வேறு பிரச்சினைகளின் அடிப்படையில், போராட்டங்கள் பல வெடித்தன. அமைதியான அணுகுமுறையால் அவற்றையெல்லாம் வெற்றி கண்டார். விற்பனை வரிச்சட்டம், விவசாய நிலக் குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டம் ஆகியவைகளை இயற்றினார்.

அவர் முதலமைச்சராக இருந்து நாடாண்ட காலத்தில், தமிழகம் நல்லபல முன்னேற்றங்களைக் கண்டது. வளர்ச்சிப் பணிகளைப் பெற்றது.

காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்கள் சிலருக்கும் இராஜாஜிக்கும் நாளடைவில் கருத்து மோதல்கள் ஏற்படலாயின; கொள்கைக் குழப்பங்கள் ஏற்பட்டன. போராட்டமே வாழ்க்கையாக வாழ்ந்த இவர், அக்கட்சியை விட்டுவிலகி 1959-ஆம் ஆண்டில் அகில இந்திய சுதந்திரக் கட்சியைத் துவக்கினார்.

அக்கட்சி துவக்கப்பட நேர்ந்த காரணம், இனிச் செயல்படவிருக்கும் விதம் ஆகியவை பற்றி 'கல்கி' என்கிற தமிழ் ஏட்டிலும், 'சுதந்திரா' என்னும் ஆங்கில ஏட்டிலும் தொடர்ந்து எழுதிவரலானார்.

அப்போது காங்கிரஸ் கட்சி ஆளுங்கட்சியாக இருந்தது. நாடாளுமன்றத்தில், நன்முறையில் அதை எதிர்த்து நின்று வெல்லக்கூடிய சக்தியுடையதாக சுதந்திரக்கட்சியை உருவாக்கும் அவரது முயற்சி ஏனோ முழு வெற்றிதரவில்லை. ஆகவே, அக்கட்சியானது தனித்தியங்கும் தன்மையை இழந்து பலவீனப்பட நேர்ந்தது.

தமிழிலும், ஆங்கிலத்திலும் எழுத்தாற்றலும் பேச்சாற்றலும் மிகுதியாகப் பெற்றிருந்தவர் 'பாரத ரத்னா' பட்டம் பெற்ற இராஜாஜி.

'கண்ணன் காட்டிய வழி', 'சக்கரவர்த்தித் திருமகன்', 'வியாசர் விருந்து', 'குடி கெடுக்கும் கள்', 'உப நிடதப் பலகணி', 'சிசு பரிபாலனம்', 'தாவரங்களின் இல்லறம்', 'திண்ணை இராமாயணம்' போன்ற பல அருந்தமிழ் நூற்கள் தமிழிலக்கியத்திற்கு அவரால் அளிக்கப்பட்ட அருஞ் செல்வங்களாகும். ஏராளமான சிறுகதைகளையும் அவர் கருத்துக் கருவூலமாகப் படைத்தளித்திருக்கிறார்.

இத்தனை அருமை பெருமைகளுக்கு உரியவரான மூதறிஞர் இராஜாஜி அவர்கள், 25.12.'75-ல், சென்னையில் இயற்கை எய்தினார்.

நாடு நலம்பெறப் பாடுபட்ட அந்த நல்லறிஞர் இன்றில்லை என்றாலும், அவரது புகழ் என்றும் நின்று நிலவுமன்றோ?

—பி.எல். இராஜேந்திரன்




## மூதறிஞர் இராஜாஜி பொன்மொழிகள்

பள்ளிக்கூடங்கள் தேசத்தில் எத்தனை இருந்தாலும், பண்பாட்டுக்குப் பள்ளிக்கூடம் வீடேயாகும்.

நம்முடைய தேகமும், உள்ளமும் ஆண்டவனுடைய கோயில். அதைச் சுத்தமாக வைத்துக் காப்பது நம் கடமை.

வாழ்க்கையில் தைரியமாக இருப்பதைவிட மகிழ்ச்சி அளிக்கக் கூடிய விஷயம் வேறு என்ன இருக்க முடியும்!

எவ்வளவு கல்வியும் செல்வமும் இருந்தாலும், அடக்கம் இல்லாவிடில் பண்பாடென்பது இல்லை.




# அயராது உழைக்கும் அஞ்சல் துறை

அயராது உழைக்கும் துறைகளில் அஞ்சல் துறையும் ஒன்று. தமிழ்நாட்டில் மட்டும் 12,157 அஞ்சல் நிலையங்கள் மக்கள் பணியில் ஈடு பட்டுள்ளன. இவற்றில் 10,075 நிலையங்கள் கிராமப் பகுதிகளில் அமைந்துள்ளன. இந்த ஆண்டு கூடுதலாக 42 அஞ்சல் நிலையங்கள் திறக்கப்படவுள்ளன.

விரைவு அஞ்சல் சேவை நல்ல வரவேற்பைப் பெற்று வருகிறது. நாட்டில் முதன்முறையாக 1.8.1986 முதல் இச்சேவை தொடங்கப்பட்டது. நாடு முழுவதிலும் 62 நகரங்களுக்கும், 48 வெளி நாடுகளுக்கும் இவ்வசதி உள்ளது.

கடந்த ஆண்டு விரைவு, அஞ்சல் சேவைப் பட்டுவாடா 211 சதவிகிதம் அதிகரித்தது. வருமானம் 58 சதவிகிதம் உயர்ந்தது.

சென்னையில் சில இடங்களில் பலவண்ண அஞ்சல் பெட்டிகள் வைக்கப்பட்டு உள்ளன. மாவட்ட ரீதியாக அஞ்சல்களை இதில் போட லாம். அஞ்சல் பிரிப்பகப் பணியை எளிதாக்க இது உதவுகிறது.

பண்டிகைக் காலங்களில் வாழ்த்து அஞ்சல் களை முன்னதாகவே போட்டால், பட்டுவாடா சிரமமின்றி நடக்கும். அதேபோலப்பெரிய அளவு வாழ்த்து அட்டைகளுக்குப் பதிலாக, நடுத்தர அளவு அட்டைகளை அனுப்பி அஞ்சல் துறைக்கு உதவலாம்.

## அஞ்சல்

நாடு சுதந்திரம் அடைந்த சமயம் (1947-48) 23,341 ஆக இருந்த அஞ்சலகங்களின் தற் போதைய (1990-91) எண்ணிக் கையோ 1,48,719; இதில் 1,32,646 கிராமப்புறத்திலும், 16,073 நகர்ப்புறத்திலும் அமைந் துள்ளன. ஒரு அஞ்சலகமானது சராசரியாக 22.10 சதுர கி.மீட்டர் சுற்றுப்புறத்திற்கும், 4,607 மக்களுக் கும் செயலாற்றுகிறது. இது, சர்வ தேச அஞ்சல் அமைப்பின் கோட் பாடுகளுக்கு (20-40 சதுர கி. மீட்டர் அல்லது 3,000-4,000 மக்கள்) உட்பட்டுள்ளது.

நாட்டில் மொத்தம் 5,20,000-க் கும் மேற்பட்ட அஞ்சல் பெட்டிகள் உள்ளன. அஞ்சலைக் கையாளு வதற்காக 548 மெயில் அலுவல கங்கள் செயல்படுகின்றன. சாலை, இரயில் மற்றும் ஆகாய மார்க்கமாக அஞ்சல் அனுப்பப்படுகிறது.

• குடி என்பது வளர்ந்து கொண்டே வரும் சமூகத் தீமை!

- மகாத்மா காந்தியடிகள்

# 200 ஆண்டுகளுக்கு முற்பட்ட தென்காசிப் பாண்டியர் செப்பேடுகள் கண்டுபிடிப்பு!

ஸ்ரீவலவரகுணராம பாண்டியனின் காலத்தில், காஞ்சிபுரத்துக் கைலாசப் பரம்பரையைச் சேர்ந்த சிவந்தபாதமூருடைய தேசிகருக்கு அமைத்துக் கொடுத்ததைக் குறிக்கிறது. மதுரைச் சொக்கநாதரின் திருவிளையாடல்களுள் ஒன்றான வலைவீசு புராணம் இச்செப்பேட்டில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

இதே ஆண்டில் எழுதப்பட்ட அடுத்த செப்பேட்டில் முதலில் ஐந்து வரிகள் கிரந்தத்திலும் பின்னர் தமிழிலும் எழுதப்பட்டுள்ளன. சிவபூசையின் சிறப்பு, சிவபக்தி விரதங்களின் மகிமை ஆகியவை காணப்படுகின்றன. கிருஷ்ண அவதாரம், காஞ்சி கைலாயப் பரம்பரையினரின் மரபு, தென்காசியில் சிவாலய மடம் அமைத்த குறிப்பு,பாரிமகளிர் திருமணம்,

18-ஆம்நூற்றாண்டில் தென்காசிப் பகுதியில் ஆண்டு வந்த பாண்டியர் தம் செப்பேடுகள் மூன்றும்,நாயக்க மன்னன் விஜயரங்க சொக்கநாதர் காலத்துச் செப்பேடு ஒன்றும் ஆக நான்கு செப்பேடுகள் கண்டறியப்பட்டுள்ளன.

தென்காசியைச் சேர்ந்த திரு.பி என்.முனுசாமி நாயுடு அவர்களிடம் இருந்த இச்செப்பேடுகளைத் தமிழ்நாடு அரசு தொல் பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் திரு. நடன காசிநாதன் அறிவுரையின்படி, துறையின் காப்பாட்சியர்கள், திரு.சந்திரவாணன்,மற்றும் திரு.வெ.வேதாசலம் ஆகியோர் சென்று பார்த்து, துறைக்குப் பெற்றுள்ளனர்.

முதல் செப்பேடு கி.பி.1753-இல் எழுதப்பட்டுள்ளது. தென்காசி விஸ்வேஸ்வரர் சன்னதியில் அபிஷேகமடம் ஒன்றினை

முச்சங்கம் அமைப்பு போன்ற பல குறிப்புகளை இச்செப்பேடு தருகின்றது. மெலும், வரதுங்கப் பாண்டிய மன்னனால் எழுதப் பெற்ற பிரம்மோத்திரக்காண்டம், கருவை அந்தாதி, கருவை வெண்பா ஆகிய நூல்களையும், அதிவீரராமப் பாண்டியனால் எழுதப்பெற்ற நளன் கதை, வெற்றி வேற்கை,காசிக்காண்டம் ஆகிய நூல்களையும் தெரிவிக்கிறது. சொக்கலிங்கப்பூசைக்குக் கொடுத்த வரிகளின் பெயர்கள் பலவற்றையும் இக்கல்வெட்டு கூறுகின்றது.

வளையம் கோப்பதற்கான துளையுடன் காணப்பெறும் மூன்றாம் செப்பேடு படையாட்சியர் என்ற பள்ளிகள் ஐவர் சிவனின் மழுப்படையிலிருந்து பிறந்த வரலாற்றைக் கூறி, அவர்கள் மேற்குறித்த காஞ்சி கைலாயப் பரம்பரையின் சிவந்த பாதமூருடைய தேசிகரிடம் தீட்சை பெற்றதையும் அவர்கள் அம்மடத்திற்கு அளித்த கொடையினையும் குறிக்கிறது. இவர்கள்இவ்வுலகில் இருந்த இரு அரக்கர்களையும் இலங்கை மன்னன் ஒருவனையும் கொன்றனர் என்றும் கூறுகிறது செப்பேடு.

கி.பி. 1703-இல் எழுதப் பெற்ற நான்காம் செப்பேடு, மதுரை நாயக்கர் விஜயரங்க சொக்கநாத நாயக்கரின் தளகர்த்தரான, வேங்கட கிருஷ்ண மகிபாலனின் மகனான அரங்கசாமி நாயுடு என்பவர் அளித்த கொடையினைத் தெரிவிக்கிறது. மேலப்புலியூரைச் சேர்ந்த கவிராயகுமாரப் பாரதி பண்டாரம் என்பவர் 'வாகன கவி சாகித்யம்' என்ற நூலினை எழுதியமைக்கும், குற்றாலம் லோகநாயகி சந்நிதானத்தின் ஸ்தானீகமாகப் பணியாற்றியதையும் பாராட்டி இக்கொடை அளிக்கப்பட்டது. இச்செப்பேடு தெலுங்கில் உள்ளது.

18-ஆம் நூற்றாண்டில் தமிழ் நாட்டில் சமய, பண்பாட்டுக் கூறுகளைத் தெளிவாகக்காட்டுவதோடு, காஞ்சி கைலாயப் பரம்பரையைப் பற்றிய அரிய செய்தியினையும் தருவதால் இச்செப்பேடுகள் மிக முக்கியத்துவம் பெறுகின்றன.



| | | |
|---|---|---|
| Agencies | - | முகமையாளர் |
| Booster | - | ஊக்கியம் |
| Bunk | - | கடை, பெட்டிக்கடை |
| 'Petrol Bunk | - | கல்லெண்ணெய்க் கடை) |
| Confrontation | - | எதிர்நிற்றல் |
| Chronic discase | - | விளியா நோய் |
| Corroborate | - | உறுதியூட்டு |
| Dilemma | - | தத்தளிப்பு, இருநிலைத் தவிப்பு |
| Distinction | - | சிறப்பு நிலை |
| Dock Charges | - | கப்பல்தளக் கட்டணங்கள் |
| Formality | - | முறைப்பாடு |
| Hallo | - | ஏலோ |
| Implication | - | உட்குறிப்பு |
| Indebtedness | - | கடன்பாடுகள் |
| Merit | - | தகுதி நிலை |
| Outstanding | - | மாண்சிறப்பு நிலை |
| Passed | - | ஏற்றுக்கொள்ளப்பெற்றது |
| Real Estate | - | நிலபுலச் சொத்து |
| Ribbon | - | மினிர் நாடா |
| Screen Printing | - | திரை அச்சு, வலைத் திரையச்சு |
| Squad | - | பிடிக்கும் படை |
| Stall | - | கடை, காட்சிக் கடை |

- நன்றி: முத்தமிழ் ஆய்வு மன்ற மலர்

# மாணவர் பக்கம்

## வௌவால்கள்

★ வௌவால்கள் (Bats) குட்டி போட்டுப் பால் கொடுக்கும் பாலூட்டிகளின் வகையைச் சார்ந்தது. உலகில் சுமார் 950 வௌவால் இனங்கள் வாழ்ந்து வருவதாக விலங்கியலார் புள்ளி விவரம் கொடுத்துள்ளனர். ஆனால், இந்த எண்ணிக்கை திட்டவட்டமானது என்று உறுதியாகச் சொல்லமுடியாது. மேலும், புதிய இனங்கள் (Species) கண்டுபிடிக்கலாம்.

★ வௌவால்கள் குட்டிபோட்டுப் பால் கொடுக்கும் பாலூட்டி வகையைச் சார்ந்த போதிலும், வானில் பறந்து செல்லும் ஆற்றல் பெற்றவையாகும்.

★ வௌவால்கள் கூடுகட்டி வாழ்வதில்லை. கூர்மையான பற்களை வைத்து மரக்கிளைகளில் துளை செய்து கூட வாழாது. இவைகள் இயற்கையான பாறை இடுக்குகளிலும், இருண்ட குகைகளிலும், உயர்ந்த மரங்களிலும் எந்தவித மாற்றமும் செய்யாமல் வாழ்ந்து வந்துள்ளன. இருப்பினும் -

★ குகைகளில் வாழ்ந்த வௌவால்கள் மனிதன் கட்டிய வீட்டின் கூரையில் வாழத் தொடங்கின. இருண்ட கோயில்களும், கல்லறைகளும், நிலக்கரிச் சுரங்கங்களும் அவை வாழ்வதற்கு இடங்களாயின. இருப்பினும், 'யூரோடெர்மா பைலோ பேக்டம்' (Uroderma Bilo Bactum) என்ற வௌவால் இனம் வாழை இலையின் நடுநரம்புப் பகுதியைப் பற்களால் வெட்டி, அந்த இலையைக் கூடாரம் போல மாற்றி அதற்குள் வாழ்கிறது.

★ கிரேக்க இலக்கியத்தில் சொர்க்கலோகத்தின் ராணியாக ஜீனோ (Juno)-வின் வாகனம் மயில் என்றும், நரகலோகத்தின் தேவதையான புரோஸ்பரினின் (Prosperine) வாகனம் வௌவால் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

★ சீனாவிலும், தூரக்கிழக்கு நாடுகளிலும் வௌவால்களை நன்மையினையும் இன்பத்தினையும் தரும் விலங்காகக் கருதுகிறார்கள்.

- நன்றி:
திரு. கே.கே. ராஜன் எழுதிய
'உலகில் உள்ள வௌவால்கள்'

## பள்ளிக்கூடம் போகணும்!

— கவிஞர் ஆர்.சி. தமிழன்பன்



சாரைசாரையாக எறும்பு
எங்கே போகுது - பாப்பா
எங்கே போகுது?
தானியத்தை உணவுக்காகச்
சேகரிக்கப் போகுது!

வட்டமிட்டே வண்டுசுழன்று
எங்கே போகுது - பாப்பா
எங்கே போகுது?
வண்ணப்பூவின் இனியதேனைச்
சேகரிக்கப் போகுது!

பறவைக்கூட்டம் சிறகடிச்சு
எங்கே போகுது - பாப்பா
எங்கே போகுது?
பழமரத்தில் இரையைத்தேடிச்
சேகரிக்கப் போகுது!

எழுத்தறிவு சேகரிக்க
எங்கே போவது - பாப்பா
எங்கே போவது?
இனியகல்வி தந்துதவும்
பள்ளி போகணும்!

## பொன் மொழிகள்

**நம்பிக்கை**

நம்பிக்கையைக் கைவிடாதே. அதுதான் வெற்றியின் முதல் படிக்கட்டு.

—பேரறிஞர் அண்ணா

நான் புத்தகங்கள் வாங்குவதற்காகப் பெரிதும் பணம் செலவு செய்கிறேன். இதை ஊதாரித்தனம் என்றாலும் எனக்குக் கவலை இல்லை.

—பண்டித நேரு

**தாயின் இதயம்**

தாயின் இதயத்தில்தான் குழந்தையின் பள்ளி இருக்கிறது.

—மூதறிஞர் இராஜாஜி

**நாகரிகம்**

நாகரிகம் என்ற சொல்லுக்கு, குஜராத்தி மொழியில் நல்ல நடத்தை என்று பொருள்.

—அண்ணல் காந்தியடிகள்

வாழ்க்கை வரலாறு



# சிவகங்கை இராமச்சந்திரனார்

**எஸ்.ஆர். இராமச்சந்திரன்**
நிறுவனர்
எஸ்.ஆர்.ஆர். அறக்கட்டளை

**சிவகங்கை இராமச்சந்திரனார் அவர்கள் பகுத்தறிவு இயக்கம் அரும்பிய காலத்தில் அதன் வெற்றிக்கு உழைத்த வீரர், தந்தை பெரியார் அவர்களின் பேரன்புக்கும் பெருமதிப்புக்கும் உரிய பெருந்தகையாளர், சமூக நீதிக்காகக் காலமெல்லாம் உழைத்த சாதனையாளர், தடைகளைத் தகர்த்துத் தன்மானப் பாதையில் தாழ்த்தப்பட்ட மக்களையும், பிற்பட்டோரையும் அழைத்துச் சென்ற தலைவர், சுயமரியாதைப் பணிக்காக அமைச்சர் பதவியை ஏற்க மறுத்த இலட்சியவாதி, 'பழங்குடி மக்களின் பாதுகாவலர்' என்று பேரறிஞர் அண்ணா அவர்களால் போற்றப்பட்ட புகழாளர்.**

**அவரது நினைவைப் போற்றும் வகையில், 21.10.'92 அன்று சிவகங்கையில் நடைபெற்ற மாபெரும் விழாவில், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், சிவகங்கையில் இயங்கிவரும் அரசு மாவட்டத் தலைமையிட மருத்துவமனைக்கு, 'இராமச்சந்திரனார் அரசு மாவட்டத் தலைமையிட மருத்துவமனை' என்று பெயர் சூட்டிச் சிறப்பித்தார். அதையொட்டி, 'சிவகங்கை இராமச்சந்திரனார்' என்னும் இவ்வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரை வெளியிடப்படுகிறது.**

சிவகங்கை இராமச்சந்திரனார், பிரபல வழக்கறிஞராகவும், தாலுகா போர்டு தலைவராகவும், தேவஸ்தான கமிட்டித் தலைவராகவும் மதுவிலக்குக் கமிட்டித் தலைவராகவும், நீதிக்கட்சியின் தென்மண்டலத் தலைவராகவும் புகழோடு வாழ்ந்தவராவார்.

பிற்படுத்தப்பட்ட முக்குலத்தோர் குடியில், 16.9.1884 தேதியில் பசும்பொன்முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தில் திருப்பத்தூர் தாலுகாவில், ஆ.தெக்கூர் கிராமத்தில் பிறந்தார் - தந்தையார் சுப்பிரமணியன் சேர்வை. தாயார் சங்காமிருத அம்மையார்.

இவரது அம்மான் தமிழ்ப் பேராசிரியர், முத்துராமலிங்கம் அவர்களின் கண்காணிப்பில், திருவனந்தபுரத்தில் மெட்ரிகுலேஷன் வரை படித்து முதன்மையாகத் தேறி, பிறகு மதுரைக் கல்லூரியில், எப்.ஏ. முடித்து, திருச்சி செயின்ட் ஜோசப் கிறிஸ்துவக் கல்லூரியில், பி.ஏ. முடித்தார். சில மாதங்கள் மதுரை சேதுபதி உயர்நிலைப்பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றினார். பிறகு சென்னைப் பல்கலைக்கழக, சட்டக்கல்லூரியில் 1913-இல் சேர்ந்து பி.எல். முடித்தார். 1915-இல் மதுரையில் வழக்கறிஞராகச் சிறிதுகாலம் பணியாற்றி, பிறகு 1916-இல் சிவகங்கையில் வழக்கறிஞர் பணியைத் தொடங்கினார். 1916-இல் ஆரம்பித்த தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டார்.

20.11.1916-இல் சர்.பிட்டி. தியாகராயர் கையெழுத்திட்டு வெளியிட்ட ''பார்ப்பனர் அல்லாத மக்களின் உரிமைச் சாசனம்'' (The Magnacarta of Non-Brahmins), பட்டி-தொட்டிகளிலெல்லாம் பரவும் வண்ணம் தென் மண்டலம் முழுதும் இவர் அதனைப் பிரச்சாரம் செய்தார்

ஈரோட்டில் 10.5.1930-இல் நடைபெற்ற இரண்டாவது மாநில சுயமரியாதை மாநாட்டையொட்டி, தந்தை பெரியார் முதல் மதுவிலக்கு மாநாடு, பெண்கள் விடுதலை மாநாடு போன்ற சிறப்பு மாநாடுகளை நடத்தினார்.

திராவிட இயக்க வரலாற்றில் நடைபெற்ற முதல் மதுவிலக்கு மாநாட்டிற்குத் தலைமை தாங்கி

யவர் சிவகங்கை இராமச்சந்திரனார். பெண்கள் விடுதலை மாநாட்டிற்குத் தலைமை வகித்தவர் டாக்டர் எஸ். முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் அவர்கள். தமிழகத்தில் முதல் மது விலக்கு மாநாடு நடத்திய பெருமை திராவிட இயக்கத்திற்கு உண்டு.

27.10.1930 முதல் 4.11.1932 வரை திவான் பகதூர் சித்தூர் பி.முனிசாமி அவர்களை முதலமைச்சராகக் கொண்ட நீதிக்கட்சி அமைச்சரவை சென்னை மாகாணத்தில் ஆட்சி புரிந்தது - அந்த அமைச்சரவையில் சிவகங்கை இராமச்சந்திரனார் பங்கு பெற வேண்டுமென்று முதல்வர் பி. முனிசாமி வேண்டிய போது, தந்தை பெரியார் கருத்துப்படி சுயமரியாதை இயக்கப் பணிகளுக்காக அமைச்சர் பதவி வேண்டாமென்று மறுத்தார்.

1920-ஆம் ஆண்டில் அப்போதைய சென்னை மாகாணத்தின் 98 தொகுதிகளில் நீதிக்கட்சியினர் வெற்றி வாகை சூடினர். ஆனால், சர்.பிட்டி. தியாகராயர், முதலமைச்சர் பதவியை ஏற்க மறுத்து, கட்சிப் பணிக்குத் தன்னை இணைத்துக் கொண்டார் என்பது வரலாறு.



## இராமச்சந்திரனார் அரசு மாவட்டத் தலைமையிட மருத்துவமனை

**தந்தை பெரியார் அவர்களுக்கு, சிவகங்கை இராமச்சந்திரனார் உறு துணையாக இருந்தார். ஆரம்பத்தில் தமிழகத்தில் பகுத்தறிவு இயக்கமாய் அரும்பிய வேளையில், கடும் எதிர்ப்புகளை எல்லாம் உடைத்து எறிந்து, இப்பகுதியில் பகுத்தறிவு இயக்கம் வேரூன்றி வளர வழிவகுத்துக் கொடுத்தவர் அவர். அப்பெருந் தகையாளருக்கு ஒரு சிறப்பினைச் செய்திட, நான் முடிவு செய்துள்ளேன். சிவகங்கை நகரில் இயங்கி வரும் அரசு மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, இனி பெரியவர் இராமச்சந்திரனார் அவர்களின் பெயரைத் தாங்கி, "இராமச் சந்திரனார் அரசு மாவட்டத் தலைமையிட மருத்துவமனை" என்று அழைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.**

**—சிவகங்கை விழாவில்**
**மாண்புமிகு முதல்வர்**
**டாக்டர் ஜெ. ஜெயலலிதா**

1929-இல் இராமநாதபுரம் மாவட்ட தேவஸ்தானக் கமிட்டித் தலைவரானார் இராமச்சந்திரனார். சமூகநீதிக்கு அவர் எவ்வாறு தொண்டாற்றினார் என்பதற்கு அநேக சான்றுகள் உள்ளன. தேசியக் காங்கிரஸ் கட்சியில் காலியாக உள்ள ஒரு இடத்திற்கு, நாடார் வகுப்பைச் சேர்ந்த திரு. சு.ஆ.முத்து நாடார் பெயரை, தேவஸ்தான போர்டுக்குப் பரிந்துரை செய்தார் - ஆனால், முத்து நாடார் பெயர், வேட்பாளர் பட்டியலில் இல்லாததால், அது மறுக்கப்பட்டது. மேலும், அவர் தேவஸ்தான போர்டு துறை அமைச்சருடன் நேரில் பேசி, விருதுநகர், திரு பெ.சி.சிதம்பர நாடார் அவர்களை, கமிட்டி உறுப்பினராக நியமனம் செய்தார். மிகவும் தாழ்த்தப்பட்ட நாடார் வகுப்பினரைச் சேர்த்ததால் பெரியார் மிகவும் பாராட்டினார்.

அன்றைக்குத் தாழ்த்தப்பட்டுக் கிடந்த சமுதாயங்களில் ஒன்று நாடார் சமுதாயம். கோவில் நுழைவுக்காகப் போராடிக் கொண்டிருந்த வகுப்பு. இராமநாதபுரம் மாவட்டத்தில், கமுதி கோயிலுக்குள் நுழைய



**தோழர் இராமச்சந்திரன் நல்ல வாக்கு விலாசமுள்ள வக்கீலாகவும் தகுந்த வரும்படியும், மேலும் மேலும் பெரிய நிலைக்கு வரக்கூடிய சௌகரியமும் இருந்தும் அவைகளை இலட்சியம் செய்யாமல், இயக்கத்திலேயே கவலை கொண்டு மற்றவைகளை அலட்சியம் செய்து வந்த உண்மைச் சுயமரியாதை வீரர் ஆவார்.**

**—தந்தை பெரியார்**

சர்.பிட்டி. தியாகராயர், 28.4.'25-ல் மறைந்த பின்னர், 1926-இல் பிறந்த தன் மகனுக்குத் "தியாகராசன்" என்று பெயர் சூட்டினார் இராமச்சந்திரனார்.

1925-இல் அம்புரோட்டில் (வடஇந்தியாவில்) நடைபெற்ற அனைத்து இந்தியப் பிராமணர் அல்லாதார் காங்கிரசுக்கு, தமிழ் நாட்டுப் பிரதிநிதியாகப் பங்கு கொண்டு இவர் சிறப்பித்தார்.



**இன்று ஏற்பட்டுள்ள அளவு சமூக விழிப்புணர்ச்சி ஏற்படாத நாட்களில் ஜாதிப் பித்தம் மேலோங்கி வர்ணாஸ்ரம தர்மம் தலைவிரித்தாடிக் கொண்டிருந்த நாட்களில், சமரச ஞானம் பேசுவதே கடினமான காரியமாகக் கருதப்பட்ட காலத்தில், துணிந்து சமுதாய சீர்திருத்தத் தொண்டாற்றிய வீரர், பழங்குடி மக்களின் பாதுகாவலர் பெரியவர் சி.இராமச்சந்திரன் அவர்கள்.**

**—பேரறிஞர் அண்ணா**

ஆகமப்படி அருகதை அற்றவர்கள் நாடார்கள் என்ற தீர்ப்பை இலண்டனில் இருந்த பிரிவி கவுன்சில் கூட தந்து விட்டது - அதற்கு மேல் பெரிய நீதிமன்றமே கிடையாது.

ஆனால், சமூகநீதிக்காக வாழ்நாள் முழுதும் போராடிய இராமச்சந்திரனார் அவர்கள், தான் தேவஸ்தான கமிட்டிக்குத் தலைவர் என்ற முறையில், புரட்சிகரமான செயல்கள் செய்தார்.

மேலும், 11.6.1932-இல் தேவஸ்தானக் கமிட்டிக் கூட்டத்தை கூட்டி, நாடார் வகுப்பைச் சேர்ந்த திரு. வி.வி. இராமசாமி நாடாரை கமிட்டியின் தலைவராக நியமித்து சரித்திரம் படைத்தார். அப்போதைய கமிட்டி உறுப்பினர்கள், செட்டிநாடு அரசர், இராமநாதபுரம் சேதுபதி முதலியோர் ஆவார்கள்.

அக்கூட்டத்தில் குத்தூசி குருசாமி அவர்களும் தீப்பொறி பறக்கும் உரை நிகழ்த்தினார். அந்த நிகழ்ச்சியின் விளைவாக சுயமரியாதை இயக்கத்திற்கு ஈர்க்கப்பட்டேன் என்று டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் ஒரு சந்தர்ப்பத்தில் கூறியுள்ளார்.

சிவகங்கை இராமச்சந்திரனார், சிறந்த வழக்கறிஞராகவும், சிவகங்கை சமஸ்தான வக்கீலாகவும், வழக்காடும் ஆற்றலைக் கண்டு, அன்றைய நீதிக்கட்சி அரசு, இவரை மாவட்ட நீதிபதியாகப் பணியாற்ற அழைத்தது. அப்பொழுது, ஆங்கிலேயர்கள்தான், 75 சதவிகிதம் நீதிபதியாக இருந்தார்கள்.

''தாழ்த்தப்பட்ட இனமக்களைத் தட்டியெழுப்புவேன் - அதற்காகவே பெரியார் அவர்களோடு சேர்ந்து சுயமரியாதை மாநாட்டில் பங்கு கொண்டு, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த முதல் தீர்மானத்தை முன்மொழிந்தார்.

**தீர்மானம்:** ''மக்கள் தங்கள் பெயர்களோடு ஜாதி, அல்லது வகுப்பைக் காட்டுவதற்காகச் சேர்க்கப்படும், பட்டங்களை விட்டுவிட வேண்டுமென்று இம்மாநாடு பொது ஜனங்களைக் கேட்டுக் கொள்ளுகிறது''.

''ஜாதி அல்லது சமயப் பிரிவுகளைக் காட்டும் குறிகளை யாரும் அணிந்து கொள்ளக்கூடாது என்றும் இம்மாநாடு கேட்டுக் கொள்ளுகிறது''.

இந்தத் தீர்மானத்தை வழிமொழிந்து பெரியார் பேசினார்.

விருதுநகரில் 1931-ஆகஸ்டு

## முதல் சுயமரியாதை மாநில மாநாட்டில் கலந்து கொண்ட முக்கியத் தலைவர்கள்



**1929**-ஆம் ஆண்டு பிப்ரவரி 17-ந் தேதி செங்கற்பட்டில் நடந்த முதல் சுயமரியாதை மாநில மாநாட்டில் முதல்வர் டாக்டர் பி. சுப்பராயன் மாநாட்டினைத் தொடங்கி வைத்தார். திரு. டபிள்யூ. பி.ஏ. சவுந்திரபாண்டிய நாடார் தலைமை வகித்தார். திரு. ராவ் பகதூர் எம்.கே. ரெட்டி மாநாட்டின் வரவேற்புக்குத் தலைவராகச் செயல்பட்டார். திரு. சர்.பி.டி. ராஜன் கொடியேற்றினார். திரு. எஸ் முத்தையா முதலியார் வேளாண்மைக் கண்காட்சியைத் திறந்து வைத்தார். திரு. திவான்பகதூர் கிருஷ்ணன் நாயர், திரு. சர்.முகம்மது உஸ்மான், திரு. ராகவேந்திரா ராவ், திரு. நீலகிரி சஞ்சீவ்அய்யா எம்.எல்.சி. மைசூர் டாக்டர் ர.ராமசாமி முதலியார், தந்தை பெரியார், திரு. சிவகங்கை எஸ். இராமச்சந்திரன், திரு. ஏ.டி. பன்னீர் செல்வம் முதலானோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

25.5.1929 அன்று பட்டுக்கோட்டையில் நடைபெற்ற முதலாம் மாவட்ட சுயமரியாதைத் தொண்டர் மாநாட்டையடுத்து, இறுதியில் நடந்த பொதுக்கூட்டத்தில் தலைமை ஏற்ற சிவகங்கை இராமச்சந்திரனார் ஆர்வம் பொங்க முழங்கினார்.

அல்லும்பகலும் பாடுபடுவேன். எனக்குப் பதவி வேண்டாம்'' என்று பகன்ற நியாய உணர்வும், திடமான ஆணித்தரப் போக்கும் கொண்டவர் இராமச்சந்திரனார்.

செங்கல்பட்டில் 1929 பிப்ரவரியில் நடந்த முதல் மாகாண சுயமரியாதை மாநாட்டில் முக்கிய பங்கு ஏற்று, ''மத நடுநிலைமை'' (Secular State) பற்றிய தீர்மானத்தை முன்மொழிந்தார்.

இராமச்சந்திரனார் எண்ணற்ற எதிர்ப்புக்களை முறியடித்து நடத்திய

# 1992-நோபல் விருது பெறும் விஞ்ஞானிகள்

சர்வதேச அளவில் பல துறைகளில் சிறந்து விளங்குவோருக்கு ராயல் ஸ்வீடன் விஞ்ஞான அகாடமி ஆண்டுதோறம் நோபல் விருதுகளை வழங்கி வருகிறது. இவ்வாண்டிற்கான விருது அண்மையில் அறிவிக்கப்பட்டது. விருது பெற்றவர்கள் வருமாறு:

**பௌதிகம் (இயற்பியல்):** பௌதீகத்துக்கான 1992 நோபல் விருது பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த விஞ்ஞானி திரு. ஜார்ஜெஸ் சார்பாக் என்பவருக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

பௌதீகத்தில் இவரின் புதிய கண்டுபிடிப்புக்காக இவருக்கு 6.5 மில்லியன் குரோனர்கள் (3.5 கோடி ரூபாய்) வழங்கப்படுகிறது.

**இரசாயனம் (வேதியியல்):** இரசாயனத்துக்கான 1992-ஆம் ஆண்டு நோபல் விருது கலிபோர்னியா (அமெரிக்கா) நாட்டு விஞ்ஞானி பேராசிரியர் ரூடால்ப் ஏ.மார்க்ஸ் என்பவருக்கு வழங்கப்படுகிறது. வேதியியல் கிரியைகளில் மின்னணுப் பரிமாற்ற விளைவுகள் (Theory of electron transfer reactions in Chemical System) பற்றிய தத்துவ விளக்கத்திற்காக இவருக்கு நோபல் விருது வழங்கப்படுகிறது.

**இலக்கியம்:** இலக்கியத்தில் 1992-ஆம் ஆண்டுக்கான நோபல் பரிசு மேற்க்கிந்திய தீவுகள் நாட்டைச் சேர்ந்த எழுத்தாளர் திரு. டெரிக் வால்காட் என்பவருக்கு கிடைத்துள்ளது. இங்கிலாந்து நாட்டில் வசித்து வரும் இவருக்கு மேற்கிந்திய தீவுகளைச் சேர்ந்த செயின்ட் லூயிஸ் பூர்வீகமாகும்.

**பொருளாதாரம் (பொருளியல்):** பொருளியல் துறைக்கான இவ்வாண்டின் நோபல் பரிசு அமெரிக்க நாட்டின் சிகாகோ பல்கலைக் கழகப் பேராசிரியர் திரு. கேரி எஸ். பெக்கர் என்பவருக்கு வழங்கப்படவிருக்கிறது. 61 வயதாகும் திரு. பெக்கருக்கு நோபல் விருதுடன் 1.2 மில்லியன் அமெரிக்க டாலர் கிடைக்கும்.

**மருத்துவம்:** மருத்துவத் துறைக்கான இவ்வாண்டின் நோபல் விருது அமெரிக்க நாட்டைச் சேர்ந்த இரு உயிர் வேதியியல் வல்லுநர்கள் திரு. எட்மாண்ட் பிஷ்ஷர் மற்றும் திரு. எட்வின் கிரெப்ஸ் ஆகியோருக்கு வழங்கப்படும்.

வாஷிங்டன் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சியாளர்களாகப் பணியாற்றும் இவர்களின், தசைகளிலுள்ள புரதத்தை எப்படி தசைச் செல்கள் தங்களுடைய வேலைகளுக்குத் தேவையான சக்தியாக மாற்றுகின்றன என்ற கண்டுபிடிப்புக்காக இந்த விருது வழங்கப்படுகின்றது.

**அமைதி:** அமைதிக்கான நோபல் பரிசு அமெரிக்கா கண்டத்திலுள்ள குவாடிமாலா நாட்டைச் சேர்ந்த மனித உரிமைக்குழு அமைப்பாளர் செல்வி ரிகோ பெர்டா மென்சுவுக்குக் கிடைத்துள்ளது. 33 வயதான இவர் நாட்டை விட்டு ஓடி மெக்சிகோவில் தஞ்சம் புகுந்திருக்கிறார்.

''இராமநாதபுர மாவட்ட ஆதி திராவிடர் மாநாடு'' வரலாற்றுப் புகழ் வாய்ந்தது - அதன் மூலம் ''ஆதிதிரர்விடர்களின் பாது காவலன்'' என்ற பெயர் முக்குலத்துத் தலைவர் ஒருவருக்குக் கிடைத்தது எளிதான ஒன்றல்ல - சிவகங்கையைச் சுற்றியுள்ள, கொட்டகுடி, அகிலாண்டபுரம், காஞ்சிரங்கால் போன்ற கிராமங்களில் ஆதிதிராவிடர் நிறைந்த பகுதிகளின் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்காக இரவுப் பள்ளிகள் நிறுவினார் அவ்வாறு அவர் அமைத்துக் கொடுத்த பள்ளியில் படித்துத் தேறி கொட்டகுடியில் ஆசிரியையாகப் பணிபுரிய வாய்ப்புப் பெற்ற அகிலாண்டபுரத்துச் சிறுமிதான், பிற்காலத்தில் காங்கிரசு அமைச்சர் கக்கன் அவர்களின் துணைவியார் பார்வதி கக்கன் ஆவார்.

பொதுவுடைமை இயக்கத் தலைவரான ஜீவா, அண்ணல் இராமச்சந்திரனாரின் சீடர் எனப்பெயர் பெற்றவர் - ஒருமுறை ஜீவாவை இழிவாகப் பேசிய அமராவதி புதூர் காவல்துறை அதிகாரியை எதிர்த்து, இராமச்சந்திரனார் ஜீவாவுக்காகப் போர்க்குரல் எழுப்ப, மாவட்ட ஆட்சித் தலைவரே வந்து மன்னிப்புக் கேட்க நேர்ந்ததாக உண்மை வரலாறு உண்டு.

தன்னை உருவாக்கிய பெருந்தகை இராமச்சந்திரனாரின் நினைவுப் பூங்காவை, அறிஞர் அண்ணா அவர்கள் 28.2.1948-இல் திறந்து வைத்த காலத்தில், தலைமறைவாகக் காடுகளில் வாழ்ந்த ஜீவா அவர்கள், தாடி வளர்த்த நிலையில் அவ்விழாவில் காட்சியளித்துப்பங்கு கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

1916-ஆம் ஆண்டு தொடங்கிய, பெரியார் இயக்கப் பணி இன்று வரை தொடர்ந்து இந்த குடும்பத்தாரால் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தலைவராகப் பணியாற்றி, மறைந்த சமூகநீதிக் காவலர் இராம சுப்பிரமணியம், பி.ஏ.,பி.எல்., அவர்கள், இவரது மூத்த மகனாவார்.

பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனத்தின் தலைவர், சிவகங்கை வழக்கறிஞர் இரா.சண்முகநாதன், பி.ஏ.,பிஎல்., அவர்கள் இவரது மருமகன் ஆவார்.

# நூல் நயம்

## தர்ம பாதை

**ஆசிரியர்:**

டாக்டர் ஏ.வி.எம். முருகன்

**வெளியீடு:**

கார்த்திக் பதிப்பகம்
36-ஏ/7, கோவிந்தன் சாலை,
சென்னை-600 033.

பக்கம்:120 விலை:ரூ.18/-

**து**ன்பங்களுக்கெல்லாம் காரணம் என்ன?

'மனிதனின் ஆசையும், பொய்யான ஆக்கிரமிப்புத் தன்மையுமே ஆகும்' என்பது புத்தரின் கருத்து.

உலக மக்கள் உணர வேண்டி, உய்ய வேண்டி அவர் காட்டிய வழிதான் தம்மபதம் அதாவது தர்மப்பாதை. இதற்குத் தமிழ் வடிவம் கொடுத்து, எளிய இனிய நடையில் எழுதியுள்ளார் நூலாசிரியர்.

புத்தரின் கொள்கைகள், போதனைகள் எல்லாம் மக்கள் வாழ்க்கை நெறியுடன் வாழ்வதற்கு அடித்தளமாக உள்ளன. மாணவர்கள் மட்டுமல்ல, பெரியவர்களும் படித்துப் பயன்பெற வேண்டிய கருத்துக் குவியல் இது.

## உலகைப் பயமுறுத்தும் எய்ட்ஸுக்குச் சித்த வைத்தியம்

**ஆசிரியர்:** டாக்டர் துர்க்காதாஸ் எஸ்.கே. ஸ்வாமி

**வெளியீடு:**

பூங்கொடி பதிப்பகம்,
14, சித்திரைக்குளம் மேற்கு வீதி,
சென்னை-600 004


பக்கம்:184 விலை:ரூ.22/-

**உ**லகை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் நோய்களுள் எய்ட்ஸ் நோய் தலைமையிடம் வகிக்கிறது. புற்றுநோய் போன்ற பயங்கர நோய்களுக்குக் கூட இன்று நவீன மருத்துவம் உண்டு.

ஆனால், எய்ட்சுக்குத் தகுதியான மருந்து இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை என்றே தெரிகிறது. ஆனால், அதன் அறிகுறியைத் தெரிந்து கொண்டு அந்த ஆபத்திலிருந்து விடுபட சித்த வைத்தியம் உதவுகிறது என்று இந்நூலாசிரியர் உறுதி கூறுகிறார். அதற்கான காரண காரியங்களையும் இந்நூலில் விளக்கியுள்ளார். அத்துடன் இந்நோயின் ஆரம்பக்கால அறிகுறியையும் பட்டியல் போட்டுத் தந்திருக்கிறார் ஆசிரியர்.

இதேபோல, எய்ட்ஸ் கூடிய அறிகுறிகளும், ஆரம்ப நிலைக்குரிய சித்தர் மூலிகைகளும் எனும் தலைப்பில் வைத்திய முறையைக் கூறுகிறார்.

இந்நோயின் தன்மை குறித்து உலக மருத்துவர்கள் கூறிய கருத்துரைகளையும் ஆங்காங்கே கோடிட்டுக் காட்டுகிறார். வயது வந்த (Adults) எல்லாரும் படித்துத் தெரிந்துகொள்ள வேண்டிய பலப்பலச் செய்திகள் இதில் பொதிந்துள்ளன.



## மாவட்ட வளர்ச்சி மன்றங்களுக்கான சட்டங்கள்

**ஆசிரியர்:** டாக்டர் சோ. சேசாசலம்,

**வெளியீடு:**

முத்துமணி பதிப்பகம்,
8, முத்துக்கிருஷ்ணன் தெரு,
சென்னை-600 017.

பக்கம்:76 விலை:ரூ.10/-

**ஒ**ரு மாவட்டத்தின் வளர்ச்சிப் பணிகளில் வருவாய்த் துறைக்கும், ஊராட்சி ஒன்றியத்துக்கும் பெரும் பங்குண்டு. இந்தப் பணிகளைச் செவ்வனே நிறைவேற்றுவதற்கு மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த மன்றங்களுக்கான சட்ட திட்டங்களை விளக்குவதே இந்நூல். அத்துடன், மாவட்ட வளர்ச்சிப் பணிகள் எவ்வாறு துரிதமாக நிறைவேற்றப்படுகின்றன என்பது பற்றியும் இது தெளிவுபடுத்துகிறது.

## புலவர்கள் புலமை விளையாட்டு!

**ஆசிரியர்:** தங்கவயல் லோகிதாசன்

**வெளியீடு:**

கலைவாணர் பதிப்பகம்,
3/17, சத்தியமூர்த்தி நகர்,
சென்னை-600 035.

பக்கம்:112 விலை:ரூ.18/-

**ப**ண்டைத் தமிழ்ப் புலவர்கள் பாடிய பாடல்கள் எல்லாம், இன்றளவும் பாடிப் பாடி மகிழ்கின்ற கருத்துக் கருவூலங்கள்.

பலவேறு காலங்களில் வாழ்ந்த புலவர் பெரு மக்களின் பாடல்களைத் தொகுத்து, அதற்கு விளக்கவுரை தந்துள்ளார் நூலாசிரியர். அத்தனையும் கற்கண்டுகளாய் இனிக்கின்றன. அனைவரும் படித்து மகிழலாம்.

## வீடியோ படம் எடுப்பது எப்படி?

**ஆசிரியர்:**ரவிராஜ்

**வெளியீடு:**

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
லிமிடெட்,
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல்
எஸ்டேட், சென்னை-600 098.

பக்கம்:60 விலை:ரூ.20/-

**வீ**டியோ என்பது, விஞ்ஞானம் நமக்கு வழங்கியுள்ள வரப்பிரசாதங்களில் ஒன்று. இன்றைய காலகட்டத்தில், வீடியோ இல்லாமல் நிகழ்ச்சிகள் இல்லை என்கிற அளவுக்கு, அதன் தேவை இன்றியமையாததாக இருக்கின்றது.

அத்தகு விந்தைக்கருவி குறித்தும், அதைக் கையாளும் முறைகள் குறித்தும் இந்நூலில் நன்கு விளக்கப்பட்டுள்ளன. தக்க வகையில், விளக்கப்படங்கள் சேர்த்திருப்பது இந்நூலின் சிறப்பம்சமாகும்.

வீடியோ கலை ஆர்வலர்கள், பயிற்சி பெறும் இளைஞர்களுக்கு இந்நூல் நல்ல வழிகாட்டி.

## கல்வியியல் கட்டுரைகள்

**ஆசிரியர்:** சோ. சந்திரசேகரன்

**வெளியீடு:**

சூடாமணி பிரசுரம்
36-ஏ-7, கோவிந்தன் சாலை,
சென்னை-600 033.

பக்கம்:116 விலை:ரூ.18/-


'**இ**ளமையில் கல்' என்றனர் பெரியோர். ஆனால், வறுமையின் காரணமாக இளமையில் பலர் கல்வி கற்க வியப்பில்லாமல் போய்விடுகிறது. அத்தகையவர்களுக்கு உதவுவதுதான் தொலைக்கல்வி, திறந்த கல்வி, இதை நயம்பட உரைக்கிறார் ஆசிரியர்.

கல்வித் தொழில் நுட்பவியலைப் பற்றிக் கூறும்போது, இன்றைய கல்விச் செலவுகள் அதிகரிப்பு குறித்தும் அதைச் சமாளிக்கும் வழிவகை குறித்தும் அலசுகிறார். இதேபோல் மரபுக் கல்வி, முறைசாராக் கல்வி, வாழ்க்கை நீடித்த கல்வி ஆகியவற்றைத் தக்க மேற்கோள்களுடன், தம் ஆழ்ந்த அனுபவத்தைக் கொண்டு விளக்கியிருக்கும் பாங்கு சிந்தனைக்கு விருந்தாய் அமைகின்றன. ஆசிரியர்கள், மாணவர்கள், இத்துறை ஆய்வாளர்கள் அனைவருக்கும் இது ஒரு வரப்பிரசாதம்.

—பி.வி.ஜி.

# வெளிநாடுகளில் வேலைவாய்ப்புப் பெற...

ச. ரகுபதி இ.ஆ.ப.,
நிர்வாக இயக்குநர்
அயல்நாட்டு வேலை-வாய்ப்பு நிறுவனம்



'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்ற பழமொழிக்கேற்ப, நம் நாட்டிலிருந்து பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று பணியாற்றத் தயாராக இருக்கிறார்கள்.

வெளிநாடுகளில் வேலை வாங்கித் தருவதாகக் கூறி அப்பாவி பொதுமக்களைச் சிலர் ஏமாற்றுவது அன்றாடம் நாம் அறிந்ததே. இத்தகைய இன்னல்களிலிருந்து மக்களை மீட்கவும், வெளிநாடுகளுக்குச் சென்று பணி புரிய விரும்பும் நபர்களுக்கு அரசே தகுந்த ஏற்பாடுகள் செய்யவும் கருதி, தமிழக அரசு 'அயல் நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனம்' என்ற ஒரு தனி அமைப்பினை 1979-ஆம் ஆண்டில் சென்னையில் நிறுவியது.

சென்னை நுங்கம்பாக்கத்தில் கிருஷ்ணமாசாலையில் அமைதியாகச் செயல்பட்டுவரும் இந்நிறுவனம், தொடக்கத்திலிருந்து இதுவரை சுமார் 5 ஆயிரம் நபர்களுக்கு வெளிநாடுகளில் பணிபுரிய ஏற்பாடு செய்து தந்திருக்கிறது.

இந்நிறுவனம் செம்மையாகச் செயல்படுவதால் வளைகுடாப் போரினால் இந்நிறுவனத்துக்கு ஏற்பட்ட நஷ்டத்தையும் ஈடு செய்து இலாபத்தில் தற்சமயம் இயங்க முடிகிறது என்பதை அறிந்து பெருமைப்படலாம்.

வளைகுடாப் போர் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து, வளைகுடா நாடுகளில் வேலைவாய்ப்புகள் திடீரெனப் பெருகி, இந்நாடுகளிலுள்ள பல முன்னணி ஒப்பந்தக்காரர்கள் தங்களிடம் ஏற்கெனவே பணியாற்றி வளைகுடாப் போரின்போது இந்தியா திரும்பிய பணியாளர்களை மீண்டும் பணியில் சேர்த்துக் கொண்டார்கள்.

அதே நேரத்தில் குவைத், சவூதி அரேபியா போன்ற வளைகுடா நாடுகளிலுள்ள அரசுத்துறைகள் மற்றும் தொழிற்கூடங்களிலுள்ள பணிகளைப் பல புதிய ஒப்பந்தக்காரர்கள் மேற்கொண்டனர். பிலிப்பைன்ஸ், வங்கதேசம், இலங்கை போன்ற நாடுகளிலிருந்து குறைந்த கூலிக்குப்

**வெளிநாடுகளில் வேலை வாங்கித் தருவதாகக் கூறி பொதுமக்களைச்சிலர் ஏமாற்றுவதைத் தடுக்கவும், வெளிநாடுகளுக்குச் சென்று பணிபுரிய விரும்பும் நபர்களுக்கு அரசே தகுந்த ஏற்பாடுகள் செய்து தரவும் அமைக்கப்பட்டது 'அயல் நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனம்'.**

**இந்நிறுவனம் இதுவரை சுமார் 5 ஆயிரம் நபர்கள் வெளிநாடுகளில் பணி புரிய ஏற்பாடு செய்து தந்துள்ளது.**

பணியாளர்கள் கிடைத்தாலும், நமது நாட்டின் பணியாளர்களுக்கு அதிகத் தேவையும், மதிப்பும் இருந்தது.

இதன் விளைவாக, இந்தியாவிலுள்ள பல தனியார் நிறுவனங்கள் மற்றும் முகவர்கள் வளைகுடாப் போர் முடிவுற்ற பின்னர் அயல்நாடுகளுக்குப் பணியாளர்களைத் தேர்வு செய்வதற்கான தங்கள் கட்டணத்தைப் பலமடங்கு உயர்த்திவிட்டனர். ஆனால், அதே சமயம் தமிழக அரசுக்குச் சொந்தமான 'அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்' அமைதியான முறையில் செயலாற்றி, நியாயமான கட்டணம் வசூலித்து அயல்நாடுகளுக்குப் பணியாளர்களைத் தேர்வு செய்து அனுப்பி வைக்கிறது.

இந்நிறுவனம், அயல்நாட்டுப் பணிகளுக்குச் செல்ல விரும்பும் நபர்களிடமிருந்து ரூபாய் நூறு மட்டும் பதிவுக் கட்டணமாக வசூலித்துக் கொண்டு அவர்களைப் பற்றிய முக்கிய விவரங்களை விண்ணப்பங்களின் மூலம் பெற்று, தனது தகவல் வங்கியில் பதிவு செய்து வைத்துக் கொள்கிறது.

அயல்நாட்டுப் பணிகளுக்குத் தேர்ந்தெடுக்கும்பட்சத்தில், தமிழக அரசு நிர்ணயித்துள்ள ஒரு சிறுதொகையைப் பணிக் கட்டணமாக (Service charge) இவர்களிடமிருந்து வசூலித்துக் கொண்டு இவர்களை அந்தப் பணிகளுக்கு இந்நிறுவனம் அனுப்பி வைக்கும்.

வளைகுடாப் போருக்குப் பிறகு வளைகுடா நாடுகளில் வேலைவாய்ப்புகள் பெருகியதைத் தொடர்ந்து அந்நாடுகளில் பணியாற்ற இந்நிறுவனம் 458 நபர்களைத் தேர்வுசெய்து இதில் 208 நபர்கள் இதுவரை அந்நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

குவைத் நாட்டில் தொழில்நுட்பத் துறைகளில் பணியாற்ற கம்மியர் (Mechanic) Valve Fitter, Welder, மின்வினைஞர் (Electrician) போன்ற பணிகளுக்கு இந்நிறுவனத்தில் நவம்பர் முதல் வாரத்தில் நேர்முகத் தேர்வுகள் நடைபெற்றன. மேற்கண்ட பணிகளுக்கு இந்நிறுவனத்திடம் பதிவு செய்து கொண்டுள்ள தகுதிவாய்ந்த நபர்கள் மட்டும் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டனர்.

பெரும்பாலும் அயல்நாடுகளில் வேலை அளிக்கும் நிறுவனங்களின் ஒப்பந்தக்காரர்களே இந்நிறுவனத்துக்கு நேரில் வந்து நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்ட நபர்களை நேரில் பேட்டி கண்டு, தேர்ந்தெடுப்பதால் இடைத் தரகர்களின் இன்னல்களும் பொருள் விரயமும் இதனால் பெரிதும் தவிர்க்கப்படுகின்றன.

மருத்துவர்கள், மருத்துவம் சார்ந்த பணியாளர்கள், பொறியாளர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள், தச்சர்கள், விற்பனையாளர்கள் போன்ற பல்வேறு தகுதியுடைய நபர்களுக்குச் சவுதி அரேபியா, குவைத், ஓமன், மலேசியா, சிங்கப்பூர் போன்ற வளைகுடா நாடுகளிலும், கிழக்கு ஆசியா நாடுகளிலும் பெரும் தேவையிருப்பதால் அந்நாடுகளுக்கு இவர்களைக் குறைந்த செலவில் அனுப்பிவைக்க இந்நிறுவனம் ஏற்பாடு செய்து வருகிறது.

மேலும், மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த பணியாளர்களுக்குச் சவுதி அரேபியாவில் சுகாதாரத் துறையில் பெருமளவு தேவையிருப்பதால், மேற்கண்ட பணிகளுக்கு ஆட்களைத் தேர்ந்தெடுக்க இந்நிறுவனம் தற்சமயம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

இதுதவிர மதீனா, சவூதி அரேபியா போன்ற நாடுகளில் தச்சர்கள், வர்ணம் பூசுபவர்கள், உதவியாளர்கள் போன்ற பணிகளுக்கு அந்நாடுகளின் விருப்பத்திற்கிணங்க, தகுதி வாய்ந்த முஸ்லிம் நபர்கள் மட்டும் தேர்வு செய்து அனுப்பப்படவிருக்கின்றனர்.

மேலும், பஹரெய்ன், சிங்கப்பூர் போன்ற நாடுகளில் வீட்டுப் பராமரிப்புப் பணிகளுக்குப் பெண் பணியாளர்களைத் தேர்ந்தெடுக்கும் பணியும் விரைவில் தொடங்கப்படவிருக்கிறது. அயல்நாடுகளில் இந்நிறுவனத்தின் மூலம் தற்போதுள்ள தேவை பூர்த்தி செய்யப்பட்டால் இந்த நிதி ஆண்டின் இறுதிக்குள் (1993 மார்ச் மாதத்திற்குள்) ஏறத்தாழ





2000 நபர்கள் இந்நிறுவனத்தின் மூலம் வெளிநாடுகளுக்குச் செல்ல வாய்ப்பிருக்கிறது.

அயல்நாட்டுப் பணிகளுக்குச் செல்பவர்களுக்கு, அந்நாடுகளுக்குச் செல்வதற்கான விமானக் கட்டணம், பாஸ்போர்ட், விசா (VIS), போன்றவற்றை இவர்களைப் பணிக்கு அமர்த்தும் அந்நாட்டு நிறுவனமே இலவசமாகப் பெற்றுத் தருகிறது.

சென்னையிலுள்ள தமிழ்நாடு அரசின் 'அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்' போன்று டெல்லி, பம்பாய், ஐதராபாத், திருவனந்தபுரம், சண்டிகார் போன்ற ஒரு சில இடங்களில் மட்டுமே மாநில அரசு நிறுவனங்கள் இத்தகைய பணியை மேற்கொண்டுள்ளன. இருப்பினும் வெளிநாட்டிலுள்ள வேலை அளிப்போரிடம் திறமையான நபர்களை அனுப்பும் நிறுவனம் என்ற பெருமையும், நல்ல பெயரும் தமிழக அரசின் அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்துக்குக் கிடைத்திருப்பது பாராட்டுக்குரியது.

அயல்நாடுகளில் மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த பணிகளுக்கும், தொழில்நுட்ப வல்லுநர்களுக்கும் பெருமளவு தேவை இருப்பதைக் கருத்தில் கொண்டு இதுவரை சுமார் 12 ஆயிரம் நபர்கள் இந்நிறுவனத்தின் தகவல் வங்கியில் (DATA BANK) பதிவு செய்து வைத்துள்ளனர். அரசுப்பணிகளில் பணிபுரிவோரும் இந்நிறுவனத்தில் பதிவு செய்து வைத்துக் கொள்ளலாம். ஆனால், எந்தப் பணியானாலும் அனுபவம் இன்றியமையாத் தேவையாகும்.

மேலும், தற்போது இந்நிறுவனம் சென்னை, செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர்., வடஆர்க்காடு-அம்பேத்கர், தென்னார்க்காடு, திருவண்ணாமலை-சம்புவராயர், சேலம், கோயம்புத்தூர், தருமபுரி, பெரியார் மற்றும் நீலகிரி மாவட்டங்களிலும் பாண்டிச்சேரி மாநிலத்திலும் உள்ள பொதுமக்களுக்குப் பாஸ்போர்ட் (Passport) பெற்றுத் தரவும் ஆவன செய்து வருகிறது.

இதுவரை சுமார் 400 நபர்களுக்கு இந்நிறுவனத்தின் மூலம் பாஸ்போர்ட் பெற்றுத் தரப்பட்டுள்ளது.

இந்நிறுவனத்தின் மூலம் வெளிநாடு சென்று பணிபுரிய விரும்பும் தகுதிவாய்ந்த நபர்கள் ரூ.100-ஐ ப் பணமாக நேரடியாகவோ அல்லது 'டிமாண்ட் டிராப்ட்' மூலமாகவோ தங்கள் பெயருடன் கீழ்க்கண்ட முகவரிக்குச் செலுத்தி தங்கள் பெயரைப் பதிவு செய்து கொள்ளலாம்.

**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:**

**நிர்வாக இயக்குநர்**
**அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்,**
**12, முதல் மாடி, கிருஷ்ணமா சாலை,**
**நுங்கம்பாக்கம், சென்னை-600 034.**

## தமிழ்நாடு முழுவதும் அத்தியாவசியப் பொருட்கள் விற்பனை நிலையங்களில் அரசு அதிகாரிகள் திடீர் சோதனை!

**1992** செப்டம்பர் மாதத்தில் தமிழ்நாடு முழுவதும் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாது காப்புத் துறை அலுவலர்களும் உணவுப் பொருள் வழங்கல் சி.ஐ.டி. பிரிவு அலுவலர்களும் இன்றியமை யாப் பொருட்கள் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட பல்வேறு கட்டுப்பாட்டு ஆணைகளின் கீழ் 950 திடீர்ச் சோதனைகள் நடத்தினர்.

இச் சோதனைகளில் கள்ளக்கடத்தல், கள்ள வணிக மும், பதுக்கல்களும், கலப்பட இனங்களும் இதர இனங் களும் கண்டுபிடிக்கப்பட்டன. இதன் மூலம் ரூபாய் 60.65 இலட்சங்கள் மதிப்புள்ள நெல், அரிசி, கோதுமை, சமையல் எண்ணெய் மற்றும் பெட்ரோலியப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. இதுவன்றி 26 லாரிகள், 14 வேன்கள், 2 கார்கள், 3 சைக்கிள்கள், 55 மாட்டு வண்டிகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

மாநிலம் முழுவதும் இம்மாதத்தில் 26,965 போலி குடும்ப அட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டு நீக்கம் செய்யப் பட்டுள்ளன. 4 மண்ணெண்ணெய் சில்லறைப் பதிவு சான்றுகள் மீதும், 4 மண்ணெண்ணெய் கைவண்டிக் காரர்கள் மீதும் அபராதம் விதிக்கப்பட்டது.

## பேராசிரியர் அ.மு. பரமசிவானந்தம் அவர்களுக்குத் திரு.வி.க. விருது

தமிழ்நாடு அரசால் ஆண்டுதோறும் வழங்கப்பெறும் திரு.வி.க. விருதினை இந்த ஆண்டு (1992) பேராசிரியர் அ.மு.பரமசிவானந்தம் அவர்களுக்கு வழங்க மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

பேராசிரியர் அ.மு. பரமசிவானந்தம் அவர்கள், பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராகவும், ஐதராபாத் உசுமானியப் பல்கலைக் கழகம், மதுரை காமராசர் பல்கலைக் கழகம் ஆகியவற்றில் பேராசிரியராகவும் திகழ்ந்தவர். தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்களோடு நெருங்கிப் பழகியவராகவும், 100-க்கும் மேற்பட்ட தமிழ் இலக்கிய நூல்களை யாத்தளித்த பெருமைக்குரியவராகவும் விளங்குகிறார். தம் ஓய்விற்குப் பிறகு, வள்ளியம்மாள் மேனிலைப்பள்ளி, கல்லூரி முதலியவற்றைச் சென்னை அண்ணாநகரில் அமைத்துக் கல்வித் தொண்டாற்றி வருகிறார்.

நாடறிந்த புலமையும், உலகம் சுற்றிய அனுபவமும் வாய்ந்த பேராசிரியர் அ.மு.பரமசிவானந்தம் அவர்களுக்கு 1992-ஆம் ஆண்டிற்கான திரு.வி.க. விருது தமிழக அரசின் சார்பில் வழங்கப்பெறுகிறது.

தமிழறிஞர்களுக்கு ஆண்டுதோறும் வழங்கிவரும் திரு.வி.க. விருது, 1979-ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது.

இதற்கு முன் இவ்விருதைப் பெற்றவர்கள் வருமாறு:

ஜெகசிற்பியன், நாரணதுரைக் கண்ணன், அ.கி.பரந்தாமனார், திருக்குறள் முனிசாமி, பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார், கோவி. மணிசேகரன், க.த. திருநாவுக்கரசு, கா.மு.ஷெரீப், சுப்பு ரெட்டியார், மணவை முஸ்தபா, தமிழண்ணல், புலவர் கா.கோவிந்தன், அ.ச. ஞானசம்பந்தம், ராஜம் கிருஷ்ணன்.

# இளைஞர்க்கு

## உலகிலேயே அதிக வயதானவர்

உலகிலேயே மிகவும் வயதானவர் ஐக்கிய அரபுக்குடியரசு நாட்டைச்சேர்ந்த திரு. முசாபா. 152 வயது வரை வாழ்ந்த இவர், அண்மையில் காலமானார்.

1840-ஆம் ஆண்டில் பிறந்த இவர், தமது வாழ்நாளில் ஒரு முறைகூட மருத்துவரிடம் சென்றது கிடையாதாம். ஒட்டகத்தின் பால், பேரீச்சம் பழம், அரிசி, இறைச்சி ஆகியவற்றையே இவர்தம் வாழ்நாள் முழுவதும் உண்டு வந்தார். தமது வாழ்நாளில் ஆறுமுறை திருமணம் செய்து கொண்ட இவருக்கு, 11 பிள்ளைகளும் 33 பேரக்குழந்தைகளும் இருந்தனர்.

## சாதனை படைத்த இந்தியர்கள்!

1993-ஆம் ஆண்டுக்கான 'கின்னஸ்' சாதனைப் புத்தகத்தில் புதிய சாதனை நிகழ்த்தியுள்ள இரண்டு இந்தியர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள்.

இதில் ஒருவர் சுஜய்குமார் மல்லிக். இவர் ஒரு ஊசி துவாரத்தில் 2 மணி நேரத்தில் 11,796 தடவை நூலைக் கோத்துச் சாதனைப் படைத்திருக்கிறார்.

இன்னொருவர் பெயர் பிபிந்தர் சிங் நெகி. இவர் ஒரு மணி நேரத்தில் 3,196 தடவை தரையில் உட்கார்ந்து எழுந்து சாதனை ஏற்படுத்தியுள்ளார்.

## தேசிய ஒருமைப்பாடு இந்திரா காந்தி விருது

1992-ஆம் ஆண்டு தேசிய ஒருமைப்பாட்டுக்கான இந்திரா காந்தி விருது, மகாராஷ்டிர மாநிலம் வார்தாவிலுள்ள பால்னார் பரம்தம் ஆசிரமத்திற்கு வழங்கப்படவிருக்கிறது.

# மக்கள் நல்வாழ்வுத் துறை

## மாண்புமிகு முதல்வர் ஆய்வு

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் செயல்பாடுகளை 12.11.92 அன்று ஆய்வு செய்தார்.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், தலைமைச் செயலர், நிதிச் செயலர், மக்கள் நல்வாழ்வுத்துறைச் செயலர், தனிச் செயலர் மற்றும் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் அனைத்துத் துறைத் தலைவர்களும் இந்த ஆய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

இந்த ஆண்டு ஜனவரித் திங்கள் முதல் நடத்தப் பெற்று 10,000 மருத்துவ நல முகாம்களைத் தொடர்ந்து, அதன்மேல் எடுக்கப்பட வேண்டிய தொடர் நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார். தாய், சேய் நலம் பற்றிய திட்டங்கள் நமது மாநிலத்தில் மேலும் சிறப்புடன் செயல்படுத்தப்பட வேண்டும் என்றும் கருத்துத் தெரிவித்தார்.

கடந்த 20 ஆண்டுகளில் இம்மாநிலம் குழந்தை இறப்பு விகிதத்தை மிகவும் குறைவாகக் குறிப்பிடத்தக்க நிலையில் கொண்டு வந்துள்ளது. 1990-இல் குழந்தை இறப்பு விகிதம் 1000 பிறப்புக்கு 59 என்று இருந்தது. இதுபோலவே பிறப்பு விகிதமும் கூட குறிப்பிடத்தக்க அளவில் குறைக்கப்பட்டுள்ளது. அதனால் 1000-க்கு, 21.6 ஆக 1990-இல் இருந்தது. மருத்துவம் மற்றும் சுகாதாரத் துறை மற்றும் மாவட்ட நிர்வாகங்களில் உள்ள அனைத்து அலுவலர்களையும் நமது மாநிலத்தில் மக்கள் தொகையை ஒரு நிலையில் வைத்திருக்க அறிவுறுத்தினார்கள். 1991-92-ஆம் ஆண்டில் அறுவைச் சிகிச்சை உள்ளிட்ட குடும்ப நல நடவடிக்கைகளை மேற்கொள்வதில் இந்த அரசு முதல்நிலை அடைந்துள்ளது.

இதற்காக அனைத்து அலுவலர்களையும் பாராட்டி, 1992-93-ஆம் ஆண்டுகளில் மட்டுமன்றி இனிவரும் ஆண்டுகளிலும் இந்த இலக்கினை அடைய வேண்டும் என்றும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவுரைகள் வழங்கினார். மருத்துவ நலத்துறை மற்றும் மாவட்ட நிர்வாகிகள், சிசு உயிர் பிழைத்தல் மற்றும் தாய் நலப் பாதுகாப்புத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை நன்முறையில் செயல்படுத்த வேண்டும் என்றும் கூறினார்.

தாய் மற்றும் சேய்ப் பாதுகாப்பு நலனுக்கென்று ஒவ்வொரு ஆரம்பச் சுகாதார நிலையம், வட்டத் தலைமையிட மருத்துவமனைகள், வட்டத் தலைமையிடமில்லாத பிற இடங்களில் உள்ள மருத்துவமனைகள் ஆகியவைகளில் தொடர்ந்து மருத்துவ முகாம்கள் விரைவில் நடத்தப்பட வேண்டுமெனவும் ஆணையிட்டார்.

### நடமாடும் மருத்துவமனைகள்

கிராமங்களில் அறுவைச் சிகிச்சை மற்றும் இதர வசதிகள் அளிப்பதற்கு நடமாடும் மருத்துவத் திட்டம் (Mobile Hospitals) செயல்படுத்தப்படவேண்டும் என்றும் ஆணையிட்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள், கிராமப்புறங்களில் தேவைப்படும் உயர் மருத்துவ வசதியை இத்திட்டத்தின் வாயிலாக வழங்க முடியும் என்பதால், இரயில்வே நிர்வாகத்துடன் இணைந்து ஒரு திட்டத்தை உருவாக்கிச் செயல்படுத்தவும் ஆலோசனை வழங்கினார். எய்ட்ஸ் கட்டுப்பாடு, காசநோய், புற்றுநோய் மற்றும் இருதயநோய், சுற்றுப்புற சுகாதாரம் முதலியன பற்றி கிராமப் பகுதிகளில் 'நடமாடும் கண்காட்சிகள்' (Mobile Exhibitions) மூலம் ஒரு புதிய சுகாதார விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்று இக்கூட்டத்தில் அவர் ஆலோசனை வழங்கினார்.

### எய்ட்ஸ்

மாண்புமிகு முதல்வர் அவர்கள் மேலும் பேசுகையில், ஹெச்.ஐ.வி. தொற்றுநோய் மற்றும் எய்ட்ஸ் நோயினால் ஏற்படும் அபாய விளைவுகளை எல்லாத் தரப்பு மக்களின் கவனத்திற்கும் கொண்டு செல்ல ஆக்கபூர்வ நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தினார். இந்நோய்க்கு மருத்துவ நிவாரணம் இல்லை, மருந்தும் இல்லை. தடுப்பு முறை ஒன்றுதான் இதற்கு வழியாகும். இந்நோய் பரவுதலைத் தடுக்கவும், கட்டுப்படுத்தவும் மக்களிடையே தகவல் தொடர்புச் சாதனங்களான தொலைக்காட்சி, வானொலி, கலை நிகழ்ச்சிகள் மூலம் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்று ஆலோசனை வழங்கினார்.

மேலும், எல்லாத் திரையரங்குகளிலும் 'சிலைடு' மற்றும் சிறிய விளம்பரப் படங்கள் மூலம் இந்நோயின் அபாயம் பற்றி மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டும் என்றும் ஆணையிட்டார். தொண்டு நிறுவனங்கள் மற்றும் மக்களிடையே பிரபலமாக உள்ளவர்களையும் இதற்காகப் பயன்படுத்திக் கொள்ளலாம். ஒவ்வொரு மாவட்டத்திலும் பல்வேறு துறையில் உள்ள அலுவலர்களை உள்ளடக்கிய ஒரு குழுவை அமைத்து, அதன் மூலம் இத்திட்டத்திற்கு ஒத்துழைப்புப் பெற வேண்டும். ஒருமுறை பயன்படுத்தி அழித்து விடக்கூடிய ஊசியை (Disposable Syringe) அரசு மருத்துவமனைகளில் பயன்படுத்தும் முறையினைத் 'தேசிய எய்ட்ஸ் ஒழிப்புத் திட்டத்தின்' கீழ், உதவி பெற்று விரைவில் செயல்படுத்த வேண்டும் என்று கருத்தறிவித்தார்.

'தனி நபர் உடல்நலம் மற்றும் சுகாதாரம்' (Personal hygiene) பற்றிய எண்ணத்தையும் அவசியத்தையும் மக்களிடையே பரவச் செய்ய வேண்டிய அவசியத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வலியுறுத்தினார். காலரா, மூளைக் காய்ச்சல், எய்ட்ஸ் முதலிய சிக்கலான பிரச்சினைகளை உறுதியுடன் எதிர்த்துச் சமாளிப்பதற்குத் தகவல் தொடர்புச் சாதனங்களைப் பயன்படுத்த வேண்டும், எய்ட்ஸ் கட்டுப்பாடு மற்றும் சுற்றுப்புறச் சுகாதாரம் ஆகியவை பற்றிய திட்டத்தைத் தயாரித்துச் செயலாக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

### புற்றுநோய்க் கட்டுப்பாடு

புற்றுநோயின் ஆரம்ப அறிகுறியைக் கண்டறிய வேண்டும் என்று வலியுறுத்திய

## சுகாதாரம்

வயிற்றுப்போக்கு நோய் எளி தில் பரவக் கூடியது. குறிப்பாக ஐந்து வயது வரையுள்ள குழந்தை களை இந்நோய் அதிகம் தாக்கு கிறது. குழந்தைகளுக்கு வயிற்றுப் போக்கு அல்லது பேதி ஏற்படும் போது உடனடியாக சிகிச்சை அளிக் கத் தவறினால் உயிருக்கே ஆபத் தாகும்.

சுத்தமில்லாத குடிநீர், சுத்தம் செய்யப்படாத பாலூட்டும் குப்பிகள் முதலியன இந்நோயைப் பரப்பத் துணை போகின்றன. அழுக்கான கைகளுடன் உண்ணுதல், பராமரிக் கப்படாத கழிப்பிடங்கள், ஈக்கள் ஆகியவற்றாலும் கிருமிகள் பரவி வயிற்றுப்போக்கு ஏற்படுகிறது.

வயிற்றுப்போக்கின் மூலம் உடலில் உள்ள உப்புச் சத்து விரய மாகிறது. நமது உடலில் 80 சதவீதம் நீர் உள்ளது. இந்நோயினால் நீரும், உப்பும் உடலிலிருந்து வெளியேறி தளர்ச்சியடைந்து செயல்பட முடி யாத நிலை ஏற்படுகிறது. இதைத் தான் நீரிழப்பு என்கிறோம்.

நீரிழப்பு குழந்தைகளுக்கு மோச மான விளைவுகளைத் தோற்று விக்கும். இதை ஈடுகட்ட உடனடி யாக உப்பு-சர்க்கரை கலந்த நீரைக் கொடுக்க வேண்டும். நன்கு கொதிக்க வைக்கப்பட்டு ஆறிய 200 மில்லி லிட்டர் நீரில் ஒரு சிட்டிகை உப்பும், ஒரு தேக்கரண்டி சர்க்கரையும் சேர்த்தால் நிவாரணி ரெடி!

எலுமிச்சை-சர்க்கரை கலந்த சாறு, நீர் ஆகாரம், உப்பு-தயிர் கலந்த லஸ்ஸி, பார்லி நீர், இளநீர் ஆகியவற்றையும் நோயால் தாக்கப் படும் குழந்தைகளுக்குக் கொடுக் கலாம்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் - அடையாறு புற்றுநோய் நிறுவனம் மற்றும் காஞ்சிபுரம் அறிஞர் அண்ணா புற்று நோய் நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் தென்னார்க்காடு மாவட்டத்தில் துவக்க விருக்கும் 'புற்றுநோய் கண்டறியும் திட்டம்' தீவிரமாகச் செயல்படுத்தப்பட வேண்டும் என்றும், காஞ்சிபுரம் அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனை, சென்னை அரசு பொது மருத்துவமனை யிலுள்ள பார்னார்டு நிலையக் கதிர்வீச்சு மற்றும் புற்றுநோய்ப் பிரிவுகளுக்கு ஒளிக் கதிர் சிகிச்சைப் பிரிவு உடனடியாக நிறுவப்பட வேண்டும் என்றும் கூறினார். ரூ.125 இலட்சம் இந்த இரண்டு பிரிவு களுக்கும் செலவழிக்கப்படும், ஒளிக்கதிர் சிகிச்சைப் பிரிவுகள் தஞ்சாவூர், கோயம் புத்தூர் மற்றும் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரிகளில் படிப்படியாகச் செயல் படுத்தப்பட வேண்டும் என்றும், இதனால் தொலை தூரத்தில் உள்ள கிராம மக்கள் பெரிதும் பயன்பெறுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்,

**உலக வங்கி உதவியுடன் நல்வாழ்வுத் திட்டம்**

வெளிநாட்டு உதவியுடன் மக்கள் நல வாழ்வுத் துறை மூலம் செயல்படுத்தப் படும் திட்டங்கள் பற்றி, மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆய்வு செய்தார்கள். சென்னை மாநகராட்சி நீங்கலாக, மேலும் 23 நகராட்சிகள் மற்றும் மாநகராட்சி களுக்கு 'இந்திய மக்கள் தொகைத் திட்டம் - V (Indian Population Project Phase V) விரிவுபடுத்த வேண்டும் என்று வலியுறுத் தினார். ரூ.65 கோடி செலவில் செயல் படுத்தப்படும் இத்திட்டத்தினால், நகர்ப் புறப் பகுதிகளில் உள்ள குடிசைவாழ் கர்ப்பிணித் தாய்மார்களுக்குப் பிரசவத் திற்குமுன் மருத்துவ வசதி மற்றும் குழந் தைகளுக்கு நோய்த் தடுப்பு மருந்து அளித்தல் போன்ற பணிகள் நிறை வேற்றப்படும். இத்திட்டத்தின்கீழ் ஒரு இலட்சம் மக்கள் தொகையுள்ள அனைத்து நகரங்களும் பயன்பெறும். இத்திட்டத்தில் 3000 மக்கட் தொகையுள்ள பகுதிக்கு ஒரு பல்நோக்கு - சுகாதாரப் பெண் பணியாளரும், 30,000 மக்கட் தொகை யுள்ள பகுதிக்கு ஒரு பெண் மருத்துவ அலுவலரும் பணியாற்றுவர்.

நோய்த் தடுப்பு மருந்துகள் வழங்கும் திட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆய்வு செய்தார். மைய அரசு - சர்வதேச ஆய்வுக் குழுவைத் தமிழகம், மற்றும் மகாராஷ்டிரம், மத்தியப்பிர தேசம், ஒரிஸா, அரியானா மாநிலங் களுக்கு அனுப்பியது. இத்திட்டத்தைப் பற்றி ஆய்வு செய்து இதில் கண்டறிந்த தகவல்கள் மீது மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆலோசனை வழங்கினார்.

குழந்தைகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்குச் சிறந்த மருத்துவச் சேவையை அளித்து, தமிழகம் இதில் சிறப்பான இடத்தைப் பெறுவதற்குப் பாடுபட்ட அலுவலர்களை இக்கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பாராட் டினார். இப்பணியில் தொடர்ந்து ஈடு பட்டு, கிராமங்களில் குழந்தைகள் மரண விகிதத்தை மேலும் குறைக்கவேண்டும் என்றும் அவர் கருத்துத் தெரிவித்தார்.

**கண்பார்வைப் பாதுகாப்புத் திட்டம்.**

கண்பார்வைப் பாதுகாப்பு, காச நோய்க் கட்டுப்பாடு, தொழுநோய்க் கட்டுப்பாடு முதலிய திட்டங்கள் செயல் பாடு பற்றி முதல்வர் அவர்கள் ஆய்வு செய்தார். பல ஆண்டுகளாகக் கண் புரைநோய் அறுவைச் சிகிச்சை ஆண் டுக்கு ஒரு இலட்சம் நபர்களுக்கு மட்டுமே செய்யப்பட்டு வந்தது. ஆனால் 1991-92-ஆம் ஆண்டில் மட்டும் 1.5 இலட்சம் நபர்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டு, புதிய ஒரு சாதனை நிகழ்த்தப்பட்டது. இப்பணியில் தொண்டு நிறுவனங்களின் பங்கினையும், சேவை யையும் முதல்வர் பாராட்டினார். மேலும், முழு கண்பார்வைப் பாதுகாப்பு அளிக்கும் வகையில், உலக வங்கி உதவி யுடன் ஒரு திட்டத்தைத் தயாரிக்குமாறு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார். இத்திட்டம் 1993-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களிலிருந்து செயலாற்றப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

**மலேரியா நோய் ஒழிப்பு**

மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் எல்லாம் - நீர் தேங்கியுள்ள பகுதிகளி லும், தெருக்களிலும் மலேரியா நோய் ஏற்படுவதையும், பரவுவதையும் கட்டுப் படுத்தத் தடுப்பு மருந்துகளைத் தெளிக்கத் தீவிர நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத் திய மாண்புமிகு முதல்வர் அவர்கள், அலுவலர்கள், சென்னை மாநகராட்சி யினர் ஆகியோர் கூட்டாகச் சேர்ந்து விவாதித்து மலேரியா ஒழிப்புத் திட்டத் தைச் செம்மையான முறையில் நடை முறைப்படுத்த வேண்டும் என்றும் ஆணையிட்டார்.

**மருந்துகள்**

அரசு மருத்துவமனைகளில் மருந்து களின் இருப்பு (Stock) குறித்து ஆய்வு செய்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் மருந்துகளின் விலை ஏற்றம், அதனால் இதற்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து வாங்கும் மருந்துகளின் அளவு குறைந்துள் ளது பற்றியும் சுட்டிக்காட்டினார். மேலும் அவர் பேசுகையில் - ஏழை மக்களுக்குத் தேவையான அத்தியாவசியமான மற்றும் உயிர்காக்கும் மருந்துகள் மலிவான விலையில் கிடைப்பதற்காக மைய அரசு வழிவகை செய்ய வேண்டும் என்று மைய

அரசினைக் கோரவேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் கருத்துத் தெரிவித்தார்கள். இதனால் மக்களுக்கு மருத்துவ வசதி அளிக்கும் மாநில அரசின் நிதித் திறன் குறையாமலிருக்கும், மைய அரசின் தற்போதைய தாராள (விற்பனைக்) கொள்கை, ஏழை மக்களுக்குத் தேவையான மருந்துகளின் விலை ஏற்றத்தை உண்டாக்காமல் இருக்க வேண்டும் என்றும் அவர் மேலும் பேசுகையில் கேட்டுக் கொண்டார்.

மருந்துகள் தாராளமாகக் கிடைப்பதற்கும், அவைகளின் விலைகள் அரசின் கட்டுப்பாட்டில் இருப்பதற்கும் மைய அரசிடம் கேட்டுக் கொள்ளப்படும்; மருந்துகள் கொள்முதல் செய்தல், இருப்பு வைத்தல் மற்றும் விநியோகம் செய்தல் போன்ற பணிகள் ஒரு மையமான இடத்திலிருந்து செயல்படவேண்டும்; இந்த முறையின் மூலமாக மாவட்டங்களிலுள்ள மருத்துவமனைகள், தங்களுக்குத் தேவையான மருந்துகளை மாவட்ட மருத்துவக் கிடங்குகளிலிருந்து உடனுக்குடன் பெற இயலும். இப்பணி விரைவாக ஆய்வு செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் மாண்புமிகு முதல்வர் அறிவுறுத்தினார்.

அரசு மருத்துவ மனைகளில் பணிபுரியும் தற்போதைய மருத்துவர்களின் எண்ணிக்கையை ஆய்வு செய்த அவர், எல்லா ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும் ஒரு பெண் மருத்துவர் இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளைவிட வட்ட மாவட்ட அரசு மருத்துவமனைகளில் புறநோயாளிகளுக்கு மருத்துவச் சிகிச்சை அதிகமாக அளிக்க வேண்டியுள்ளது. இந்த மருத்துவமனைகள் மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும் என்றும், தகுந்த புறநோயாளிப் பிரிவு (Out Patient Ward) நிறுவப்பட வேண்டும் என்றும், இதனால் புறநோயாளி சிகிச்சையின் தரம் மேம்படுத்தப்பட முடியும் என்றும் இந்த ஆய்வுக் கூட்டத்தில் பங்கேற்ற மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டார். மேலும் வட்ட மாவட்ட மருத்துவமனைகளில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்த, தகுந்த திட்டம் தீட்டி விரைவில் செயல்படுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.


தமிழரசு

அடுத்த இதழில்...

• நீங்க நல்லா இருக்கணும்!
—திரைப்பட விமர்சனம்

• வரலாறு படைத்த டாக்டர் ஆர்.கே. சண்முகனார்
—பேராசிரியர் டாக்டர் சை.வே. சிட்டிபாபு

• மூளைக் காய்ச்சல் நோய் எப்படி ஏற்படுகிறது?
—டாக்டர் எம்.ஏ. அலிம் எம்.டி.,

• அதிசய மருந்து அதிமதுரம்!
—டாக்டர் ஏ.ஆர்.என். துரைராஜ்

• சிறுசேமிப்புத் திட்டங்களும்
அரசு அளிக்கும் சலுகைகளும்

• ஆராய்ச்சிப் பேரறிஞர் மயிலை சீனிவேங்கடசாமி
—பேராசிரியர் ம. இராசசேகர தங்கமணி

• மாவட்டங்களில் - அரசு நலத்திட்டப்பணிகள்
—தொகுப்புக் கட்டுரைகள்

மற்றும் கவிதைகள் —
கார்ட்டூன் — சுவையான துணுக்குகள் முதலியன

தமிழரசு

படிக்க — பயன்பெற — பாதுகாக்க!

# கூட்டுறவுத் துறையின் மாநிலத் தொடக்க விழா

இந்தியக் கூட்டுறவு விழாவின் மாநிலத் தொடக்கவிழா, வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத் தலைநகரான வேலூரில் மிகவும் சிறப்புற நடைபெற்றது; இது 39-வது இந்தியக் கூட்டுறவு வார விழாவாகும். இதைத் தொடர்ந்து தமிழகமெங்கும் இவ்விழா ஒரு வார காலம் தொடர்ந்து நடைபெற்றது.

14.11.92-இல் அண்ணா கலையரங்கத்தில் இவ்விழா தொடங்கும் முன்பாக- அன்று மாலை - மாணவ மாணவிகளும் பொதுமக்களும் பங்கேற்ற கூட்டுறவுப் பேரணி வேலூர் நகரை வலம் வந்தது; அப்பேரணி வந்து சேர்ந்த பின்னர் மாணவ மாணவிகள் பங்கேற்ற கலை நிகழ்ச்சி அண்ணா கலையரங்கில் நடைபெற்றது. அங்கு, கூட்டுறவை விளக்கும் புகைப்படக் கண்காட்சியும் நிறுவப்பட்டிருந்தது.

இந்தியக் கூட்டுறவு வார விழாவின் மாநிலத் தொடக்கவிழா, அவ்வரங்கில், இனிதே தொடங்கியது. வட ஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சு.இராமசுந்தரம் இ.ஆ.ப., அவர்கள், விழாவிற்குத் தலைமை தாங்கினார்.

**வரவேற்புரை:**

தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு ஒன்றியத்தின் கூடுதல் பதிவாளரும், சிறப்பு அலுவலருமான திரு. மு.கிருஷ்ணசாமி வரவேற்புரையாற்றினார்.

அதைத் தொடர்ந்து— பெரணமல்லூர் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஏ.கே.சீனுவாசன், தண்டராம்பட்டுத் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு. எம்.கே. சுந்தர், போளூர் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு. டி. வேடியப்பன், வேலூர் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு. சி.ஞானசேகரன் முதலானோரும்— தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திரு. ஐ.தி.ஆச்சார்யுலு, இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு உணவு கூட்டுறவுத் துறை மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறைச் செயலர் திரு. ஏ.கே. வெங்கட்டசுப்பிரமணியன், இ.ஆ.ப., ஆகியவர்களும் வாழ்த்துரை வழங்கினார்கள்.

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. ஜி. விசுவநாதன் அவர்கள், அவ்விழாவைத் துவக்கி வைத்துச் சிறப்புரையாற்றினார்.

அதற்கு முன்னதாகக் 'கூட்டுறவு முரசு' என்கிற மாதமிருமுறை தமிழ் ஏடு ஒன்றினையும், 'The Tamil Nadu Journal of Co-operation' என்கிற ஆங்கில மாத ஏடு ஒன்றினையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வெளியிட்டு வழங்கினார். இவ்விரு ஏடுகளும் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் வெளியீடுகளாகும்.

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. ஜி. விசுவநாதன் அவர்கள் பேசும் போது குறிப்பிட்டதாவது:

''இங்கிலாந்து நாட்டில் தோன்றி, இன்று உலக நாடுகளிலெல்லாம் ஓர் இயக்கம் பரவியிருக்கின்றதென்றால், அது கூட்டுறவு இயக்கம்தான். நம் இந்திய நாட்டில்- இந்த இயக்கமானது தமிழ்நாடு, குஜராத், மகாராட்டிரம் ஆகிய மூன்று மாநிலங்களிலேயே வலுப்பெற்றுள்ளது. இந்த மூன்றில் எங்கே பெரிய அளவில் பரவியிருக்கிறதென்றால், அது நமது தமிழ்நாட்டிலேதான் என்று கூறிக்கொள்ளுவதிலே நான் பெருமைப்படுகிறேன். இந்தப் பெருமைக்கும் புகழுக்கும் காரணமான அதிகாரிகளுக்கும், ஊழியர்களுக்கும் அரசு சார்பில் நான் என் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆட்சித் திறத்தால், இன்னும் ஒரே ஆண்டுக் காலத்தில்- இந்தியாவிலேயே எந்தக் குறையும் இல்லாதது தமிழ்நாடு கூட்டுறவுத் துறையே என்ற நிலை ஏற்பட்டுவிடும் என்பது நிச்சயம்.''

—இவ்வாறு உரையாற்றிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட்டுறவு குறித்த கட்டுரைப் போட்டிகளிலும், பேச்சுப் போட்டிகளிலும் வெற்றிபெற்ற மாணவ மாணவிகளுக்கும் - மாநில அளவிலும் மாவட்ட அளவிலும் சிறந்து விளங்கிடும் கூட்டுறவு அமைப்புகளுக்கும் பரிசுகளும் கேடயங்களும் வழங்கினார்.

இந்த விழாவில் - கூட்டுறவுச் சங்கத்தின் சார்பில், முதியோர் இல்லம் ஒன்றிற்கு 3 மின்விசிறிகள் வழங்கப்பட்டன. விழா முடிவில் - வடஆர்க்காடு மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் தனி அலுவலர் திரு. க.பு.பெ. பன்னீர்செல்வன் நன்றி கூறினார்.

இரவில்- நடிகை ஜெயசத்தியா குழுவினரின் 'சொன்னாக் கேட்டுக் கணும்' என்கிற நாடகம் நடத்தப் பெற்றது.

—நிகழ்ச்சித் தொகுப்பு
பி.எல்.ஆர்.

## கூட்டுறவு

**நாட்டில் தற்போது, 3.53 இலட்சம் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. அவற்றில் 16 கோடி உறுப்பினர்கள் இருக்கின்றனர். இச்சங்கங்களின் மொத்த மூலதனம் ரூ.70,000 கோடி. விவசாயக் கடன் கூட்டுறவுச் சங்கங்கள் 1990-91-இல் ரூ.5,603.5 கோடி கடனாக அளித்தன. ரூ.6,274 கோடி வேளாண் பொருட்களை வர்த்தகம் செய்துள்ளன.**

**உழவர்களுக்குத் தேவையான உரங்கள், இடுபொருட்கள் ஆகியவற்றை அளிப்பதற்காக 76,000 உரக் கடைகளை அமைத்து, அதன் மூலம் 52 இலட்சம் டன் உரங்களை விநியோகித்தன.**

# வீராங்கனை ருக்மிணிலட்சுமிபதி

ரகமி



**(அந்நாளில் நம் இந்தியச் சுதந்திரப் போராட்டங்களில் பெரிதும் ஈடுபட்டுச் சிறை சென்ற முதல் வீராங்கனை ருக்மிணிலட்சுமிபதி ஆவார். 1892-ஆம் ஆண்டு டிசம்பர் 6-இல் பிறந்த இவரது பிறந்ததின நூற்றாண்டு டிசம்பர் 6-ந் தேதி நிறை வடைகிறது. அதனையொட்டி இச்சிறப்புக் கட்டுரை வெளி யிடப்படுகிறது.)**

"மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா!'' என்ற கவிமணிதேசிக விநாயகம்பிள்ளை யின் வாக்கினைச் சிறப்பிக்கும் வகையில், பிறந்தவர்தான் சுதந்திரப் போராட்ட வீராங்கனை ருக்மிணிலட்சுமிபதி ஆவார்.

அந்நாளில் நம் நாட்டு விடுதலைக்காக ஆங்கிலேயர்களை எதிர்த்து, "வந்தே மாதரம்! பாரதமாதாவுக்கு ஜே! மகாத்மா காந்திஜிக்கு ஜே! இந்திய வீரப் பெண் மணிகளே! காந்தியடிகளின் தலைமையில் அணிவகுத்து நம் தாய் நாட்டின் கண்ணி யத்தைக் காப்பாற்ற முன்வாருங்கள்!'' என முழக்கமிட்டே சிறை சென்ற முதல் பெண்மணி ருக்மிணிலட்சுமிபதி!

தமிழகத்தில் 1937-ஆம் ஆண்டு மூதறிஞர் இராஜாஜி தலைமையிலான அமைச்சரவையில், துணைச் சபாநாயக ராகப் பதவி வகித்த பெண்மணி ருக்மிணி லட்சுமிபதி. அடுத்து, 1946- ஆம் ஆண்டு தமிழகத்தில் 'ஆந்திர கேசரி' டி. பிரகாசம் தலைமையிலான அமைச்சர வையில் சுகாதார அமைச்சராகப் பதவி வகித்த முதல் பெண்மணி ருக்மிணி லட்சுமிபதி ஆவார்! பல சிறப்புகளைக் கொண்ட ருக்மிணிலட்சுமிபதி இந்தியச் சுதந்திரப் போராட்டத்தில் ஆழ்ந்த ஈடு பாடு கொண்டுள்ளதை, வரலாற்றிலேயே அவருக்குத் தனி இடம் தந்துள்ளது.

சென்னை திருவல்லிக்கேணி துள சிங்கப் பெருமாள் கோவில் தெருவில் வாழ்ந்தவர் பழம்பெரும் வழக்கறிஞர் 'ராஜா' தும்மலபல்லிராமராவ். ஆந்திர மாநிலம் 'கோல் கொண்டா' வைணவ ரான இவர், ஆசாரம் மிகுந்த பெரிய குடும்பி. இவர் தனது மூன்றாவது மகள் சூடாமணியை மதுரையிலே வாழ்ந்து வந்த அதே 'கோல்கொண்டா' வைண வரும் பிரபல தனவந்தரான 'ஹூக்கில்லா' சீனிவாசராவுக்குத் திருமணம் செய்து கொடுத்தார். திருமணத்திற்குப் பின் சென்னை திருவல்லிக்கேணிக்கே குடி வந்த சீனிவாசராவ் சூடாமணி தம்பதி யருக்கு, மூத்தது சுந்தரராஜன் என்ற மகனுக்குப்பின், 1892-ஆம் ஆண்டு டிசம்பர் 6- இல் சென்னையில் பிறந் தவரே ருக்மிணி ஆவார்.

தனது 10 வயதான மகன் சுந்தர ராஜனுக்கு 7 வயதான ராஜாமணி என்ற சிறுமியைப் 'பால்ய விவாகம்' செய்தவர், மகள் ருக்மிணிக்குப் பால்ய விவாகம் செய்யாமல் அவள் படித்துப் பட்டங்கள் பெறவேண்டுமென்றே விரும்பினார். திருவல்லிக்கேணியிலிருந்து எழும்பூரி லுள்ள 'மாநிலப் பயிற்சிப் பள்ளியில் கல்வி பயில, தன் மகள் ருக்மிணியுடன் மருமகள் ராஜாமணி இருவரையுமே, கைரிக்ஷா வண்டி மூலம் அனுப்பி வந்தார். இளம் வயதிலேயே ருக்மிணி தமிழ், ஆங்கிலம், இந்தி, லத்தீன், பிரெஞ்சு மொழிகளில் முதல் தரத்தில் தேர்ச்சியும் பெற்றார். இந்துஸ்தானி, மற்றும் மேல்நாட்டுச் சங்கீதங்களைப் பயின்ற இவர் வீணை மீதுள்ள ஆர்வத் தினால் அந்நாளைய பிரபல வீணைப் பாடகி தனம்மாளிடம் முறைப்படி வீணை யும் பயின்றார்.

ருக்மிணி பள்ளி இறுதி வகுப்பு படிக்கையில் அவரது தந்தை சீனிவாச ராவ் காலமானார். இதனால் ருக்மிணி தனது படிப்பை நிறுத்தாமல், மேலும் தனது இடைநிலைக் கல்வியைப் 'பெண்டிர் கிறிஸ்துவக் கல்லூரி'யில் படித்து வந்தார். திருமண வயதான ருக்மிணிக்குப் பல இடங்களிலிருந்து பெண்கேட்டு

வந்தும், ருக்மிணி தனது திருமணத்தைப் பற்றி யோசிக்காமல் கல்லூரிப் படிப் பிலேயே வெகு தீவிரமானார். அந் நாளில் திருவல்லிக்கேணி துளசிங்கப் பெருமாள் கோவில் தெருவிலேயே தனது சிறு மருத்துவமனையை வைத்து சிகிச்சை களைச் செய்து வந்தவர் 'ஆசந்த' லட்சுமிபதி என்ற இளம் மருத்துவர். இவரது பூர்வீகம் ஆந்திராவிலுள்ள 'ஆசந்த' என்ற தனிச் சிறப்புகள் வாய்ந்த ஊர். 'ஆசந்த-ஸ்ரீஸ்வாமுலவாரு' என்றழைக்கும் வெங்கட சுப்பராயுடு குடும்பத்தைச் சேர்ந்தவர் லட்சுமிபதி. 'ஆசந்த' லட்சுமிபதிக்கு இளமையிலேயே மனைவியான சீதம்மா, மூன்று குழந்தை களுக்குத் தாயானபின், தனது நாலாவது பிரசவத்திலேயே காலமானார். மனை வியை இழந்து லட்சுமிபதி தனது மேல் படிப்பு மற்றும் உத்தியோகத்திற்காகவும் சென்னைக்கு வந்தவர் திருவல்லிக்கேணி யிலேயே ஓர் அறையில் தங்கினார்.

இவரது மருத்துவமனைக் கட்டடத் திலேயே 'விஞ்ஞானச் சந்திரிகை' என்ற நூலகத்திற்குத் தனது பாட நூல் சம்பந்த மாக அடிக்கடி வரும் கல்லூரி மாணவி யான ருக்மிணியின் மீது ,அந்த இளம் டாக்டர் லட்சுமிபதியின் பார்வைகளும் பட்டன. அதோடு ருக்மிணியின் குடும்பத் தினரும் இவரிடம் சிகிச்சைக்கு வருவதும் உண்டு. ஒரு சமயம் ருக்மிணி தனது உள்ளங் காலில் ஏற்பட்ட காயத்திற்குச் சிகிச்சை பெற தனது சிற்றன்னையோடு லட்சுமிபதியின் மருத்துவமனைக்கு வந் தார். சிகிச்சையின் போது இவர்கள் இருவர் சந்திப்பில் ஏற்பட்ட ஒரு புதிய ஸ்பரிசம் அவர்கள் மனதில் வேரூன்றித் துளிர்விடத் தொடங்கியது.

லட்சுமிபதியின் வரலாறுஅப்போதைய நிலைமையை நன்கறிந்த ருக்மிணி அவருக்கு இரண்டாம் தாரமாக வாழ்க் கைப்பட விரும்பினார். பலத்த எதிர்ப்பு களுக்கிடையே 1911-ஆம் ஆண்டு டிசம்பர் 3-ந் தேதி சென்னையில் ருக்மிணிக்கும், ஆசந்த லட்சுமிபதிக்கும் திருமணம் சிறப்பாக நடந்தது.

கணவர் ஆசந்தலட்சுமிபதி சிறந்த தேசியவாதி. சுதேசியத்தில் பற்று மிகுந்தவர். அன்றைய அரசியலின் முக்கியத் தலைவர்களெல்லாம் லட்சுமி பதியின் இல்லத்திற்கே வந்து, இந்தியச் சுதந்திரம், சுதேசியம் மற்றும் அரசிய லைப் பற்றி விவாதிப்பதும் உண்டு. இவர்களது பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட ருக்மிணிலட்சுமிபதியின் மன திலும் சுதந்திரப்பற்று ஆழப்பதிந்தது. தானும் அரசியலில் ஈடுபட விரும்பிய தற்கு அவர் கணவர் லட்சுமிபதியும் அந்த எண்ணத்தை மேலும் ஊக்குவித்தார்.


சென்னை மாநிலக் கல்லூரியில் படித்த ருக்மிணிலட்சுமிபதி சமூக சேவை, சீர்திருத்தங்களில் பெரிதும் ஈடுபட்டார். 'பாரத ஸ்திரி மகா மண்டலம்' சென்னைக் கிளையின் செயலாளராக வும், இந்தியப் பெண்டிர் சங்கத்தின் உறுப்பினராகவும் பணியாற்றினார். சமுதாயத்தில் பெண்களுக்கு ஏற்பட்டுள்ள அநீதிகளை ஒழித்து, அவர்களின் வாழ்க் கைத் தரம் மேன்மை அடையவும், வெகு தீவிரமானார். அக்காலத்தில் ஏற்பட்ட சீர்திருத்தங்களில் பெண்கள் திருமண வயது வரம்புச் சட்டம் (சாரதா சட்டம்) இவரால் வலுப்பெற்றது. பெண்களை ஒருங்கிணைத்து அவர்களைப் பொது வாழ்விலும், அரசியலிலும் பங்குபெற முன்னோடியாகத் திகழ்ந்தவர்.

இவரது ஆங்கிலப் பேச்சுத் திறமை யைக் கண்ட அன்றைய பிரிட்டிஷ் அரசு 1926-ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டின் தலைநகரான பாரிசில் நடைபெற்ற 'மகளிர் வாக்குரிமைக்கான 10-வது சர்வதேச மாநாட்டிற்கு 'இந்தியாவின் பிரதிநிதியாகக் கலந்துகொள்ள அனுப்பி வைத்தது. இந்த வாய்ப்பைப் பயன் படுத்திய ருக்மிணி லட்சுமிபதி ஐரோப்பா விலும், பிரிட்டனிலும் விரிவான சுற்றுப் பயணத்தின்போது இந்தியரின் பெருமை, இந்தியச் சுதந்திரம் பற்றிச் சொற்பொழி வுகள் செய்ததோடு மக்கள் தொகைப் பெருக்கத்தைக் குறைக்க அந்தந்த நாடு களிலுள்ள திட்டங்களையும் நன்கறிந்தவர்.

நாடு திரும்பிய அவர் 1928-இல் தேசிய காங்கிரஸ் அமைப்பில் தன்னை இணைத்துக் கொண்டதோடு, தேசியத் தலைவர்களின் ஆலோசனைப்படியே நாட்டு விடுதலைக்காகத் தீவிரமானார். இச்சமயத்தில்தான் பிரிட்டிஷ் அரசாங்கம் சாதாரண உப்பிற்கு வரிவிதித்தது. இதனை எதிர்த்து மகாத்மா காந்தியடிகள் 1930-ஆம் ஆண்டு மார்ச் 12-இல் தனது சபர்மதி ஆசிரமத்திலிருந்து 'தண்டி' என்ற இடத்திற்குத் தனது தொண்டர் படையுடன் சென்று ஏப்ரல் 9-ந் தேதி ஆட்சியாளரின் தடை உத்தரவுகளை மீறி உப்பு அள்ளினார்.

அதுபோலவே தமிழ்நாட்டிலும் வேதாரண்யம் என்ற இடத்தில் அரசின் தடைகளை மீறி இராஜாஜியின் தலைமை யில் தொண்டர்கள் உப்புச் சத்தியாக் கிரகத்தில் ஈடுபட்டனர். இதில் ருக்மிணி லட்சுமிபதியின் பங்கு மகத்தானது. ஆண் களுக்குச் சரியாக ஒரு பெண்மணி இத்தனைத் துணிச்சலோடு போராட்டத் தில் ஈடுபட்டதையும் அரசாங்க உத்தரவு

**பெருந்தலைவர் காமராஜ், சர்தார் ஆதிகேசவலு நாயக்கர், எம். பக்தவத்சலம், கிருஷ்ணஸ்வாமி, எஸ். சத்தியமூர்த்தி, பண்டித ஜவகர்லால் நேரு, ருக்மிணி லட்சுமிபதி.**



களை மீறியதற்காகவும் அன்றைய அரசு அவரை கைதுசெய்து நீதி விசாரணை செய்து, ஓராண்டு வெறும் காவல் தண்டனை அளித்து வேலூர் சிறைக்கு அனுப்பியது. அங்கு சிறையில் பல பெண் கைதிகளோடு இருக்க வேண்டிய நிலைமையையும், அசௌகரியங்களையும் நேரிலேயே கண்ட ருக்மிணிலட்சுமிபதி, சிறையில் அரசியல் கைதிகளில் பெண்களுக்கெனத் தனி அறை ஒதுக்க வேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்தினார்.

அடுத்து, 1932-இல் ஒத்துழையாமை இயக்கத்தின் போதும், பின்னர் தனி நபர் சத்தியாக்கிரகத்தின்போதும் இவர் சிறை சென்றார். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் துணைத் தலைவராகவும் சிறிது காலம் பொறுப்பேற்றிருந்தார். 1937-இல் பண்டித நேரு அகில இந்தியக் காங்கிரஸ் தலைவராக இருந்தபோது, இந்தியக் காங்கிரஸ் செயற்குழுவில் ருக்மிணிலட்சுமிபதி அதில் முக்கிய இடமும் பெற்றிருந்தார். 1935-இல் சென்னை நகரில் பொதுத் தொகுதியிலிருந்து காங்கிரஸ் வேட்பாளராக மேல்சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஜஸ்டிஸ் கட்சிக்குப் பின்பு முதலாவது காங்கிரஸ் அமைச்சரவை மூதறிஞர் ராஜாஜியின் தலைமையில் அமைந்தபோது, அதில் ருக்மிணிலட்சுமிபதி துணைச்சபாநாயகராகப் பதவியும் வகித்தார். அப்போது அவர் இந்திய நலவெண்ணக் குழுவில் இடம் பெற்று ஜப்பான் நாட்டிற்குச் சென்று வந்தார்.

இரண்டாம் உலகப் போர் முடிந்து மீண்டும் காங்கிரஸ் ஆட்சிப் பொறுப்பேற்றது. தமிழகத்தில் 'ஆந்திர கேசரி' டி. பிரகாசம் தலைமையிலான அமைச்சரவையில் ருக்மிணிலட்சுமிபதி சுகாதார அமைச்சராகப் பதவி ஏற்றதும் அவர் மருத்துவத்துறையிலும் பொதுமக்கள் நலனில் தானாகவும், தனது கணவர் டாக்டர் 'ஆசந்த' லட்சுமிபதியுடன் இணைந்து தன்னலன் கருதாது ஆற்றிய பணிகள் ஏராளம்!

தவிர, சென்னை மாநகராட்சி, செங்கல்பட்டு வாரியம் போன்ற பல வேறு உள்ளாட்சி அமைப்புகளில் ஆர்வத்துடன் பணியாற்றினார். சென்னையில் கௌரவ நீதிபதியாகவும் இருந்தார். தொழிலாளர் நலன்களில் பெரிதும் அக்கறை கொண்ட இவர் தொழிலாளர்களின் பிரச்சினைகளை உடனுக்குடன் ஆராய்ந்து சுமுகம் காண்பதில் மிக்க திறமை பெற்றவர். இவரது தொழிலாள நலம் நேரிலேயே கண்ட, திரு.வி.க. அவர்கள் இவரைத் 'தொழிலாளர்களின் தாயார்' என்றும் பாராட்டியுள்ளார்.

மத உணர்வின்றி, நடைமுறைக்கேற்ற வகையில் தனது கருத்துக்களை மாற்றிக் கொண்டவர். சாதி ஒழிப்பு, தீண்டாமை, தேவதாசி முறை ஒழிப்புப் போன்ற சமூக மேம்பாட்டுச் சட்டங்களை இயற்றி அவைகளை வெற்றிகரமாகச் செயல்படுத்துவதற்கு ஏற்ற விழிப்பு உணர்ச்சியை மக்களிடம் உருவாக்க, தகுந்த அறிவுரைகள் வழங்கிய பெருமை ருக்மிணி லட்சுமிபதிக்கே உண்டு!

ஒரு சமயம் சென்னைக்கு வருகை தந்த காந்தியடிகளைச் சந்தித்த ருக்மிணி லட்சுமிபதி அவருடைய கையெழுத்தைப் பெற முயன்றபோது காந்தியடிகள், 'என் கையெழுத்துக்குப் பதிலாக நீ எனக்கு என்ன தரப்போகிறாய்?' என வேடிக்கையாகக் கேட்டதற்கு, உடனே அவர் தனது கைகளிலிருந்த தங்க வளையல்களைக் கழற்றிக் காந்தியடிகளிடம் கொடுத்த பெருமை இவருக்கு உண்டு. அன்று முதல் அவர் தனது கரங்களில் தங்க வளையல்களை அணியாமல், சாதாரண வளையல்களையோ, சிற்சில சமயங்களில் வெறும் கையோடு மிக்க எளிமையான தோற்றத்திலேயே இருப்பார்.

தேசத் தொண்டு, பொதுநலன் இவை இரண்டிலுமே தனது வாழ்வைக் கழித்து வந்த சுதந்திரப் போராட்ட வீராங்கனை ருக்மிணிலட்சுமிபதி சிறிது காலம் உடல் நலமின்றி 1951-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 6-இல் சென்னையில் காலமானார். அப்போது அவருக்கு வயது 58.

---

**முதல் அட்டை:**

வெள்ளச் சேத அறிக்கையினை, மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்களிடம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்குதல்.

**இரண்டாம் அட்டை:**

சிவகங்கை இராமச்சந்திரனார்.

**நான்காம் அட்டை:**

மகாகவி பாரதியார், மூதறிஞர் இராஜாஜி பிறந்த நாள் நினைவாக அவர்களது திருவுருவப்படங்கள்.

**கல்வி**

• 'கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு'. இதனைச் சிரமேற்று அறிவொளி இயக்கங்கள் இதுவரை 178 மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன.

தற்போது நமது நாட்டின் சராசரி எழுத்தறிவு 52.11 சதவிகிதமாகும். எட்டாவது திட்டக் காலத்தில் எழுத்தறிவு இயக்கங்களின் மூலம் 350 மாவட்டங்களில் சராசரி எழுத்தறிவு விகிதத்தினை 70-வது சதவிகிதமாக உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இன்று ஆந்திரப்பிரதேசத்தில் 16 மாவட்டங்களிலும், தமிழ்நாட்டில் 12 மாவட்டங்களிலும், மேற்கு வங்காளத்தில் 11 மாவட்டங்களிலும், மகாராஷ்டிராவில் 10 மாவட்டங்களிலும், முழு எழுத்தறிவு இயக்கம் செயல்பட்டு வருகிறது.

டிசம்பர் 11 பிறந்தநாள் நினைவாக...



# மக்கள் கவிஞன் பாரதி

- பேரறிஞர் அண்ணா

**பா**ரதி பிறந்த இந்த நாடு-முரண்பாடுகள் செறிந்த களம், அகந்தையும், அடக்கமும்-கொடூரமும் அன்பும்-நாட்டிலே ஒருங்கே குடிகொண்டு இருந்தன. செயல்திறம் ததும்பிக் கொண்டு இருந்தது; அதே வேளையில், மக்களை மனம் குலையச் செய்து, செயல் அற்றவர்கள் ஆக்கும் அபத்தக் கற்பனைகளும் அளவு மீறி உலவின; பகட்டான கற்பனைகள் - பல்லாயிரக்கணக்கான ஊமை மக்கள் - அறிவு மயங்கி ஆழ்ந்த நிலை - அச்சமும் சூரத்தனமும் பக்கத்திலே பக்கத்திலே கொலுவிருந்த தன்மை - பக்தியும் பயமும் பாசறை கொண்டிருந்த காட்சி - அனைத்தின் உறைவிடமாகவும் திகழ்ந்தது நாடு.

பைரன், எட்மண்ட்பர்க்கு-ஆகியோர் இந்த நாட்டிலே அச்சமயத்தில்தான் கால் பாவினார்கள்-தங்கள் எழுத்தால், பேச்சால்! அவர்களை-அவர்களது எழுத்துகளை, பேச்சுகளை, வரவேற்க, நாட்டிலே இருந்தவை பாரதமும் பாகவதமும் தான்.

பைரன்-மிகச் சிறந்த ஆங்கிலக் கவிஞர்; காதற் கவிதைகள் தீட்டுவதில் வல்லவர்; கற்பனை வளம் மிக்கவர்.

எட்மண்ட் பர்க்கு-தலைசிறந்த சொல்லாற்றல் படைத்தவர். பிரிட்டன் நாட்டுப் பாராளுமன்ற விவாதங்களில் தம் நாவன்மையை நன்கு மிளிரச் செய்தவர். இருவருமே உலகப் புகழ் பெற்றவர்கள்.

அப்போது, துப்பாக்கியும் பீரங்கியும் முழங்கி, நாட்டு மக்களின் காதுகளிலே ரீங்காரம் செய்தன! முரண்பாடுகள் நிரம்பிய இந்த நிலப்பரப்பிலே அவற்றோடு கோவில் மணியோசைகள்-நகராக்கள்-கலந்து முழங்கிய முழக்கமும் ஓயவில்லை.

பாரதி தோன்றினார். ஆனால் நாட்டின் இயல்பிற்கு இணங்க வரலாறு ஆமை வேகத்தில்தான் நகர்ந்து கொண்டிருக்கிறது. வரலாற்றுப் பல்லக்கை விரைவான ஓட்டத்தில் செலுத்திடப் பலமாகத் தடிபோட்டு எழுப்ப வேண்டியிருந்தது. பாரதியின் சிறப்பு-அவர் அத்தகைய தடிபோட்டு எழுப்பும் பணியில் ஈடுபட்டதில்தான் இருக்கிறது. மக்களின் கவிஞராக மாறி, மகத்தான முறையில் அவர் அப் பணியைச் செய்தார்.

பாரதி வெறும் தேசியக் கவிஞர் அல்லர்; சீர்திருத்த வானில் மின்னிய விடி வெள்ளி அவர்!

அந்நியன் மீது அவருக்கு ஆத்திரம், நாடு அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற வேண்டும் என்று விரும்பினார் அவர். அது மட்டுமே அவரது இலட்சியமாக, தீர்க்கமான முடிவாக இருந்துவிடவில்லை. அதுதான் அவரது இலட்சியத்தின் தொடக்கம்.

அந்நிய ஆட்சியிலிருந்து விடுதலை பெறுவதுடன் நாட்டு மக்கள் தங்களைப் பிணைத்து இறுக்கும் தளைகள் அத்தனையையும் தகர்த்து எறிந்து, உண்மையான விடுதலை வீரர்களாக விளங்க வேண்டும் என்று விரும்பினார் அவர். உலக மக்களின் முன்னிலையில் அவர்கள் உன்னத உயர்வு பெற்றுத் திகழ வேண்டும் என்று அவாவினார். புதிய விழிப்புப் பெற்று, புதுமை ஆண்களாகவும் பெண்களாகவும் நாட்டு மக்கள் நடமாடும் காட்சியைக் காண ஆசைப்பட்டார்.

மூட நம்பிக்கை நிர்மூலம் ஆக்கப்பட வேண்டும் - அறிவியல் ஆக்கம் பெறுவதற்காக! சுருக்கமாகச் சொல்லப் போனால், ஒரு புரட்சிக்காரனாக மக்களின் கவிஞன் இயங்க வேண்டும்.

கொடுங்கோலனை வாழ்விக்க வந்த வானகத் தூதன் என்றும், வாழ்விக்க வந்தவனைக் கொடுங்கோலன் என்றும் மக்கள் எளிதாக நம்பி விடுவார்கள். ஆதலால் மக்கள் கவிஞனின் வேலை, தொல்லைமிக்கதாக ஆகிறது.

பாரதியார் அச்சமின்றிப் போராடினார். அவர் நடத்திய போராட்டம் முடியவில்லை. அதற்குள்ளாகவே அவர் மறைந்து விட்டார்.

**(பேரறிஞர் அண்ணா வானொலியில் 'People's Poet' என்னும் தலைப்பில் ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம்.)**

**5 .ஆம் பக்கத் தொடர்ச்சி**

சீர் செய்ய வேண்டும் என்று ஆணையிட்டார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள், தான் பயணம் செய்த பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் போர்வை, துண்டு, வேட்டி, சேலை ஆகியவற்றுடன் 2 கிலோ அரிசியையும் வழங்கினார். மேற்கண்ட கிராமங்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் மதியம் 1.30 மணியிலிருந்து ஆரம்பித்து, இரவு 8.30 மணி வரை பார்வையிட்டார்.


**திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில்...**

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 17.11.92 அன்று, திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்திற்குச் சென்று புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டார்.

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் உள்ள விக்கிரமசிங்கபுரத்திற்கு ஹெலிகாப்டரில் சென்று, அங்கு வெள்ளத்தால் உயிரிழந்த 6 குடும்பங்களைச் சேர்ந்த 25 நபர்களின் இல்லங்களுக்குச் சென்று அவர்களுக்கு ஆறுதல் கூறி, அரசுத் தரப்பில் அனைத்து உதவிகளும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப்படும் என உறுதி அளித்தார்.

விக்கிரமசிங்கபுரத்தில் வெள்ளத்தால் ஏற்பட்ட உடைப்புகளையும் நேரில் சென்று பார்வையிட்டார். பின்னர் புனித மேரி உயர்நிலைப் பள்ளி அருகில் வாய்க்காலில் ஏற்பட்டுள்ள உடைப்பையும், மண் அரிப்பையும் நேரில் பார்வையிட்டார். புனித மேரி உயர்நிலைப் பள்ளியைச் சேர்ந்த பாதிரியார்கள் மாண்புமிகு .முதல்வரிடம் ஒவ்வொரு ஆண்டும் மழைக் காலத்தில் அப்பள்ளியைச் சுற்றியுள்ள பகுதிகளில் மழை வெள்ளம் அதிக அளவில் தேங்கிவிடுவதாகவும், அதனால் சில சேதங்கள் ஏற்படுவதாகவும், அதனைத் தடுப்பதற்குத் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் வேண்டிக் கொண்டதற்கிணங்க, அப்பகுதிகளில் எதிர்காலத்தில் வெள்ளத்தால் பாதிப்பு ஏற்படாவண்ணம் எவ்வாறு தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கலாம் என்பதை மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் உயர் அதிகாரிகளுடன் மாண்புமிகு முதல்வர் அவர்கள் விசாரித்து, பின்பு அதற்கான பணிகளை விரைவில் மேற்கொள்ள வேண்டும் என ஆணையிட்டார்.

விக்கிரமசிங்கபுரத்தில் இருந்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் பனஞ்சாவடி, பள்ளிக்கால் பொதுக்குடி, எடைக்கால், கபாலிபாறை, பாப்பாக்குடி, அரிராம் நகர், லட்சுமிபுரம், முக்கூடல், அரியநாயகபுரம், அரசன் குளம், சங்கன்திரடு, நடுக்கல்லூர், சுத்தமல்லி, பேட்டை, திருநெல்வேலி, பாளையங்கோட்டை முதலான ஊர்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டு மக்களின் குறைகளை நேரில் கேட்டறிந்தார். மேலும், வழிநெடுகிலும் உள்ள எல்லாக் கிராமங்களிலும் பல இடங்களில் நிறுத்தி பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு நிவாரண உதவிகளை அளித்துக் கொண்டே சென்றார்.



விக்கிரமசிங்கபுரம், எடைக்கால், முக்கூடல், சங்கன்திரடு, பாளையங்கோட்டை ஆகிய இடங்களில் மாண்புமிகு முதல்வர் அவர்கள், பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கி,

அவர்களுக்கு ஆறுதல் அளித்துப் பேசினார். மாண்புமிகு அமைச்சர்கள் திரு. எஸ்.டி. சோமசுந்தரம், திரு. எஸ்.முத்து சாமி, திரு. கே.ஏ. செங்கோட்டையன், திரு. எஸ். கண்ணப்பன், திரு. அழகு திருநாவுக்கரசு, திரு. டி.எம். செல்வகணபதி, திரு. நாகூர் மீரான் ஆகியோர் மாண்புமிகு முதல்வரு டன் சென்று ஏற்பாடுகளைக் கவனித் தனர்.

பாளையங்கோட்டையில் மனோன் மணீயம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் திருமதி

பாக, பொதுப்பணித்துறைச் செய லாளர் திரு. வி. சுந்தரம், வருவாய்த் துறை நிர்வாக ஆணையாளர், திரு. சி.என். இராமதாஸ், வேளாண் மைத் துறை சிறப்புச் செயலர், திரு. ஆர்.சி. பண்டா மற்றும் பொதுப் பணித்துறை தலைமைப் பொறியாளர் திரு. ஆர்.என். கிருஷ்ணன் ஆகிய நால்வரையும் நேரடியாக ஆத்தூர் சென்று இந்தப் பணி குறித்து உடனடியாக நடவடிக் கைகள் எடுக்கவேண்டும் என்று பணித்தார்.

மேலும், அப்பகுதிகளில் வெள்

செயலாளர், திரு. டி.வி. வெங்கட் ராமன், வருவாய் நிர்வாக ஆணை யாளர், திரு. சி.என். ராமதாஸ், பொதுப்பணித்துறைச் செயலர், திரு. வி. சுந்தரம், வேளாண்மைத் துறைச் சிறப்புச் செயலாளர், திரு. ஆர்.சி. பண்டா, பொதுப்பணித் துறைத் தலைமைப் பொறியாளர் திரு. ஆர்.என். கிருஷ்ணன் ஆகி யோர் கலந்து கொண்டனர்.

அதைத் தொடர்ந்து தமிழ் நாட்டில் புயல் வெள்ளச் சேதத் துக்கு ரூ.500 கோடி நிதி உதவி தேவை எனக் கோரி, மாண்புமிகு



வி. வசந்தி தேவி அவர்கள், பல் கலைக்கழகத்தின் சார்பாக முதலமைச் சரின் வெள்ள நிவாரண நிதிக்கு ஐம்பதாயிரம் ரூபாய்க்கான காசோலையை மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் நேரில் வழங்கினார்.

*16.11.1992* **அன்று** சிதம்பரனார் மாவட்டம் முக்காணி அருகிலுள்ள ஆத்தூர் பாலம் உடைந்துள்ளதைப் பார்வையிட்ட பிறகு இந்தப் பாலம் ஒரு வார காலத்திற்குள் போக்கு வரத்துக்காகச் சீர் செய்யப்படும் என்று அப்பகுதி மக்களுக்கு உறுதி அளித்து இருந்தார். அதன் தொடர்

ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசு வழங்கும் உதவிகள் கிடைத்து விட்டனவா என்பதையும், அவர் களின் மறுவாழ்விற்குத் தேவைப் படும் உதவிகள் என்ன என்பதையும் கேட்டறிந்து வரவேண்டும் என்று இந்தக் குழுவை அங்கே அனுப் பினார்.

### அலுவலர்களுடன் ஆலோசனை

தூத்துக்குடியில் உயர் அலுவலர் களின் கூட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூட்டி புயல்-வெள்ளச் சேதங்கள் பற்றி ஆலோ சனை நடத்தினார். தலைமைச்

பிரதமர் அவர்களுக்கு டெலக்ஸ் செய்தி ஒன்றை மாண்புமிகு முதல்வர் அனுப்பினார். அதில் அவர் கூறியிருந்ததாவது:

'தமிழ்நாட்டில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை விரிவாக நான் பார்த்துவிட்டு, பாதிக்கப்பட்ட மக்களையும் நேரில் சந்தித்த பிறகு, வெள்ளச் சேத அளவு குறித்து அதிகாரிகளிடமும் விவாதம் நடத் தினேன்.

புயல் மற்றும் கடும் மழையினால் தமிழ்நாட்டில் ஏற்பட்ட சேதம் ரூ.500 கோடி என்று மதிப்பிடப்



பட்டுள்ளது. அதிக அளவில் மத்திய அரசாங்கம் நிதி உதவி அளிக்க வேண்டிய தேவை உள்ள அளவுக்குச் சூழ்நிலை மிகவும் மோசமாக உள்ளது என்பதை நீங்கள் ஒத்துக் கொள்வீர்கள். உடனடியாகத் தமிழக அரசு மத்திய அரசுக்கு விரிவான ஒரு அறிக்கையை அனுப்பும். அரசு கோரியுள்ள நிதி உதவியை விரைவில் தமிழக அரசுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்'.

**கன்னியாகுமரி மாவட்டத்தில்**

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் மூன்றாம் நாள் *(18.11.1992)* புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிடுவதற்காக ஹெலிகாப்டர் மூலம் தூத்துக்குடியிலிருந்து கன்னியாகுமரி மாவட்டத்திற்குச் சென்றார்.

தூத்துக்குடியில் இருந்து ஹெலிகாப்டரில் புறப்பட்டு, சிதம்பரனார் மாவட்டத்தில் புயல் வெள்ளத்தால் மிகவும் பாதிக்கப்பட்ட ஆத்தூர், புன்னக்காயல், உமரிக்காடு, ஏரால், மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளைப் பார்வையிட்டார்.

பின்னர் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஹெலிகாப்டரில் கன்னியாகுமரி, குளச்சல், தக்கலை, குலசேகரம், கிள்ளியூர், பூதப்பாண்டி, நாகர்கோயில், விளவங்காடு, திருவட்டாறு, குழித்துறை ஆகிய ஊர்களில் தாழ்வாகப் பறந்து வெள்ளச் சேதத்தைப் பார்வையிட்டார்.

நாகர்கோயிலில் ஆயுதப்படை மைதானத்தில் இறங்கி, அங்குள்ள ஆயிரக்கணக்கான மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கி, மக்களிடம் பேசினார். மக்களின் துயரத்தைத் துடைக்க எல்லா வழிகளிலும் இந்த அரசு தயாராக உள்ளது என்றும், நிவாரணப் பணிகள் வேகமாகச் செயல்படுத்துகிறது என்றும், நிவாரணப் பணிகளைத் தலையாயக் கடமையாக மேற்கொண்டு, உடனுக்குடன் முடிந்த உதவிகளைச் செய்து வருகிறோம் என்றும், வெள்ளச் சேதப் பகுதிகளைத் தானே நேரில் பார்த்து, அரசு அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தி, வெள்ளச் சேதத்தின் மதிப்பீடு ரூ.500 கோடியாகும் என்று கணக்கிட்டு, வெள்ள நிவாரணப் பணிகளை மேற்கொள்ள ரூ.500 கோடியைத் தமிழகத்திற்குச் சிறப்பு நிவாரண உதவியாக உடன் வழங்க வேண்டும் என்று மாண்புமிகு பாரதப் பிரதமருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும், விரைவிலேயே மத்திய அரசிடமிருந்து நிதி உதவியைப் பெறுவதற்கு இந்த அரசு முயலும் என்றும், உடனடியாக மக்களுக்கு நிவாரண உதவிகள் போய்ச் சேரவேண்டும் என்ற காரணத்தால் தான், ஏற்கெனவே ரூ.10 கோடியை இந்த அரசு தனது நிதியிலிருந்து ஒதுக்கி இருக்கிறது என்றும், இந்த அரசிற்கு மக்களின் துயரைத் துடைப்பதைத் தவிர வேறு பணி ஏதும் முக்கியம் இல்லை என்றும் குறிப்பிட்டார்.

பின்னர், நாகர்கோயிலை அடுத்துள்ள கோதை கிராமத்துக்குச் சாலை வழியே சென்று பழையாற்றை ஒட்டியுள்ள சலவைத் தொழிலாளர் குடியிருப்பில் ஏற்பட்டுள்ள சேதங்களை, சேறும் சகதியிலும் நடந்து சென்று பல இடங்களைப் பார்வையிட்டார். அங்குள்ள பெண்களிடம் பரிவுடன் குறைகளைக் கேட்டு, மீண்டும் அவர்கள் குடியிருப்பிற்கு இதுபோல் வெள்ளப்பாதிப்பு ஏற்படாவண்ணம் தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் மற்ற உயர் அதிகாரிகளுக்கும் ஆணையிட்டார். அதன் விவரத்தையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அப்பெண்களிடம் தெரிவித்தார்.

அப்பகுதியில் உள்ள 72 வயது முதியவர் இதுபோன்ற வெள்ளப் பெருக்கு இப்பகுதியில் தன் வாழ்நாளிலேயே கண்டதில்லை என்று மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் தெரிவித்தார். குமரேசன் (ஒன்பதாம் வகுப்பு), அய்யப்பன் (பத்தாம்

வகுப்பு) ஆகிய இரண்டு மாண வர்கள் தங்களுடைய புத்தகங்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப் பட்டதாக மாண்புமிகு முதல்வரிடம் கூறினார்கள். உடனே அவர்களுக் குத் தேவையான நோட்டு, புத்தகங் களை வழங்க ஏற்பாடுகளைச் செய் தார். மேலும் தலா 50 ரூபாயை அவர்களுக்கு வழங்கினார். கோதை கிராமத்தில் பள்ளிக்கு அருகில் மக்களுக்கு நிவாரண உதவிகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கோட்டார், எடலக்குடி, கரிய மாணிக்கபுரம், ஆசிரமம், வழுக்குப் பாறை, கொட்டாரம், பழநித் தோட்டம், கன்னியாகுமரி, எலங்கா மணிபுரம், ஒசரவலை, வந்தானம் புதூர், அரசன்குளம், பரமார்த்த லிங்கபுரம், அஞ்சு கிராமம், கிருஷ்ணம்புதூர், மொரப்பனார் பாலம், பாளையங்கோட்டை, வசவப்புரம், முரப்பாடு, செல்லக் காடு, தெய்வச் செயல்புரம், மங்க கிரி, மறவன்மடம் ஆகிய இடங் களில் வெள்ளத்தால் பாதிக்கப் பட்ட ஆயிரக்கணக்கான மக்களுக்கு நடு இரவுவரை நிவாரண உதவி களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கிக் கொண்டே 19.11.1992 அதிகாலை 1.00 மணி அளவில் தூத்துக்குடிக்கு வந்தடைந்தார்.

தென் மாவட்டங்களில் மூன்று நாள் சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள், தூத்துக்குடி விருந்தினர் மாளிகையிலிருந்து வாகைகுளம் விமான நிலையத்திற்கு வரும் வழி யில் உள்ள கிராமங்களில் ஆங் காங்கே மக்களின் குறைகளைக் கேட்டறிந்தார். சிலுக்குப்பட்டி என்னும் கிராமத்தில் பல ஆண்டு களாகக் குடிநீர்ப் பிரச்சினை உள் ளது என்பதனைக் கேட்டறிந்து உடன் மாவட்ட ஆட்சித் தலை வரிடம் மேற்கண்ட கிராமத்திற்குக் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க ஆவன செய்யும்படி ஆணை யிட்டார்.

மேலும், மூன்று குழந்தைகளுக் குப் பெயர் சூட்டி பண அன்பளிப்பு தலா 100 ரூபாய் வழங்கினார். பிறகு, தனி விமானம் மூலம் தூத்துக் குடியிலிருந்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் 19.11.1992 அன்று மாலை சென்னை வந்து சேர்ந்தார்.

**பிரதமருடன் தொலைபேசியில் பேச்சு**

வெள்ளப் பகுதிகளைச் சுற்றிப் பார்த்துவிட்டு முதல்வர் 19.11.92 அன்று சென்னை திரும்பினார். உடனே, மாண்புமிகு பிரதமர் திரு. நரசிம்மராவ் அவர்களுடன் அவசர மாகத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார். அப்போது அவர் தமிழ்நாட்டில் வீசிய புயலா லும் வெள்ளத்தாலும் இதுவரை வரலாறு காணாத சேதம் ஏற்பட்டுள்ளது. வெள்ள நிவார ணப் பணிகளுக்காகத் தமிழக அரசுக் குச் சிறப்பு உதவித் திட்டத்தின் கீழ், ரூ.500 கோடி கொடுத்து உதவும் படி மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

**பிரதமருக்கு அழைப்பு**

''புயலால் - வெள்ளத்தால் தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள சேதங் களைப்பார்வையிடத்தமிழ்நாட்டிற்கு வாருங்கள்'' என்று மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அழைப்பு விடுத் தார். அதற்கு மாண்புமிகு பிரதமர் அவர்கள் செனகல் நாட்டிற்கு சென்று வந்த பிறகு, தமிழ்நாட்டிற்கு வருவதாக மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் தெரிவித்தார்.

சென்னை விமான நிலையத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் செய்தியாளர்களிடையே பேசும் போது:

'சேத விவரங்கள் பற்றி முழு அளவில் அறிக்கை தயாரிக்கும்படி தமிழக அரசு தலைமைச் செயலா ரிடம் தெரிவித்துள்ளேன். தமிழக அரசு மத்திய அரசிடம் முறையாகக் கோரிக்கை வைக்கும் முன்னர்





★ மானமும் அறிவும் மனிதனுக்கு அழகு.

★ மூட நம்பிக்கையும், குருட்டுப் பழக்கமும் சமூகத்தின் முதல் பகைகள்.

வெள்ளச் சேதங்களைப் பார்வையிட மத்திய அரசின் சார்பில் பார்வையாளர்களை அனுப்பி வைத்ததற்காக மத்திய அரசுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்' என்று கூறினார்.

மூலம் தூத்துக்குடி சென்றார்கள்.

ஸ்ரீவைகுண்டம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் வெள்ளத்தால் மூழ்கிக்கிடக்கும் நெல் பயிர்கள், சாய்ந்து கிடக்கும் வாழைத் தோப்புகள் ஆகியவற்றை ஹெலிகாப்டரில் இருந்தபடியே பார்த்தனர். தாமிரபரணி ஆற்றோரப் பகுதிகளிலும் சேத விவரங்களைப் பார்த்தனர். அவர்களுடன் வருவாய்த் துறை நிர்வாக ஆணையாளர் திரு. சி.என். ராமதாஸ் அவர்களும் சென்றார்.

பின்பு மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. பல்ராம் ஜாக்கர் உதவிகளை அளிக்கும்' என்று கூறினார்.

**பிரதமருடன் சந்திப்பு**

மாண்புமிகு முதல்வர் அவர்கள் 23.11.92 அன்று காலை 10 மணிக்கு மாண்புமிகு பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்களை, அவருடைய இல்லத்தில் சந்தித்துப் பேசினார்.

வெள்ள நிவாரணம் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தமிழக மக்களின் மறுவாழ்வுக்காக 530 கோடியே 4 இலட்சம் ரூபாய் மத்திய உதவிகேட்டு தமிழக அரசு தயாரித்துள்ள மனுவைக் கொடுத்தார்.



**மத்திய அமைச்சர்கள் வருகை**

வெள்ளச் சேதங்களைப் பார்வையிட மத்திய அமைச்சர்கள் திரு வாளர்கள் பல்ராம் ஜாக்கர், அருணாசலம், முள்ளப்பள்ளி ராமசந்திரன், குரியன் ஆகியோர் 16.11.92 அன்று மாலை சென்னை வந்தனர்.

அவர்கள் 17.11.92 அன்று சென்னையிலிருந்து ஹெலிகாப்டர் அவர்கள் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

'தமிழ்நாட்டில் புயல் வெள்ளத்தினால் சேதம் அடைந்த பகுதிகளை நேரில் பார்த்தோம். பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது மிகவும் வேதனை அளிப்பதாக உள்ளது. உயர்மட்ட அதிகாரிகளுடன் இது பற்றிப் பேசினோம். வெள்ளச் சேத விவரங்கள் பற்றிய முழு தகவல்களைப் பிரதமரிடம் தெரிவிப்போம். இது பற்றிய அறிக்கையையும் பிரதமரிடம் கொடுப்போம். அதன் பிறகு மத்திய அரசு தேவையான

தமிழ்நாட்டில் புயல் வெள்ளத்தால் ஏற்பட்ட சேத விவரங்கள் அடங்கிய 'வீடியோ கேசட்' மற்றும் போட்டோ ஆல்பத்தையும் மாண்புமிகு பிரதமர் அவர்களிடம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்.

பல மாவட்டங்களில் மோசமான அழிவுகளை ஏற்படுத்திய புயல் வரலாறு காணாத அளவுக்கு இருந்தது என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் விளக்கினார்.

சாலைகள், பாலங்கள், நீர்ப் பாசன ஆதாரங்கள், பயிர்கள்,



சொத்துக்கள் இந்த புயலால் பெரு மளவில் சேதம் அடைந்துள்ளன. அநேக உயிர்களுக்கு இழப்பு ஏற் பட்டுள்ளது.

230 பேர்கள் உயிர் இழந்துள் ளனர். ஏறத்தாழ 2 இலட்சம் குடிசைகள் பாதிக்கப்பட்டு, அழிந் துள்ளன. 51 ஆயிரம் எக்டேர் நிலப்பரப்பில் உள்ள பயிர்கள் முழு மையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. ஏராளமான கால்நடைகள் உயிர் இழந்துள்ளன என்றும், ஏராளமான சாலைகள், நீர்ப்பாசனக் குளங் களில் உடைப்பு ஏற்பட்டுள்ளது. ஏராளமான பாலங்கள் அடித்துச் செல்லப்பட்டுள்ளன என்றும் மாண்புமிகு பிரதமர் அவர்களிடம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்தார்.

ஏறத்தாழ 2 ஆயிரம் மீன் பிடி படகுகள் சேதம் அடைந்துள்ளன. மாநிலத்தை மீண்டும் இயல்பான நிலைக்குக் கொண்டு வருவதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்கள் மத்திய அரசாங்கத்திடம் இருந்து 530 கோடியே 4 இலட்சம் ரூபாய் விசேஷ நிதி உதவி கேட்டார்.

வெள்ள சேதங்களை பார்வை யிட தமிழ்நாட்டுக்கு வரவேண்டும் என்று பிரதமருக்கு ஏற்கெனவே விடுத்த அழைப்பை மீண்டும் நேரில் விடுத்தார்.

விரைவில் தமிழ்நாட்டுக்குச் சுற்றுப் பயணம் வருவேன் என்று மாண்புமிகு பிரதமர் அவர்கள் பதில் அளித்தார். மேலும், சிறப்பு நிதி உதவி கேட்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள் விடுத்த கோரிக்கை அனுதாபத்துடன் பரிசீலிக்கப்படும் என்று மாண்புமிகு பிரதமர் அவர்கள் உறுதி அளித்தார்.

இந்தச் சந்திப்பு 15 நிமிடங்கள் நடந்தது.

**பிரதமர் உதவி**

இந்தச் சந்திப்பைத் தொடர்ந்து, தமிழ்நாட்டில் வெள்ளத்தால் பாதிக் கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிக்க உடனடியாக ரூ.21 கோடியே 90 இலட்சம் வழங்க மாண்புமிகு பிரதமர் அவர்கள் உத்தரவிட்டார்.

அத்துடன் 1993-94-ஆம் ஆண்டுக்கான மத்திய நிவாரண நிதியில் இருந்து மேலும் 2 தவணை தொகையை உடனடியாக வழங்கும் படியும் மாண்புமிகு பிரதமர் உத்தரவிட்டார்.

**மேலும் ரூ.35 கோடி**

வெள்ள நிவாரணப் பணி களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்கெனவே ரூ.10 கோடி வழங்கினார். பிறகு மேற் கொண்டு ரூ.35 கோடி அனுமதித்து உத்தரவிட்டார். சென்னை நகரிலும் மாவட்டங்களிலும் பழுதடைந்துள்ள சாலைகளைச் சீர்செய்தல், பொது கட்டடங்கள் மற்றும் நீர்ப்பாசனத் திட்ட வேலைகளைச் சீர்செய்தல், வெள்ளப் பகுதிகளில் மீண்டும் விவசாய வேலைகளைத் தொடங்கு தல் ஆகிய பணிகளுக்கு இந்தத் தொகை செலவிடப்படும். இந்தத் தொகையையும் சேர்த்து, இதுவரை வெள்ள நிவாரணப் பணிகளுக்காக மாண்புமிகு முதல்வர் ரூ.45 கோடி வழங்கினார்.



# வெள்ளத்தில் சிக்கிய பொதுமக்களின் உயிரைக் காப்பாற்றியவர்களுக்கு முதல்வர் அன்பளிப்பு!

13.11.1992 அன்று சிதம்பரனார் மாவட்டத்தில், தாமிரபரணி ஆறு வெள்ளப் பெருக்கெடுத்து ஓடியதாலும், வீசிய புயல் காரணமாகக் கடல் கொந்தளித்து ஆற்று நீரைக் கடல் உள் வாங்காத காரணத்தாலும், புன்னக்காயல் கிராமம் வெள்ளத்தால் சூழப்பட்டது.

அப்போது ஆறுமுகநேரி காவல் நிலையத்தைச் சேர்ந்த உதவி ஆய்வாளர் திரு. ஸ்டீபன், தலைமைக் காவலர் திரு. முத்துசாமி, காவலர்கள் திரு. நெல்சன், திரு. மாசானம் ஆகியோரைக் கொண்ட மீட்புப் பணிக் குழு ஒன்று, உணவு மற்றும் மருந்துப்பொருட்களை எடுத்துக் கொண்டு புன்னக்காயல் கிராமத்திற்குச் சென்றது. திரு. சேகர், திரு. செந்தில்குமார் என்ற இரு படகோட்டிகள் விடா முயற்சியுடன் படகினைச் செலுத்தி 6 முறை அக்கிராமத்திற்குச் சென்று வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்க உதவியாக இருந்தனர்.

ஒரு சமயத்தில் படகு கவிழ்ந்து சேதமடைந்த நிலையிலும் தங்கள் பணியில் தொடர்ந்து ஈடுபட்டுப் படகைச் செலுத்தினர். இந்தக் குழுவில் திரு. டேவிட்வின்செண்ட் என்கிற தீயணைப்பு அலுவலரும், திரு. மீனாட்சி சுந்தரம் என்கிற முன்னணித் தீயணைப்பாளரும் இடம் பெற்று வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்குவதற்கு உறுதுணையாக இருந்தார்கள்.

16.11.1992 அன்று சிதம்பரனார் மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நிவாரண உதவிகளை வழங்கிய மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களுக்கு மேற்கண்ட செய்தி தெரிவிக்கப்பட்டது. மாண்புமிகு முதல்வர் அவர்கள், தம் இன்னுயிரையும் துச்சம் என மதித்து வெள்ளத்தில் சிக்குண்ட பொதுமக்களின் உயிரைக் காப்பாற்றிய இக்குழுவினரின் வீரத்தையும், கடமையுணர்வினையும் பாராட்டி, காவல்துறை மற்றும் தீயணைப்புத்துறை அலுவலர்களுக்கும், அவர்களுக்கு உதவியாக இருந்த படகோட்டிகள் இருவருக்கும் தலா ரூ.10,000 தனது சொந்த நிதியிலிருந்து வழங்குவதாக அறிவித்தார். உடனடியாக அப்போது பணியில் இருந்த திரு. ஸ்டீபன், உதவி ஆய்வாளரை நேரில் அழைத்து, அந்த இடத்திலேயே அவருக்கு ரூ.10,000 தனது சொந்த நிதியிலிருந்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்.

மேலும், இந்தத் தீரமிகு செயல் புரிந்த குழுவில் இடம் பெற்றிருந்த 3 காவலர்கள், 2 தீயணைப்புப்படை வீரர்கள் மற்றும் 2 படகோட்டிகள் ஆகிய 7 பேரையும் 21.11.1992 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் தனது இல்லத்திற்கு வரவழைத்து அவர்களை வெகுவாகப் பாராட்டி, ஒவ்வொருவருக்கும் தலா ரூ.10,000-த்தைத் தனது சொந்த நிதியிலிருந்து வழங்கினார். இந்த நிகழ்ச்சியின்போது, காவல்துறை கூடுதல் இயக்குநர் திரு. வால்டர் தேவாரம் அவர்கள் உடன் இருந்தார்.



**கன்னியாகுமரி மாவட்டத்தில்**

நாகர்கோயில் வழியே சுசீந்தரம் சென்று அங்கு சாலையில் ஏற்பட்ட சேதங்களைப் பார்வையிட்டு, மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கினார். பரமார்த்த லிங்கம் என்கின்ற முத்து என்ற இளைஞர் அப்பகுதியில் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்ட பல பேரைக் காப்பாற்றினார் என்பதைக் கேள்வியுற்ற மாண்புமிகு முதல்வர் அவர்கள் தனது சொந்த நிதியிலிருந்து அவருக்கு 10,000 ரூபாயை வழங்கி அவரது வீரத்தையும், நல் உணர்வையும் பாராட்டினார். மேலும், அவருக்கு அரசு அலுவலகத்தில் கடைநிலை ஊழியர் பதவி வழங்க வேண்டும் என்று ஆணையிட்டார்.

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு முதல்வர் உதவி

**மா**ண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 16.11.'92 அன்று வ.உ.சிதம்பரனார் மாவட்டம், தூத்துக்குடி அருகிலுள்ள திரேஸ்புரம் பகுதியில் புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கடலோரப் பகுதிகளில் மீனவர்களின் பல வள்ளங்களும், கட்டுமரங்களும், பெருமளவு சேதமடைந்துள்ளதைப் பார்வையிட்டார். பாதிக்கப்பட்ட மீனவர்களுக்குப் புதிய வள்ளங்களைக் கட்டுவதற்கும், சேதம் அடைந்த வள்ளங்களை மீண்டும் புதுப்பிப்பதற்கும், மீன்பிடி வலைகள் மற்றும் துடுப்புகள் ஆகியவைகளை மீனவர்களுக்குத் தந்து உதவ வேண்டும் என்பதை மனதில் கொண்டு புதியதோர் திட்டத்தை அந்த இடத்திலேயே மீனவர்கள் முன்பாக அறிவித்தார்.

அத்திட்டத்தின்படி புதிய வள்ளங்கள், கட்டுமரங்கள் கட்டுவதற்கும், சேதம் அடைந்த வள்ளங்களைப் புதுப்பிப்பதற்கும் ஆகும் செலவில் 50 சதவிகிதம் அரசு மானியமாகவும், 50 சதவிகிதம் வங்கிக் கடனாகவும் அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று அங்கேயே உத்தரவிட்டார். அதனடிப்படையில் புயலால் பாதிக்கப்பட்ட வ.உ.சிதம்பரனார், இராமநாதபுரம், கன்னியாகுமரி, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் மீனவர்களுக்கு ஏற்பட்ட சேதம் பற்றி உடனடியாக ஆய்வு செய்யப்பட்டது. அந்தப் பகுதிகளில் இதுவரையில் 1920 வள்ளங்கள் முழுமையாகவும், 444 வள்ளங்கள் பகுதியாகவும், 1,522 கட்டுமரங்கள் முழுமையாகவும் தொழில் செய்ய முடியாத அளவுக்குப் பாதிக்கப்பட்டுள்ளன. இதைத்தவிர சிலருடைய வீடுகள், மீன்பிடி வலைகள், துடுப்புகள் ஆகியவைகளும் சேதம் அடைந்துள்ளன.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் மேற்கண்ட அரசு உத்தரவின்படி 8.01 கோடி ரூபாய் மீனவர்களுக்கு நிவாரணத் தொகையாக வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த நிவாரணத் தொகை உடனடியாக மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு வழங்கப்படும்.

இதைத்தவிர, சேமிப்பு நிவாரணத் தொகையாக ரூ.45-ஐ மீனவர்கள் ஒவ்வொரு மாதமும் 8 மாதங்களுக்குச் செலுத்தி வருகிறார்கள். இதற்குச் சமமான தொகையை மாநில அரசும், மைய அரசும் செலுத்தி, இம்மீனவர்களுக்கு மீன்பிடிப்பு இல்லாத 4 மாதங்களுக்கு மாதம் ரூ.270 வீதம் நிவாரணமாகத் திருப்பித்தரப்படும். இத்திட்டத்தின்கீழ் அனைத்துக் கடலோர மாவட்டங்களிலும் இதுவரையில் 82,645 மீனவர்கள் சேர்ந்துள்ளனர். இதனடிப்படையில் மீனவர்களுக்குச் சேமிப்பு நிவாரணமாக வழங்க மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 6.13 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து ஆணையிட்டுள்ளார். இந்தச் சேமிப்பு நிவாரணத் தொகையும் உடனடியாக மீனவர்களுக்கு வழங்கப்படும். இதுவரையில் எந்த அரசும் இந்த அளவுக்கு மீனவர்களுக்கு உதவிகள் செய்ததில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!




கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள், வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்.

தமிழரசு



பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23

